**கவனிக்க.-** *2008.01.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1586 - 2009 ජනවාරි 23 වැනි සිකුරාදා - 2009.01.23

*1586 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 106 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 106 |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 106 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | 114 |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 120 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, சனவரி மாதம் 30 ஆந் திகதி பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, சனவரி மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2009 இன் இல. 59

டீ/ஆர்எவ்/824/என்வை/01/08.

**இலங்கை கடற்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற பதவியுயர்வு

2006 ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து வைத்திய லெப்டினனட் கொமாண்டர் (வ) ஆக:

வைத்திய லெப்டினன்ட் அருண ஹந்தி சஞ்ஜீவ சந்திரஜித் த சில்வா - என்ஆர்எம் 1326, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2008, ஒற்றோபர் 08.

1-642

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2009 இன் இல. 60

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:

திரு. பியசேன ரணசிங்க அவர்கள் 2008, யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை சமூக அடிப்படையில் அமைந்த சீர்திருத்த ஆணையாளராக.

1-634

2009 இன் இல. 61

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:

றியர் அட்மிரல் எஸ். பி. வீரசேக்கர, ஆர்டப்பீ, யூஎஸ்பீ, என்டிசீ, பீஎஸ்சீ அவர்கள் 2008, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக.

1-633

# அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ. பீ. 277/40

**(188 ஆம் அத்தியாயமான) புராதன பொருட்கள் கட்டளைச் சட்டம்**

19 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

இந்த அறிவித்தலுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்குப் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக வெளிப்படுத்தி (188 ஆம் அத்தியாயமான) புராதன பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்குவதற்கு முன்னப்படுகிறது என கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமை அமைச்சர் மஹிந்த யாபா அபேவர்தன ஆகிய நான் இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

மேற்கூறப்பட்ட கட்டளை ஆக்கப்படுவதற்கான ஆட்சேபனை 2009.02.07 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கொழும்பு, தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அத்தகைய ஆட்சேபனை/ஆட்சேபனைகள் ஒவ்வொன்றும் எழுத்திலிருத்தல் வேண்டும் என்பதுடன் எந்த ஏதுக்களின் மீது ஆட்சேபனை/ஆட்சேபனைகள் செய்யப்படுகின்றதோ/செய்யப்படுகின்றனவோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

மஹிந்த யாபா அபேவர்தன.
கலாசார அலுவல்கள் மற்றும்
தேசிய மரபுரிமை அமைச்சர்.

கொழும்பு,
2008.12.22.

**வெளிப்படுத்தப்படவுள்ள பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்களின் நிரல்**

கிழக்கு மாகாணத்தில், கடவத் சத்தர பிரதேச செயலாளர் பிரிவில் திருகோணமலை கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள, வடக்கில் டொக்யாட் வீதியையும், கிழக்கில் வன்னியார் ஒழுங்கையையும் (வன்னிகர் வீதி), தெற்கில் நெல்சன் சினிமா தியேட்டரையும், மேற்கில் கிறீன் வீதியையும் எல்லைகளாகக் கொண்டமைந்த நான்கு புராதன அரச மரங்களை உள்ளடக்கிய பிரதேசம்.

1-546

---

ச.வ.பீ./277/40.

**(188 ஆம் அத்தியாயம்) புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டம்**

18 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(188 ஆம் அத்தியாயமான) புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமை அமைச்சர் மஹிந்த யாபா அபேவர்தன ஆகிய நான், இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்கு "பாதுகாக் கப்பட்ட நினைவுச் சின்னங்களாக" இக்கட்டளையின் மூலம் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் தொடர்பில் 19 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 2008.10.24 ஆந் திகதிய 1573 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

மஹிந்த யாப்பா அபேவர்தன,
கலாசார அலுவல்கள் மற்றும்
தேசிய மரபுரிமை அமைச்சர்.

கொழும்பு,
2008.12.22.

**வெளிப்படுத்தப்படவுள்ள பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களின் நிரல்**

**மொணறாகலை மாவட்டம் :**

1. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் பிபிலை பிரதேச செயலாளர் பிரிவில், பிபிலை கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள வளவ்வத்தை எனப்படும் இடத்திலுள்ள பிபிலை வளவு எனப்படும் புராதனக் கட்டடம்.

2. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் பிபிலை பிரதேச செயலாளர் பிரிவில், 101/E என்ற இலக்கம் கொண்ட மாறத்தமுல்லை கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள நாகல ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான மலைக் கல்வெட்டுகள் இரண்டும் பிக்குகள் தங்கும் புராதன இல்லமும்.

3. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் பிபிலை பிரதேச செயலாளர் பிரிவில், கொக்குனேவ கிராமத்தில் அமைந்துள்ள கொக்குனேவ புராதன விகாரை பூமிக்குச் சொந்தமான டெம்பிற்ற விகாரை.

4. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் பிபிலை பிரதேச செயலாளர் பிரிவில், 103/பீ என்ற இலக்கம் கொண்ட கரண்டுகல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள கரண்டுகல அல்லது யஹம்பான எனப்படும் இடத்திலுள்ள தொல்பொருட்கள் சான்றுள்ள சிதைவுகள்.

5. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் பிபிலை பிரதேச செயலாளர் பிரிவில், 101/ஏ என்ற இலக்கம் கொண்ட பிட்டகும்புற கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள பிட்டகும்புறகம விலெத்திகொட விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன புத்தர் திருவுருத்தலமும் புத்த பிக்குகள் தங்கும் இல்லமும்.

6. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் பிபிலை பிரதேச செயலாளர் பிரிவில், பெந்தியாவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள கம்ஹத்தாமுல்லை புராதன விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன தாகபையும் கட்டடச் சிதைவுகளும்.

7. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் பிபிலை பிரதேச செயலாளர் பிரிவில், மல்லேஹெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள மல்லேஹெவ கொட்டசரபியங்கல ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன புத்த பிக்குகள் தங்கும் இல்லமும், புராதன கிணறும், டெம்பிற்ற விகாரையும், புராதன தாகபை, சிதைந்த கட்டடமும்.

8. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் பிபிலை பிரதேச செயலாளர் பிரிவில், புலுப்பிட்டிய கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள புலுப்பிட்டிய ஹமணவ புராதன விகாரை பூமிக்குச் சொந்தமான சிதைந்த கட்டடமும் தாகபையும்.

9. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் மொணறாகலை பிரதேச செயலாளர் பிரிவில், குமாரவத்தை எனப்படும் கிராமத்தில் அமைந்துள்ள சீதா கந்த ஆரண்ய சேனாசன பூமிக்குச் சொந்தமான கல்வெட்டுக்களுடன் கூடிய நீர்வடி வெட்டப்பட்ட கற்குகைகளும் புராதன கட்டட சிதைவுகளுள்ள இடமும்.

10. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர் பிரிவில், லோல்லேஹெல கிராமத்தைச் சேர்ந்த லோல்லேஹெல குன்றின் அடியில் அமைந்துள்ள நீர்வடி வெட்டப்பட்ட கற்குகைகள்.

11. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர் பிரிவில், கொட்டியாகொட கிராமத்தில் அமைந்துள்ள கொட்டியாகொட புராதன விகாரை பூமிக்குச் சொந்தமான நீர்வடி வெட்டப்பட்ட கற்குகைகள்.

12. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவில், நாமல் ஓயா குடியேற்றத் திட்ட கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள தெலிவ தேர

புத்தாபய ஆராம பூமிக்குச் சொந்தமான நீர்வடி வெட்டப்பட்ட இரு கற்குகைகள், மலை எழுத்துக்கள், குளம்.

13. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவில், 104 ஆம் இலக்கம் கொண்ட முல்லேகம கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள முல்லேகம முல்கிரி புராதன விகாரை பூமிக்குச் சொந்தமான சிதைந்த தாகபையும் அப் பூமியிலுள்ள மற்றும் தொல் பொருட்களும்.

14. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் புத்தல பிரதேச செயலாளர் பிரிவில், அம்பதண்டாரகம கிராமத்தில் அமைந்துள்ள புல்லென ஆரண்ய சேனாசன பூமிக்குச் சொந்தமான நீர்வடி வெட்டப்பட்ட இரு குகைகள்.

15. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் மெதகம பிரதேச செயலாளர் பிரிவில், பிபிலமுல்ல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள பிபிலேமுல்லை ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன போதனை மண்டபமும் புத்த குருமார் ஒழுக்காற்று மண்டபமும்.

16. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் மெதகம பிரதேச செயலாளர் பிரிவில், மெல்லகம கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள திம்பிறியகம கிராமத்தில் திம்பிறிய ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன புத்தர் திருவுருவத் தலமும், போதனை மண்டபமும் சிதைந்த கட்டடமும்.

17. ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்தில் வெள்ளவாய பிரதேச செயலாளர் பிரிவில், ஊவகுடா ஓய கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள குருதான கங்காதிலக விகாரையும் கிறிந்தி ஓயாவுக்கு அருகில் உள்ள புராதன தாகபையும் மற்றும் தொல்பொருட்களும்.

**பதுளை மாவட்டம்** :

18. ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவில், பண்டாரவளை கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள பண்டாரவளை ஹோட்டல்.

19. ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவில், கொத்தஹெல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள கொத்தஹெல ஜயகொத்தாராம விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன புத்த குருமார் தங்குமிடமும், போதனை மண்டபமும் புத்தர் திருவுருவத் தலமும்.

20. ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவில், அமுனுதோவ கிராமத்தில் அமைந்துள்ள கிரிஒருவ அம்பலம்.

21. ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச செயலாளர் பிரிவில், ஹில் ஓய கிராமத்தில் அமைந்துள்ள ஹில் ஓய ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன புத்த குருமார் இல்லமும், ஹேவிசி மண்டபமும், புத்த பிக்குகளின் ஒழுக்காற்று மண்டபமும், கண்டார மணித் தூணும் அரசமர பிரகாரமும்.

22. ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச செயலாளர் பிரிவில், விகாரதென்ன கிராமத்தில் அமைந்துள்ள விகாரதென்ன தொல்பொருளியல் பிரதேசத்தில் உள்ள சிதைந்த கட்டடங்கள், புராதன தூபியும் மற்றும் தொல்பொருளியல் சான்றுகளும்.

23. ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இலுக்பெலஸ்ஸ கிராமத்தில் அமைந்துள்ள எகொடகெலே கோப்பித் தொழிற்சாலை.

24. ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் ஹல்தும்முல்ல பிரதேச செயலாளர் பிரிவில், ஹால்அட்டுதென்ன கிராமத்தில் உள்ள புராதன நீதிமன்றச் சாட்சிகளைத் தங்கவைக்கும் கட்டடம்.

25. ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் கந்தகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், திக்கும்புற கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள துன்னேவ கற்பாருடன் உள்ள நீர்வடி வெட்டப்பட்ட குகை.

**குருநாகல் மாவட்டம்** :

26. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கிரிபாவ பிரதேச செயலாளர் பிரிவில், குடாகல்கடவல கிராமத்தில் அமைந்துள்ள குடாகல்கடவல ஆரண்ய சேனாசன பூமியில் அமைந்துள்ள நீர்வடி வெட்டப்பட்ட நான்கு கற்குகைகள்.

27. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கிரிபாவ பிரதேச செயலாளர் பிரிவில், வேரகல கிராமத்தில் அமைந்துள்ள வேரகல புராதன விகாரை பூமிக்குச் சொந்தமான நீர்வடி வெட்டப்பட்ட கற்குகையும் நீர்வடிவெட்டப்பட்ட கல்வெட்டுக்களுடன் கூடிய குகை விகாரையும்.

28. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் பொல்காவலை பிரதேச செயலாளர் பிரிவில், அரம்பேபொல கிராமத்தில் அமைந்துள்ள இங்குருவத்தை டெம்பிற்ற விகாரை பூமிக்குச் சொந்தமான டெம்பிற்ற விகாரை.

29. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில், தஹனெக்கம கிராமத்தில் அமைந்துள்ள விஜயவர்த்தனராம விகாரை பூமிக்குச் சொந்தமான நீர்வடி வெட்டப்பட்ட மூன்று கற்குகைகள்.

30. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில், 1040 ஆம் இலக்க சிரிகல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள சிரிகல சைலதலாராம புராதன விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன புத்தர் திருவுருவத்தலம்.

31. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் பொல்பித்தி கம பிரதேச செயலாளர் பிரிவில், ராவாஎல கிராமத்தில் அமைந்துள்ள மாளிகாத்தென்ன தொல்பொருளியல் காணியைச் சேர்ந்த உலா முற்றமும் தியான மண்டபமும்.

32. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் பொல்பித்தி கம பிரதேச செயலாளர் பிரிவில், 335 ஆம் இலக்க பொல்பித்திகம கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள நாகொல்ல தொல்பொருள் திணைக்களத்தைச் சேர்ந்த தியான மண்டபம்.

33. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவில், 358 ஆம் இலக்க நியத்தவனே கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள நியத்தவனே ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான நீர்வடி வெட்டப்பட்ட மூன்று குகை விகாரைகள்.

34. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவில்,358 ஆம் இலக்க புல்னேவா கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள புல்நேவா ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான டெம்பிற்ற விகாரை.

35. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அளவ்வ பிரதேச செயலாளர் பிரிவில், கல்தெனிய கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள கல்தெனிய சைலாராம புராதன பூமியிலுள்ள குகை விகாரையும் நீர்வடி வெட்டப்பட்ட குகைகளும்.

36. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அளவ்வ பிரதேச செயலாளர் பிரிவில், பல்லேமோருகம கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள தொல்பொருளியல் சான்றுகளுடன் கூடிய ஒலுவில கற்பாறை.

37. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அளவ்வ பிரதேச செயலாளர் பிரிவில், 1008 ஆம் இலக்க இஹல கலல்பிட்டிய கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள கலல்பிட்டிய புராதன விகாரை பூமிக்குச் சொந்தமான குகை விகாரை.

38. வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் அளவ்வ பிரதேச செயலாளர் பிரிவில், 1008 ஆம் இலக்க இஹல கலல்பிட்டிய கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள கலல்பிட்டிய புராதன விகாரை பூமிக்குச் சொந்தமான பாத்தயால கல்கமத்த எனப்படும் இடத்திலுள்ள கல்வெட்டு.

39. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில் பன்னல பிரதேச செயலாளர் பிரிவில், இஹல்மெத்தேபொல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள வேரமுனே ஸ்ரீ சுனந்தராம ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான குகை விகாரை, நீர்வடி வெட்டப்பட்ட குகைகள், போதனை மண்டபம், புத்த பிக்குகள் ஒழுக்காற்று மண்டபம், பிக்குமார் தங்கும் இல்லம்.

**புத்தளம் மாவட்டம்** :

40. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில், மொக்கன்தலுவ கிராமத்தில் அமைந்துள்ள வெஹெரபெந்திகெலே விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன தாகபை மேடு.

41. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில், தெமட்டபிட்டிய கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள சுமங்கல விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன கற்றூண்கள், வட்ட வடிவமான கட்டடமும் புராதன செங்கல் அத்திவாரமும்.

42. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில், அரியகம கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள அரியகர விகாரை பூமிக்குச் சொந்தமான தூபி மேடு, புராதன கட்டட சிதைவுகள், தெமட்டபிட்டிய மகா மங்கட எனப்படும் இடத்தில் உள்ள மரத் தூண்கள்.

43. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில், திஸ்ஸவ நொச்சி வட்டவல கிராமத்தில் அமைந்துள்ள றெஜிஸ்தார் வத்தையில் உள்ள புராதன ஏழு கற்றூண்கள்.

44. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில், முக்குனுவட்டவன கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள மங்கள ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன கட்டட அத்திவாரம், சிதைந்த மேடு, புராதன கற்றூண்களைக் கொண்ட மேடு.

45. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில், கனத்தவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள மாளிகாவத்தை குளம்.

46. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில், சிலாபம் - நகர கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள பொலிஸ் ஆய்வு தலைமையகக் கட்டடம், பரிசுத்த காமேல் திருத் தேவாலயம், சிலாபம் அரசி மாளிகை, ஒல்லாந்த சிறைச் சாலைக் கட்டடம், அளவையாளர் தரவு, சாந்த ஜேம்ஸ் தேவாலயம்.

47. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில், 568 ஆம் இலக்கம் கொண்ட முன்னேஸ்வரம் கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த முன்னேஸ்வரம் சிவன் கோவில் வளவில் அமைந்துள்ள கர்ப்பக்கிருகம், உட்பிரகாரம் உட்பட சிவன் கோயில் கட்டடம், கோபுரம் உள்ளிட்ட வெளிப் பிரகாரம், புராதன கிணறு மற்றும் தொல்பொருளியல் சார்ந்த பெறுமதி மிக்க கட்டடங்களும் புராதன தெப்பக்குளமும்.

48. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் மகாகும்புக்கன் கடவள பிரதேச செயலாளர் பிரிவில், கிவுலகொட விவசாய குடியேற்றத் திட்டம் 614-ஈ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள சிதைந்த தாகபை.

49. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் மகாகும்புக்கன்கடவல பிரதேச செயலாளர் பிரிவில், கல்குழிய கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள லிகினிகிரி விகாரை பூமிக்குச் சொந்தமான சிதைந்த தாகபையும் கற்றூண்களைக் கொண்ட கட்டடச் சான்றுகளும்.

50. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் மகாகும்புக்கன்கடவல பிரதேச செயலாளர் பிரிவில், 658-ஏ ஆம் இலக்க வல்பாலுவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள பெத்திகம புராதன விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன தாகபையும் கட்டட சிதைவுகள் உள்ள ஏழு இடங்களும்.

51. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் மகாகும்புக்கன்கடவல பிரதேச செயலாளர் பிரிவில், 612 ஆம் இலக்க மொஹொறிய கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள எகொடகம நெத்திபொக்குண கிராமத்திலுள்ள தாகபை மேடு.

52. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவில், திவுல்வெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள புராதன விகாரை பூமியில் உள்ள நீர்வடி வெட்டப்பட்ட மூன்று கற்குகைகள், இயற்கையாக அமைந்த கற்பாறை மீதுள்ள படிக்கல் வரிசை, கூம்பு வடிவில் அமைந்த கிடங்கு.

53. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவில், திவுல்வெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள லபுகல விகாரை பூமிக்குச் சொந்தமான சிதைந்த தாகபை, நீர்வடி வெட்டப்பட்ட ஐந்து கற்குகைகள், இயற்கையாக அமைந்த கற்பாரின் மீதான படிக்கட்டு வரிசை, கல்வெட்டு கட்டடச் சான்றுகள்.

54. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவில், திவுல்வெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள லபுகல சங்கடயாகம கிராமத்தில் உள்ள வரலாற்றுக்கு முற்பட்ட சான்றுகளும் உளியினால் துளைக்கப்பட்ட குழிகளுடன் கூடிய கற்பாறையும் கற்பாறை மீது வெட்டப்பட்டுள்ள வடிகால்களுடன் கூடிய கட்டடச் சான்றுகளும்.

55. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவில், திவுல்வெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள கும்மாடியாகம விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன தாகபை மேடும் சிதைவுகள் கட்டடங்கள்.

56. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவில், ஊரியாவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள மாணிக்கன்கந்த விகாரை பூமிக்குச் சொந்தமான சிதைந்த தாகபைக் கட்டடமும் கல்வெட்டும்.

57. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவில், கரம்பேவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள ஸ்ரீ சுதர்சனாராம விகாரை பூமிக்குச் சொந்தமான டெம்பிற்ற விகாரையும் புராதன தாகபையும்.

58. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவில், கல்லேவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள கேதெத்தாவ கிராமத்தைச் சேர்ந்த தாகபை மேடும் இயற்கையாக அமைந்த கற்பார் மீதான படிக்கல் வரிசையும்.

59. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவில், தோணிக்கல் கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள தோணிக்கல் கல் வெட்டு.

60. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவில், பெரியகுளம் கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள குந்தானியாகம கிராமத்தைச் சேர்ந்த ஒத்தப்புக்கல் வரலாற்றுக்கு முற்பட்ட கற்குகையும் நீர்வடி வெட்டப்பட்ட கற்குகையும்.

61. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவில், மகா உஸ்வெவ தெற்கு கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள பெத்தாராம விகாரை பூமிக்குச் சொந்தமான தாகபை மேடு.

62. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவில், கொட்டுக்கச்சிய 1 ஆம் குடியேற்றத் திட்டம் கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள போதிருக்காராம விகாரை பூமிக்குச் சொந்தமான டெம்பிற்ற விகாரையும் தாகபையும்.

63. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவில், பரமாகந்த கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள பரமாகந்த விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன தாகபையும், நீர்வடிவெட்டப்பட்ட இரு குகைகள், மலை மீதான எழுத்துக்கள், புத்த பிக்குமார் தங்கும் இல்லம், அந்த விகாரை பூமிக்கருகில் உள்ள நீர் வடி வெட்டப்பட்ட மூன்று குகைகள்.

**கொழும்பு மாவட்டம் :**

64. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில் திம்பிறிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், மிலாகிரி கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள 'அசோக உத்யானய' எனப்படும் இடத்திலுள்ள சோலைவரி மதிப்பீட்டு இலக்கம் 9 ஐக் கொண்ட 'Fellows Lelah' எனப்படும் புராதன இல்லம்.

65. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில் ஹங்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், 434 ஆம் இலக்க அக்கரவிட்ட கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள அக்கரவிட்ட லெனவர விகாரை பூமியிலுள்ள புராதன புத்த பிக்குகள் தங்கும் இல்லம்.

66. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில் ஹங்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், 439 ஆம் இலக்க தித்தெனிய வடக்கு கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள கொஹொலன்கந்த ஆரண்யசேனாசன பூமியிலுள்ள நீர்வடி வெட்டப்பட்ட குகை விகாரையும் புத்த பிக்குமார் தங்கும் இல்லத்துடன் கூடிய நீர்வடி வெட்டப்பட்ட குகையும்.

67. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில் ஹங்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், 440 ஆம் இலக்க நெலுவத்துடுவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள பிந்தாவன்வத்த நீர்வடி வெட்டப்பட்ட இரு கற்குகைகள்.

68. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில் பாதுக்கை பிரதேச செயலாளர் பிரிவில், 458 ஆம் இலக்க பாதுக்கை கிழக்கு கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள தும்மோதற கிராமத்துக்குச் சொந்தமான வரலாற்றுக்கு முற்பட்ட கற்குகை.

69. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில் பாதுக்கை பிரதேச செயலாளர் பிரிவில், 458 ஆம் இலக்க வக கிழக்கு கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள பல்ஹொருகந்த வடக்குச் சரிவிலுள்ள வரலாற்றுக்கு முற்பட்ட தும்மோதர கற்குகை.

70. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில் இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில், மேற்கு இரத்மலானை கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள தேவாலவத்தை எனப்படும் காணியில் உள்ள புராதன தேவாலய வீடும் அதனை அண்டிய மற்றும் புதை பொருட்களும்.

**களுத்துறை மாவட்டம் :**

71. மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில் புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவில், 821 ஆம் இலக்கம் கொண்ட புலத்சிங்கள தெற்கு கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள தேவமுத்தாராம புராதன விகாரைக்குச் சொந்தமான புராதன புத்தர் திருவுருவத்தலம்.

72. மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில் இங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவில், எந்துராகலை கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள எந்துராகலை வரலாற்றுக்கு முற்பட்ட சான்றுகளுடன் கூடிய மெதிகந்த கற்குகை.

73. மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில் மில்லேனிய பிரதேச செயலாளர் பிரிவில், 844-பீ திக்ஹேன கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள பரகஸ்தொட்ட ஸ்ரீ சுதர்சனாராம விகாரை பூமிக்குச் சொந்தமான புத்தர் திருவுருத்தலமும் போதனை மண்டபமும்.

**கம்பஹா மாவட்டம் :**

74 மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில் தொம்பே பிரதேச செயலாளர் பிரிவில், 292-சீ ஆம் இலக்க அனுராகொட கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள தெல்காவத்தை ஸ்ரீ சுமங்கலாராம விகாரை பூமிக்குச் சொந்தமான டெம்பிற்ற விகாரையும் புத்த குருமார் ஒழுக்காற்று மண்டபமும்.

**அம்பாறை மாவட்டம் :**

75. கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில் மகா ஓயா பிரதேச செயலாளர் பிரிவில், பொல்லேபெத்த கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள தேவால எலகண்டியவி லுள்ள சிதைவுற்ற இடம்.

76. கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில் மகா ஓயா பிரதேச செயலாளர் பிரிவில், பொல்லேபெத்த கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள குருந்துவத்த கிராமத்தில் இயற்கையாக உள்ள மலைப்பாரின் மீது செதுக்கப்பட்டுள்ள புராதன படிக்கட்டு வரிசை.

77. கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில் மகா ஓயா பிரதேச செயலாளர் பிரிவில், பொல்லேபெத்த கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள கல்லாலான வடிகால் தொகுதி.

78. கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில் மகா ஓயா பிரதேச செயலாளர் பிரிவில், பொல்லேபெத்த கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள நம்புக்கென் ஓயா புராதன வாவி மதில் (வட்டவல கண்டிய).

79. கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில் மகா ஓயா பிரதேச செயலாளர் பிரிவில், 136/A/1 ஆம் இலக்க பொரபொல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள கொறிகான மலைச் சரிவில் உள்ள கற்குழி.

80. கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில் மகா ஓயா பிரதேச செயலாளர் பிரிவில், 136/A/1 ஆம் இலக்க பொரபொல கிராம உத்தியோகத்தர் வசம் ஹீத்தவன்னிய மலைச் சரிவில் அமைந்துள்ள நீர்வடி வெட்டப்பட்ட கல்வெட்டுக்களைக் கொண்டமைந்த கற்குகைகள்.

**கேகாலை மாவட்டம் :**

81. சபரகமுவ மாகாணத்தில், கோகலை மாவட்டத்தில் வரக்காப்பொலை பிரதேச செயலாளர் பிரிவில், லேகம (துல்கம) கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள லேகம கொட்டச என்ற பெயரால் அடையாளப்படுத்தப்படும் இடத்தைச் சேர்ந்த இரு நீர்வடி வெட்டப்பட்ட கற்குகைகள்.

82. சபரகமுவ மாகாணத்தில், கோகலை மாவட்டத்தில் வரக்காப்பொலை பிரதேச செயலாளர் பிரிவில், ஏகல்ல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள போதாவல கிராமத்தில் தொரொவ்வ (மேல்/கீழ்) எனப்படும் இடத்தில் உள்ள ஐந்து நீர்வடி வெட்டப்பட்ட கல்வெட்டுக்களைக் கொண்டுள்ள கற்குகைகள்.

83. சபரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில் தெரணியகலை பிரதேச செயலாளர் பிரிவில், அங்ஹெற்றிகம கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள அங்ஹெற்றிகம ஸ்ரீ ஜினேந்திரராம புராதன விகாரை பூமிக்குச் சொந்தமான புத்தர் திருவுருவத்தலமும் விஷ்ணு தேவாலயமும்.

**மாத்தளை மாவட்டம் :**

84. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில் கலேவெல பிரதேச செயலாளர் பிரிவில், வெலிக்கந்த கிராம சேவையாளர் வசம் அமைந்துள்ள பம்பரகட்டுபொத்த கிராமத்தில் சில்வத்கல ரஜ மகா விகாரை பூமிக்குச் சொந்தமான புராதன புத்தர் திருவுருவத்தலம், தூபி, போதனை மண்டபம், இயற்கையான கற்பாறையில் செதுக்கப்பட்ட படிக்கல் வரிசையும், தூண் அத்திவாரம், குகை வாயில் நீர்வடி வெட்டப்பட்ட கற்குகை ஆகியன.

85. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில் கலேவெல பிரதேச செயலாளர் பிரிவில், ஈ/ 432 ஆம் இலக்க பத்கொலகொல்ல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள பத்கொலகொல்ல வேஹெற பொந்திஹின்ன விகாரை பூமிக்குச் சொந்தமான கற்றூண்களைக் கொண்டு அமைந்த கட்டடங்களின் சிதைவுகள் உள்ள இடம், கற்குகை வாயில், மலைக் கல் வெட்டு மலராசனம், புராதன மதிலும் தூபியின் மேடும்.

86. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை பிரதேச செயலாளர் பிரிவில், திக்கொல்ல யாய கிராமத்தில் அமைந்துள்ள ரூவன்மடுகல கந்தே விகாரை பூமிக்குச் சொந்தமான கற்பாறை மீதான படிக்கல் வரிசையும் தூண்களின் அத்திவாரமும் கற்குகை வாயிலும்.

87. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில் கலேவெல பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வலஸ்வெல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த அவரியப்பத்தஹா ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள புராதன புத்தர் திருவுருவத்தலமும் நீர்வடி வெட்டப்பட்ட குகைகள் தூண் தளமும், மலைக் கல் வெட்டுக்கள், புராதன தூபியும் அதனையடைய அமைந்த படிக்கல் வரிசையும்.

**கண்டி மாவட்டம் :**

88. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் கங்கவட்ட கோறளை பிரதேச செயலாளர் பிரிவில், 258 ஆம் இலக்க மேல்கட்டுக்கலை கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள மேல் கட்டுக்கலை சுற்றுலா பொலிஸ் நிலையம்.

89. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்து பிரதேச செயலாளர் பிரிவில், உடதூல்வல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள தூல்வல மனாப தஸ்ஸன குகைத் தொகுதியைச் சேர்ந்த நீர்வடி வெட்டப்பட்ட, பிராமி எழுத்துக்களைக் கொண்ட கல் வெட்டுக்கள் செதுக்கப்பட்ட சகல குகைகளும்.

90. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் உடுநுவர பிரதேச செயலாளர் பிரிவில், எம்பெக்கே கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள எம்பெக்கே தேவாலயம் உள்ளடங்கலாக அதனுடன் தொடர்புள்ள சமகால கட்டடத் தொகுதியும் கலே அம்பலமயும் (தங்குமடம்).

**நுவரெலியா மாவட்டம் :**

91. மத்திய மாகாணத்தில், நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில், 475-B ஆம் இலக்க திம்புல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள கொட்டகலை சாந்த மாகிறேட் அன்னையின் திருத்தேவாலயம்.

92. மத்திய மாகாணத்தில், நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில், 535-D ஆம் இலக்க மத்திய நுவரெலியா கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள பரிசுத்த திரித்துவ தேவாலயம்.

**அம்பாந்தோட்டை மாவட்டம் :**

93. தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவில், தம்பேதலாவை கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள இஹல வாடியகம கிராமத்திலுள்ள புராதன தூபி மேடு.

94. தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், 141 ஆம் இலக்க குடாபோலான கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள குடாபோலான மலாயர் கொலனி கிராமத்தில் உள்ள வேஹெரகொடல்ல எனப்படும் புரதான தூபி மேடு.

**காலி மாவட்டம்:**

95. தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில் எல்பிடிய பிரதேச செயலாளர் பிரிவில், 94 ஆம் இலக்க அம்பன கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்துள்ள அம்பன ஸ்ரீ சங்கராஜ இந்துருகிரிலென் விகாரை பூமிக்குச் சொந்தமான நீர்வடி வெட்டப்பட்ட கல் விகாரை.

**அனுராதபுரம் மாவட்டம்:**

96. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் ஹொறொவப்பொத்தான பிரதேச செயலாளர் பிரிவில், 133 ஆம் இலக்கம் கொண்ட மரதன்கடவளை கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த மரதன்கடவளை புராதன விகாரையைச் சேர்ந்த நீர்வடி வெட்டப்பட்ட கற்குகைகள்.

97. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் ஹொறொவப்பொத்தான பிரதேச செயலாளர் பிரிவில், 134 ஆம் இலக்கம் கொண்ட புஹுலேவெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த புஹுலேகம சுஜாத்தாராம விகாரையில் உள்ள டெம்பிற்ற விகாரையும் புராதன கற் பிரகாரமும்.

98. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் ஹொறொவப்பொத்தான பிரதேச செயலாளர் பிரிவில், 150 ஆம் இலக்கம் கொண்ட புளியங்கடவளை கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த புளியங்கடவளை புராதன விகாரையிலுள்ள தூபி இடிபாடுகளும் அருகாமையிலுள்ள புராதன கற் தூண்களும்.

99. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் ஹொறொவப்பொத்தான பிரதேச செயலாளர் பிரிவில், 117 ஆம் இலக்கம் கொண்ட சிங்களவளஹாவித்தவெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த குடா தம்புளு ரஜமகா விகாரையில் அமைந்துள்ள நீர்வடி வெட்டப்பட்ட கற்குகைகள் இரண்டும் புராதன படிக்கட்டுகளும்.

100. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் மிகிந்தலை பிரதேச செயலாளர் பிரிவில், 587 ஆம் இலக்கம் கொண்ட தொறமடலாவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த தோறமடலாவ ரஜ மகா விகாரையின் பிராஹ்மி எழுத்துக்களுடனான நீர்வடி வெட்டப்பட்ட கற்குகைகள் நான்கும் கல்வெட்டெழுத்துக்களும்.

101. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் மிகிந்தலை பிரதேச செயலாளர் பிரிவில், 586 ஆம் இலக்கம் கொண்ட மரதன்குளம் கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ஸ்வஸ்திகல என்னும் இடத்திலுள்ள புராதன சுவரோவியங்களுடனான நீர்வடி வெட்டப்பட்ட கற்குகை.

102. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் பலாகலை பிரதேச செயலாளர் பிரிவில், 668 ஆம் இலக்கம் கொண்ட களுகல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த யஹங்கல புராதன ரஜமகா விகாரையிலுள்ள நீர்வடி வெட்டப்பட்ட எட்டு குகைகளும் பிராஹ்மி எழுத்துக்களுடனான நீர்வடி வெட்டப்பட்ட குகையும் ஏழு ஆசனங்களும் கல்வெட்டும்.

103. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் பலாகலை பிரதேச செயலாளர் பிரிவில், 679 ஆம் இலக்கம் கொண்ட ஹிங்குருவெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த அபறளி விகாரையில் உள்ள டெம்பிற்ற விகாரை.

104. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் பளுகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவில், 596 ஆம் இலக்கம் கொண்ட கும்புக்வெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த வளஸ்கலை வேறகல ஸ்ரீ ஜினேந்திராராம விகாரையில் அமைந்துள்ள தூபித்தளமும் கற்றூண் குழிகளும், படிக்கல் வரிசையும், தெபபக்குளமும் கொண்டுள்ள கற்பாறை.

105. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் பளுகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவில், 604 ஆம் இலக்கம் கொண்ட கலப்பிற்றகல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த

றிற்றிகல ஆண்டியாக்கந்த ஆரணியத்தில் அமைந்துள்ள றிற்றிகல குன்றில் உள்ள பிராஹ்மி எழுத்துக்களைக் கொண்ட நீர்வடி வெட்டப்பட்ட குகைகள்.

106. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் பளுகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவில், 589 ஆம் இலக்கம் கொண்ட கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ஹம்பறணவெவ அருகில் உள்ள கற்பார் மீதமைந்துள்ள புராதன தாகபை.

107. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவில், 43 ஆம் இலக்கம் கொண்ட பிரபோதாகம கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த பூணாவ கல்கிரிந்த ரஜமகா விகாரையில் அமைந்துள்ள பிராஹ்மி எழுத்துக்களைக் கொண்ட நீர்வடி வெட்டப்பட்ட கற்குகைகள், படிக்கல் வரிசையையும் கல் எழுத்துக்களையும் கொண்டமைந்த கற்பாறை.

108. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கல்நேவ பிரதேச செயலாளர் பிரிவில், 460 ஆம் இலக்கம் கொண்ட கந்துலேகம கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த கந்துலேகம கெட்டகல, மாகல எனப்படும் கற்குன்றுகளிலுள்ள தாகபை இடிபாடும் மற்றும் தொல்பொருளியல் சான்றுகளும்.

109. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கஹற்றகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரிவில், 87 ஆம் இலக்கம் கொண்ட இஹல கொலொங்கஸ்வெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த கெந்தஹேன கட்டுனவெவ யஹன்கல எனப்படும் இடத்திலுள்ள நீர்வடி வெட்டப்பட்ட கற்குகையும் புராதன ஆசனமும்.

110. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் பதவி பிரதேச செயலாளர் பிரிவில், 9 ஆம் இலக்கம் கொண்ட அபயபுர கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த வெஹெறகல ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள புராதன தாகபை இடிபாடும், கற்பார்மீது எழுதப்பட்ட 3 கல்வெட்டுக்களும், தொல்பொருளியல் சான்றுகளும்.

111. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 626 ஆம் இலக்கம் கொண்ட மலவை கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ஒறுகல் சேய ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள புராதன தெப்பக் குளமும், படிக்கல் வரிசை, கட்டடச் சான்று, கற்பாறை மீதான புராதன தாகபை.

112. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 651 ஆம் இலக்கம் கொண்ட கித்துல்ஹிற்றியாவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ராமதகல் ஸ்ரீ காசியப்ப விகாரையில் அமைந்துள்ள கற்றூண்களுடனான புராதன புத்தர் கட்டடம்.

113. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 648 ஆம் இலக்கம் கொண்ட கொட்டாகல கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த கொட்டஸற பியங்கல ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள நீர்வடி வெட்டப்பட்ட கற்குகைகள்.

114. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 611 ஆம் இலக்கம் கொண்ட மாமினியாவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த மாமினியாவ ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள புராதன தூபி.

115. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 633 ஆம் இலக்கம் கொண்ட மெதவெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த கினிஹிரிகந்த ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள நீர்வடி வெட்டப்பட்ட குகைகளும் திருப்பாதக் கல்லும்.

116. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 623 ஆம் இலக்கம் கொண்ட கறுக்கன்குளம் கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த தாதுசேன ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள கற்பார் மீதமைந்த நீர்வடி வெட்டப்பட்ட கற்குகையும் திருப் பாதமும்.

117. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 632 ஆம் இலக்கம் கொண்ட அம்புல்கஸ்வெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ஹித்தகெம ஆரண்ய சேனாசனவில் அமைந்துள்ள பிராஹ்மி எழுத்துக்களுடனான நீர்வடி வெட்டப்பட்ட குகைகள், புராதனக் கட்டடங்கள்.

118. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவை பிரதேச செயலாளர் பிரிவில், 624 ஆம் இலக்கம் கொண்ட மயிலகஸ்வெவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த சந்தகல்பாய ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள கற்பார் மீதமைந்த படிக்கல் வரிசையும் கல்வெட்டும் நீர்வடி வெட்டப்பட்ட குகையும் தூபி இடிபாடும் பிரகாரமும்.

119. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் தளாவை பிரதேச செயலாளர் பிரிவில், 386 ஆம் இலக்கம் கொண்ட கட்டியாவ யாய 1 ஆம் கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த நவகல ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள புராதன தாகபைகள் இரண்டு.

120. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் தளாவை பிரதேச செயலாளர் பிரிவில், 386 ஆம் இலக்கம் கொண்ட கட்டியாவ யாய 7-துலான கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ஸ்ரீ சுமனகிரி ரஜ மகா விகாரையில் அமைந்துள்ள நீர்வடி வெட்டப்பட்ட கற்குகை, தூண் குழிகளும் கற்பாறை மீதமைந்துள்ள நாக உருவமும் வடிகாலும் புராதன தெப்பக் குளமும்.

121. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் தளாவை பிரதேச செயலாளர் பிரிவில், 381 ஆம் இலக்கம் கொண்ட மெதகம துலான கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த அளுத்வெவ போதிறுக்காராம விகாரையில் அமைந்துள்ள அத்தாணி கல்வெட்டு.

122. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் மகாவிலாச்சி பிரதேச செயலாளர் பிரிவில், 371 ஆம் இலக்கம் கொண்ட நவோதாகம கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ஸ்ரீ மதுரசிறி விகாரையில் அமைந்துள்ள கற்றூண்கள் கொண்டமைந்த கட்டட இடிபாடுகள்.

123. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் நம்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், 103 ஆம் இலக்கம் கொண்ட திவ்விய உடபெந்தவெவ துலான கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த கட ஹத்த எனப்படும் இடத்திலுள்ள புராதன தாகபை, டெம்பிற்ற விகாரை, கட்டட இடிபாடுகளும் தெப்பக் குளமும் கொண்ட கற்பாறை.

124. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் தம்புத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில், 436 ஆம் இலக்கம் கொண்ட தெல்னேகம கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ஒறுகல யாய குடாகல் விகாரையில் அமைந்துள்ள ஒறுகொட யாய குடாகல் விகாரைத் திருப்பாதமும் கற்பாறை மீதுள்ள கல்வெட்டுக்களும்.

125. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவில், 354 ஆம் இலக்கம் கொண்ட ஒத்தப்புவ கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த ஒத்தப்புவ பன்சலையில் அமைந்துள்ள புராதன தாகபை, விகாரை மண்டபமும் கற்பாறையில் உள்ள திருப்பாதமும் நீர்வடி வெட்டப்பட்ட குகைகளும்.

126. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவில், உள்ள அடம்பன் கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த தெமற்றமல் புராதன விகாரையில் அமைந்துள்ள மிகப் புராதன கட்டடமும் தாகபையும் நீர்வடி வெட்டப்பட்ட குகைகளும், கல்வெட்டுக் களும், புராதன கற்சிலையும்.

127. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் கெப்பித்திகொல்லாவை பிரதேச செயலாளர் பிரிவில், 26 ஆம் இலக்கம் கொண்ட துன்சுட்டுவ கிராம உத்தியோகத்தர் வசம் துட்டுவெவ கிராமத்தில் அமைந்த துட்டுவெவ புராதன விகாரையில் அமைந்துள்ள புராதன தாகபை.

128. வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் மாவட்டத்தில் திறப்பனை பிரதேச செயலாளர் பிரிவில், 534 ஆம் இலக்கம் கொண்ட புதிய புளியங்குளம் கிராம உத்தியோகத்தர் வசம் அமைந்த கெமுனு சைத்தியாராமய எனப்படும் இடத்தில் அமைந்துள்ள புராதன தாகபையும் பிரகாரமும்.

10-545

# வரவு செலவுத் திரட்டுக்கள்

## உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியற் தொழில்நுட்ப நிறுவகம்

### *கொழும்பு பல்கலைக்கழகம்*

***2007, திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகை***

*(தொகைகள் கிட்டிய ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)*

| | 2007<br>ரூபா<br>என்பீவீ | 2006<br>ரூபா<br>என்பீவீ |
|---|---|---|
| **நடைமுறையற்ற சொத்துக்கள் :** | | |
| அலுவலகத் தளபாடங்களும், உபகரணங்களும் | 2,383,733 | 1,213,846 |
| கணனிகள் | 901,686 | 773,404 |
| ஆய்வுகூட, கற்பித்தல் உபகரணங்கள் | 25,241,017 | 33,575,663 |
| பொருத்துகைகள் | 44,598 | 51,525 |
| ஆய்வுக்கூட கருவிகள் | 1,529,897 | 1,286,200 |
| நூலக நூல்களும் சஞ்சிகைகளும் | 248,909 | 8,897 |
| | 30,349,840 | 36,909,535 |
| முதலீடுகள் - நன்கொடை நிதி | 1,199,000 | 1,100,000 |
| | 31,548,840 | 38,009,535 |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| முதலீடுகள் | 10,788,541 | 5,040,917 |
| முற்பணக் கணக்கு: | 1,242,199 | 1,837,095 |
| ஏனைய கிடைக்கவேண்டியவைகள் | 254,200 | 280,351 |
| வங்கி மீதிகள் | 2,133,902 | 2,773,019 |
| | 14,418,842 | 9,931,382 |
| மொத்தச் சொத்துக்கள் | 45,967,682 | 47,940,917 |
| **மூலதனத்தால் நிதியளிக்கப்பட்டவை:** | | |
| செலவு செய்யப்பட்ட மூலதன மானியம் | 4,784,543 | 3,902,320 |
| செலவு செய்யப்படாத மூலதன மானியம் | 448,114 | 188,767 |
| அன்பளிப்பு நன்கொடைகளும் | 25,055,642 | 33,218,391 |
| | 30,288,299 | 37,309,478 |

| | 2007 ரூபா என்பீவீ | 2006 ரூபா என்பீவீ |
|---|---|---|
| **ஒதுக்கங்கள்:** | | |
| வரவு செலவுக் கணக்கு | 2,979,654 | (607,237) |
| | | |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதிகள் | | |
| நன்கொடை நிதி | 1,264,220 | 1,165,220 |
| ஆய்வு மானியங்கள் | 7,807,054 | 6,565,086 |
| நிறுவாக அபிவிருத்தி நிதி | 245,802 | - |
| 2008 இல் எம். எஸ். சீ. ஆய்வுக் கருத்திட்டங்கள் | 1,100,000 | 750,000 |
| | 10,417,076 | 8,480,306 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| ஏற்பட்ட - செலவுகள் | 1,310,555 | 706,742 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 970,598 | 2,028,728 |
| மீளச் செலுத்த வேண்டிய வைப்புகள் | 1,500 | 22,902 |
| | 2,282,653 | 2,758,372 |
| | 45,967,682 | 47,940,919 |

முகாமைத்துவ சபையின் சார்பாக அதற்காக

தயாரித்து உறுதிப்படுத்தியவர் சிரேஷ்ட கணக்காளர் :......................................

.................... ....................................................

பணிப்பாளர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்.

## உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியற் தொழில்நுட்ப நிறுவகம்

### கொழும்பு பல்கலைக்கழகம்

### *2007, திசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவுற்ற ஆண்டுக்கான வரவு, செலவுக் கணக்கு*

*(தொகைகள் கிட்டிய ரூபாய்களில் தரப்பட்டுள்ளன)*

| | 2007 ரூபா | 2006 ரூபா |
|---|---|---|
| **வருமானம்:** | | |
| மீண்டுவருஞ் செலவினத்திற்கான அரசாங்க மானியம் | 21,972,000 | 13,195,000 |
| மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பிற்கான அரசாங்க மானியம் | 800,000 | 2,000,000 |
| அன்பளிப்புச் செய்யப்பட்ட சொத்துக்களை திருப்பிச் செலுத்துதல் | 8,983,435 | 7,631,253 |
| ஆய்வுமானியங்கள் | 4,938,365 | 4,538,782 |
| திரட்டிய வருாமனம் | 1,861,015 | 1,346,512 |
| வட்டி வருமானம் | 738,006 | 352,055 |
| ஏனைய வருமானங்கள் | 541,137 | 134,592 |
| | 39,833,958 | 29,198,194 |
| *கழிக்க:* **செலவு:** | | |
| தனிப்பட்ட வேதனாதிகள் | 8,549,829 | 7,225,676 |
| போக்குவரத்து | 545,245 | 207,076 |
| வழங்கல்கள் | 6,112,547 | 5,153,707 |
| பராமரிப்புச் செலவு | 3,836,293 | 2,401,040 |
| ஒப்பந்தச் சேவைகள் | 7,959,769 | 6,897,437 |
| ஏனைய மீண்டுவரும் செலவுகள் | 827,362 | 424,983 |
| நிறுவக அபிவிருத்தி நிதி | 245,802 | - |
| பெறுமானத் தேய்வு | 8,983,435 | 8,160,337 |
| | 37,060,282 | 30,470,256 |
| செலவினத்திற்கு மேலான வருமான மிகை | 2,773,676 | (1,272,062) |
| **வரவு செலவு ஒதுக்கீட்டுக் கணக்கு:** | | |
| வரவு செலவு கணக்கிலிருந்து முன் கொண்டுவரப்பட்ட மீதி | 2,773,675 | (1,272,063) |
| வரவு செலவு கணக்கு முன்கொணரப்பட்ட மீதி | (607,238) | 387,703 |
| முன்னைய ஆண்டு தொடர்பான செவ்வையாக்கல்கள் | 813,217 | 277,122 |
| ஐந்தொகைக்கு கொண்டுவரப்பட்ட மீதி | 2,979,654 | (607,238) |

**உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியற் தொழில்நுட்ப நிறுவகம்**

***கொழும்பு பல்கலைக்கழகம்***

***நிதிக் கூற்றுக்கள் - 2007 இற்கான குறிப்புகள்:***

1. ***முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்:***

1.1 ***கணக்கீட்டு அடிப்படை***

இந்நிதிக்கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டதும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் கணக்கீட்டு நியமனங்களுக்கும் அமைவான வரலாற்று ரீதியான கணக்கீட்டு அடிப்படைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

2. ***சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படைகளும்:***

2.1 ***நடைமுறையற்ற சொத்துக்களின் பெறுமானத் தேய்வு***

நிலையான சொத்துக்கள் ஒன்றுதிரண்ட பெறுமானத் தேய்வைக் கழித்த பின்வந்த விலைகளில் காட்டப்பட்டுள்ளன. பெறுமானத் தேய்வுகள் நேர்க்கோட்டு முறைமையில் வருடத்துக்கான பின்வரும் வீதங்களில் கழிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பொருத்துகைகள் | 10% |
| அலுவலகத் தளபாடங்களும் உபகரணங்களும் | 10% |
| கணனி | 20% |
| ஆய்வுக்கூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 20% |
| நூலக நூல்களும், சஞ்சிகைகளும் | 20% |
| ஆய்வுகூட கருவிகள் | 20% |

***பெறுமானத் தேய்வு கொள்கை மாற்றம் :***

திருத்தப்பட்ட இலங்கை கணக்கீட் நியமங்கள் - 18 இன் நிபந்தனைகளுக்கு அமைய, இவ்வாண்டின்போது கீழே விளக்கப்பட்டவாறு இந்நிறுவகத்தின் பெறுமானத்தேய்வுக் கொள்கை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

***முன்னைய கொள்கை :***

கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத் தேய்வு கழிக்கப்படாத அதேவேளை பொருள் கைமாறப்பட்ட ஆண்டில் ஒரு முழு வருடத்துக்குமான பெறுமானத் தேய்வு கழிக்கப்படும்.

***புதிய கொள்கை :***

கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து பெறுமானத் தேய்வு கழிக்கப்படுவதோடு திருத்தியமைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 10 இற்கமைய நடப்பு ஆண்டிலும் ஆரம்ப மீதியிலும் தொடக்க மீதியிலும் சீராக்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.2 'சரெக்' மானியத்தின் கீழ் கிடைக்கப்பெற்று கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் மீள் பெறுமதியிடப்பட்ட தொகைகளில் காட்டப்பட்டன.

2.3 ***தவணையாகத் திருப்பிச் செலுத்தல்:***
கிடைக்கப்பெற்ற மூலதன மானியங்களும் சொத்துக்களுக்கான நன்கொடைகளும் அன்பளிப்புகளும் பெறுமானத் தேய்வுக்கு கடைப்பிடிக்கப்பட்ட, அதே அடிப்படையில் திருப்பிச் செலுத்திய தொகையைக் கழித்த பின் உள்ள மானியத்தின்/நன்கொடையின் பெறுமதியில் காட்டப்படுகின்றது.

3. ***பணிக்கொடைக்கான ஏற்பாடு:***

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் ஐந்தொகைத் திகதியன்று ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்த, அனைத்து ஊழியர்களுக்கும் இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான முழுமையான ஏற்பாடு கணக்குகளில் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

4. ***வரவு செலவு:***

4.1 ***வருவாய் இனங்காணல்:***

(அ) மாணவர்களிடமிருந்து பெறப்படும் வருமான மற்றும் பதிவுக் கட்டணங்கள் காசு அடிப்படையில் கணக்கிலிடப்படும் அதே வேளை வட்டி வருமானம் ஒன்றுதிரண்ட அடிப்படையில் கணக்கிலிடப்படுகின்றது.

(ஆ) குறிப்பிட்ட நிதிகள் மற்றும் நன்கொடைகளிலிருந்தான வருமானம்.- நன்கொடைகளும் ஆய்வு மானியங்கள் மற்றும் வழங்கிய ஏனைய சேவைகள் ஆகியவற்றிலிருந்தான வருமானமும் சம்பந்தப்பட்ட சேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட அளவிற்கு கணக்கில் உள்ளடக்கப்படுகின்றன. இது பொதுவாக அவ்வருடத்தில் செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட செலவுத் தொகைகளுக்கு நிகரானதாக இருக்கும்.

5. வெளிநாட்டு நாணயத்திலான கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட திகதியன்றுள்ள நாணய மாற்று விகிதங்களில் கணக்கிலிடப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களைப் பூர்த்தி செய்வதன் விளைவாக ஏற்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக்கூற்றில் இனங்காணப்படும்.

6. உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியற்தொழில்நுட்ப நிறுவகக் கட்டிடத்தின் நிர்மாணம் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களின் ஒரு பகுதியைப் பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றுக்கு சீடா மென்கடன் 15 மில்லியன் குறோனர் (180 மில்லியன் ரூபா) வாயிலாக நிதியளிக்கப்பட்டமை, கொழும்பு பல்கல்லைக்கழக கணக்குப் புத்தகங்களில் (இலங்கை அரசாங்கத்தின் சார்பாக கடனைப் பெற்றுக் கொண்டவர்) காட்டப்பட்டுள்ளது.

பணிப்பாளர்,
கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட
உயிரியல் இரசாயன, மூலக்கூற்று, உயிரியல்,
உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம்.

**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரியல் இரசாயன, மூலக்கூற்று உயிரியல், உயிர்த்தொழினுட்பவியல் நிறுவகம் 2007 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவு மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.**

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரியல் இரசாயன, மூலக்கூற்று உயிரியல், உயிர்த்தொழினுட்பவியல் நிறுவனத்தின் 2007 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108 (i) ஆம் (iii) ஆம் பிரிவுகள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் 7) ஆம் பிரிவுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்கு செய்யப்பட்டது. பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு, மற்றும் நிதியதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது.

1.2 ***நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவப் பொறுப்புகள் :***

இந் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாக சமர்ப்பிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதிய தவறான கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதியக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது மற்றும் வழமையாக சமர்ப்பிக்கப்படுவதற்கு உரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல், உரித்துடைய கணக்கீடுக்கொள்கைகளைத் தெரிவு செய்து பிரயோகித்தல், சந்தர்ப்பங்களுக்கு உகந்த வகையில் நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றது.

1.3 ***கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை :***

எனது கணக்காய்வை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர் , ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினை தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டு மொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப் பிரயோகித்தும் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது ஆகக்கூடிய அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு அவசியமான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பெறப்பட்டன. இதன் பிரகாரம் எனது அபிப்பிராயத்திற்கான போதிய அடிப்படை ஒன்று கணக்காய்வின் மூலம் வழங்கப்படுவது எனது நம்பிக்கையாகும். 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

2. **நிதிக்கூற்றுக்கள்**

2.1 ***அபிப்பிராயம்:***

*எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரியல், இரசாயன, மூலக்கூற்று உயிரியல், உயிரியல்தொழினுட்ப நிறுவகத்தின் 2007, திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய கொழும்பு பல்கழைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயிரியல் இரசாயன, மூலக்கூற்று உயிரியல், உயிர்த்தொழிநுட்ப நிறுவகத்தின் 2007, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.*

2.2 ***நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்:***

*2.2.1 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்பட்டிராத கொடுக்கல் வாங்கல்கள்*

*பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன:*

*(அ) 1994, யூலை 14 ஆந் திகதி 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் படி 2007 ஆம் ஆண்டின் போது இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழிகளில் தேர்ச்சிக்காக சம்பளங்கள் மற்றும் படி பணத்தொகையாக ரூபா 5,595 செலுத்தப்பட்டிருந்தது. இப் பணிக்கொடைக் கொடுப்பனவு அரசாங்க சட்டதிட்டங்களுக்கு முரணானதாக பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அக் கொடுப்பனவு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.*

*(ஆ) பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியினருக்கு செலுத்தப்பட்ட கற்கைக் கொடுப்பனவு தவறாக சம்பளத்துடன் கூட்டப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தமையால் பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் ரூபா 122,427 ஆல் அதிகரித்துக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.*

3. **நிதிசார், மற்றும் செயற்பாட்டு மீளாய்வு:**

3.1 ***நிதிசார் செயற்பாடு :***

*3.1.1 நிதிசார் விளைவு:*

*கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி நிறுவனத்தின் 2007 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான தொழிற்பாடு மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுக்க முன்னர் ரூபா 19,998,325 ஆன ஓர் பற்றாக்குறையை விளைவித்திருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கான தொடர்புபட்ட பற்றாக்குறை ரூபா 16,467,063 ஆகும். மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 22,772,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டதை அடுத்து மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறையானது ரூபா 2,773,675 ஆன ஓர் மிகையாக மாற்றமடைந்தது. முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்காக பெறப்பட்ட ரூபா 15,195,000 தொகையான அரசாங்க மானியத்தை அடுத்து அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 1,272,063 வரை குறைவடைந்திருந்தது.*

3.2 ***செயற்பாட்டு மீளாய்வு:***

*3.2:1 செயற்பாடு:*

*பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன:-*

*(அ) மீளாய்வாண்டின் போது 2 பட்டப்பின்படிப்புப் பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன. பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 26 ஆனதுடன் இவர்களில் 11 பேர் 2007 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்ட மாணவர்களாவதுடன் ஏனைய மாணவர்கள் 2005 ஆம், 2006 ஆம் ஆண்டுகளின் போது பதிவு செய்யப்பட்ட மாணவர்களாவர். 2007 ஆம் ஆண்டின் போது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை 11 ஆனதுடன் ஒரு மாணவனின் சராசரிக் கிரயம் ரூபா 199,559 ஆகும்.*

(ஆ) நடாத்தப்பட்ட 05 தத்துவ முதுமாணிப் பட்டப் படிப்பு பாடநெறிக்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 09 ஆகும். ஒரு மாணவர் மாத்திரம் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருந்தார். பட்டப்படிப்பு காலப்பகுதி முழுநேர/ பகுதி நேர காலப்பகுதியான 03-05 ஆண்டுக்காலமாகும்.

(இ) 2 தத்துவ கலாநிதிப் பட்டப் பாடநெறி நடாத்தப்பட்டிருந்தது. இதற்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 06 ஆனதுடன் ஒரு மாணவர் மாத்திரம் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருந்தார். பட்டப்படிப்பு காலப்பகுதி முழுநேர/பகுதி நேர காலப்பகுதியான 04-07 ஆண்டு காலமாகும்.

(ஈ) 08 துறைகள் பூரணப்படுத்தக்கூடிய வகையில் 32 ஆராய்ச்சிச் செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. இவற்றில் 12 ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன. 20 ஆராய்ச்சி செயற்றிட்டங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவ் ஆராய்சி செயற்றிட்டங்களுக்காக சீடா சரெக் மானியத்தின் கீழ் ரூபா 4,578,619 மற்றும் ஏனைய மானியத்தின் கீழ் ரூபா 3,750,000 செலவினம் உறப்பட்டிருந்தது.

(உ) பட்டப்பின்படிப்பு பாடநெறிக்காக 17 வெளி விரிவுரையாளர்களின் சேவை பெறப்பட்டிருந்ததுடன் அவர்களால் 108 விரிவுரை மணித்தியாலங்கள் நடாத்தப்பட்டிருந்தன. இவ்வெளி விரிவுரையாளர்களுக்காக உறப்பட்ட செலவினம் ரூபா 79,956 தொகையானதுடன் விரிவுரை மணித்தியாலம் ஒன்றிற்கான கிரயம் ரூபா 740 ஆகும். உள்ளக விரிவுரையாளர்கள் 05 பேரினால் 646 விரிவுரை மணித்தியாலயங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 693 விரிவுரை மணித்தியாலங்கள நடாத்தப்பட்டிருந்தன.

(ஊ) முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் பதவியணியில் ஓர் பதவி அதிகரித்ததன் காரணமாக 12 பேரைக் கொண்ட பதவியணிக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 6,891,205 கிரயம் உறப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ஒரு நபருக்கான சராசரிக் கிரயம் ரூபா 574,267 ஆனதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 24% ஆல்அதிகரித்திருந்தது.

எஸ். ஸ்வர்ணஜோதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 108(2) ஆம் பிரிவிற்கும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(7) ஆம் பிரிவிற்கும் அமைய, 2007.12.31 ஆந் திகதி முடிவுற்ற ஆண்டுக்கான கணக்குகள் தொடர்பான அறிக்கை***

மேற்படி அறிக்கை இந்நிறுவகத்தின் கணக்காய்வுக் குழு கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டிருப்பதோடு, குறைபாடுகளுக்கான பதில்கள் கீழே தரப்பட்டுள்ளன :

2. **நிதிக்கூற்றுக்கள்:**

2.2 ***நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்:***

2.2.1 கொடுக்கல் வாங்கல்கள் உரிய அங்கீகாரத்துடன் உறுதிப்படுத்தப்படாமை

(அ) கவனிக்கப்பட்டது.-
அத்தகைய கொடுப்பனவுகள் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு முரணானவை எனக் கூறும் சுற்றறிக்கையெதுவும் ப.மா.ஆ. குழுவிடமிருந்து எமக்குக் கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) கவனிக்கப்பட்டது.-
ஊ. சே. நி. மற்றும் ஊ. ந. நி. ஆகியவற்றை கல்விசார் படிகளுக்காக செலுத்தியமை ப. மா. ஆ. சுற்று நிருபத்திற்கமையவே மேற்கொள்ளப்பட்டது. அத்தகைய கொடுப்பனவுகளைத் தொடர வேண்டாமெனக் கூறும் சுற்று நிரூபமொன்று எமக்குக் கிடைக்கவில்லை.

3. **நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு:**

3.1 ***நிதி மீளாய்வு:***

3.1.1 நிதிசார் விளைவுகள்

கவனிக்கப்பட்டது

3.2 **செயற்பாட்டு மீளாய்வு :**

3.2.1 **செயலாற்றுகை :**

(அ) கவனிக்கப்பட்டது

(ஆ) கவனிக்கப்பட்டது

உயிரிரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம் 2004, ஏப்பிறலில் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்தது.

(இ) கவனிக்கப்பட்டது

உயிரிரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம் 2004, ஏப்பிறலில் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்தது.

(ஈ) கவனிக்கப்பட்டது

(உ) கவனிக்கப்பட்டது

(ஊ) கவனிக்கப்பட்டது

புதிதாக நியமிக்கப்பட்ட நிறுவகப் பணிப்பாளரின் வேதனாதிகள் 2007, சனவரியிலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்டமையால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆளொருவருக்கான சராசரி செலவு 24% ஆல் அதிகரித்தது.

நன்றி உங்களுண்மையுள்ள,

பேராசிரியர் கே. எச். தென்னகோன்.
பணிப்பாளர்.

பிரதிகள் :-

1. திருமதி கே. சீ. பீ. சேனாரத்ன, - கணக்காய்வு அத்தியட்சகர், அரசாங்க கணக்காய்வுக் கிளை, கொழும்புப் பல்கலைக்கழகம்.
2. செயலாளர் - உயர்கல்வி அமைச்சு
3. செயலாளர் - நிதி, திட்டமிடல் அமைச்சு.
4. தவிசாளர் - பல்கலைக்கழக மானிய, துணைக்குழு.
5. உபவேந்தர் - கொழும்பு பல்கலைக்கழகம்.

1-584

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"நெக்ஸ்டெல் ஹோல்ட் (பிரைவட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2007.12.03 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "நெக்ஸ்டெல் ஹோல்ட் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் "நெக்ஸ்டெல் ஹோல்ட் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

(பீவீ) 62236.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
2008, திசெம்பர் 30.

1-659

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

" 'எஸ் எம். மோட்டோர்ஸ்' என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் உரிமையாண்மையில் தொழில் கொண்டு நடாத்துகின்ற பண்டாரவளையைச் சேர்ந்த டொன் பாலித்த நிஹால் ரூபசிங்க என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் பதுளையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எச். எம். சீ. சீ. எச். மெனிக்கே என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப் படுத்தப்பட்ட இரண்டும் 2006.09.25 ஆந் திகதிய 1535, 1536 ஆம் இலக்கங்கள்கொண்ட ஈட்டுமுறிகளின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள் ளனாராதலாலும் மேற்கூறப்பட்ட 1535 ஆம், 1536 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது 2008, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக இருபத்தாறு இலட்சத்து ஓராயிரத்து நாநூற்று பதினொரு ரூபா பத்து சதம் (ரூ. 26,01,411.10) கொண்ட தொகையும் 2008, நவெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை இருபத்து மூன்று இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தொன்பது ரூபா (ரூ. 23,46,859) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சளபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழுசதவீத (7%) வட்டியும் சொல்லப்பட்ட டொன் பாலித்த நிஹால் ரூபசிங்க என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து இருபத்தாறு இலட்சத்து ஓராயிரத்து நாநூற்று பதினொரு ரூபா பத்து சதம் (ரூ. 26,01,411.10) கொண்ட மொத்தத் தொகையை, 2008, நவெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை இருபத்து மூன்று இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தொன்பது ரூபா (ரூ. 23,46,859) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சளபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழுசதவீத (7%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 1535 ஆம், 1356 ஆம் இலக்கங்கள்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**1536 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், உடுபெருவேகம, மஹாபலாத்த கோறளை மெதிரிகிந்த பிரிவிலுள்ள உடு ஹுல்பொத்தவில் அமைந்துள்ளதும், "உடுஹுல்பொத்த கும்புரேஅஸ்வநாத்த" எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதும், (உ. நி. டபிள்யூ. எம். சுமதிரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 647 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1 இன் பாகமாகவுள்ளதும்), உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பீ. டபிள்யூ. நந்தசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2002.06.08 ஆந் திகதிய 3714 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 1 எனக்குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : எல ; கிழக்கில் : கே. பீ. சந்திரசேனவினால் உரிமைகோரப்பட்ட காணி ; தெற்கில் : 647 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 ; மற்றும் மேற்கில்: பிரதான வீதி, பரப்பளவில் இது. அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் பன்னிரண்டு தசம் ஆறு ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12.67பே.) கொண்டுள்ளதுடன், பதுளை காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**1535 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், மெதிரிகிந்த பிரிவின் மஹாபலாத்த கோறளையிலுள்ள கினிகமவில் அமைந்துள்ளதும் "உடுஹுல்பொத்தராவ" எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. கே. ஆனந்த டபிள்யூ. டி. சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2002.12.10 ஆந் திகதிய 1275 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 2 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணியின் பாகம் அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. கே. ஆனந்த டபிள்யூ. டி சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1267 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 6 மற்றும் இவ்வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 05 ; கிழக்கில் : இவ்வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் 03 மற்றும் 05 ; தெற்கில் : இவ்வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 03 ; மற்றும் மேற்கில்: மேற்கூறப்பட்ட 1267 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் 03 மற்றும் 05. பரப்பளவில் இது. அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் பத்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10பே.) கொண்டுள்ளதுடன், பதுளை காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனகத்துப்பின்னர் விபரிக்கப்பட்ட வீதி அணுகுவழியைப் பயன்படுத்துவதற்கான கட்டற்ற உரிமையுடன் சேர்த்து.

மேற்கூறப்பட்ட கினிகமவில் அமைந்துள்ளதும், மேற்கூறப்பட்ட 1275 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 05 எனக் குறித்துக் காட்டப்பட்டதும், "உடுஹுல்பொத்தராவ" எனவழைக்கப்படுவதுமான பிரிக்கப்பட்ட காணித்துண்டு ; அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : பிரதான வீதி மற்றும் மேற்கூறப்பட்ட 1267 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 10 ; கிழக்கில் : எல். கே. சோமபாலவின் காணி மற்றும் மேற்கூறப்பட்ட 1267 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 08 ; தெற்கில் : இவ்வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 04 ; மற்றும் மேற்கில்: மேற்கூறப்பட்ட 1275 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் 1, 3, 2 மற்றும் மேற்கூறப்பட்ட 1267 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 06. பரப்பளவில் இது பூச்சியம் ஆறு தசம் ஒன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 06.1பே.) கொண்டுள்ளதுடன், பதுளை காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

1-656/1

---

## றுஹுன அபிவிருத்தி வங்கி – தல்கஸ்வல கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின்கீழ் றுஹுன அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பிரசுரிக்கப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட றுஹுன அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபைக்குச் சாட்டப்பட்ட அதிகாரத்தின்படி, 2008.10.06 ஆந் திகதி நடாத்தப்பட்ட றுஹுன அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபைக் கூட்டத்திலே கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது :-

"றுஹுன அபிவிருத்தி வங்கியின் பெயரில் பிரசித்திபெற்ற சட்டத்தரணியும், நொத்தாரிசுமான திரு. கே. ஜே. ரீ. எல். நந்தன அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.04.07 ஆந் திகதிக்குரிய இலக்கம் 3959 எனும் ஈட்டுப்பத்திரத்தின்கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்தல் 'தவலம, படஹேன வஜிர ஸ்டோர்ஸ்' எனும் முகவரியில் வசிக்கும் பல்லே அல்லது பல்லேக் கங்கானம்கே வஜிர குமார லபுதுவ வயாபுருதி வீடமைப்பு 'ஸீ06 எனும் முகவரியில் வசிக்கும் கொன்கடுவ கமகே பேமவதி என்ற நகர்களினால் செலுத்தாதுவிடப்பட்டதாகவும், அவ் ஈட்டுப் பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து நாநூறு ரூபா (ரூ. 1,96,400) க்கான பணம் றுஹுன அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்தவேண்டியிருப்பதாகவும், 2007.11.29 ஆந் திகதியிலிருந்து வருடத்திற்கு 21.5% ப்படி ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து நாநூறு ரூபா (ரூ. 1,96,400) க்கான பணம் ஏலவிற்பனைத் திகதியிலிருந்து இன்னும் வட்டியுடன் ஏலவிற்பனை செலவும் சேர்த்து வேறு ஏதாவது செலவுகள் செய்திருப்பின் அவற்றைக் குறைத்துக் கொண்டும் அவற்றை அறவிட்டுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான ஜீ. பீ. ஆனந்த என்பவர்களினால் இலக்கம் 3959 என்ற ஈட்டுப்பத்திரத்தின்கீழ் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனையவற்றுடன் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தின், காலி மாவட்டத்திலே, ஹினிதும்பத்துவ, தவலம பிரதேச செயலகப் பிரிவின் ஹபரகடயில் அமைந்துள்ள அம்பனஹேன என்ற அரச காணித்துண்டென பெயர்கொண்ட வடக்கே: பரடெல்எல பாதுகாப்பு பிரிவும் ; கிழக்கே : மத்தும பன்திககாணியும் ; தெற்கே : அரச காணித்துண்டும், பரடெல் எல பாதுகாப்பு பிரிவும் ; மேற்கே : பிரவேணி காணியும் எல்லைகளாகக் கொண்ட இரண்டு ஏக்கர் (2ஏ. 0றூ. 0பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அங்குள்ள நிலமும், அமைந்துள்ள மரங்கள், பழவர்க்கங்கள், கட்டிடங்கள் அனைத்துமாகும்.

மேற்படி இரண்டாவது பன்தனதாயி என்ற எனக்கு 2000, யூன் 21 ஆந் திகதிக்குரிய இலக்கம். கா/16 பி. 5690/எல்எல்2008 என்ற பிரதான பத்திரத்தின் கீழ் உரிமையாளரான என்னால் உரிமை கொண்டாடப்படும் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளரான பி. ப. ஸ்டீவன் அவர்களினால் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதி அளந்து வேறுபடுத்திய இல. 325ஏ எனும் வரைபடத்தில் காட்டியவாறு தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் ஹினிதும வத்துவையில் தவலம பிரதேச செயலகப் பிரிவின் கடுகல்பொலயில் அமைந்துள்ளன.

2. அரச காணித்துண்டென பெயரான வடக்கே : சில்வத்தே திலகசிரிகேயின் காணியும் ; கிழக்கே : வேவல்தொல அதுதொல பாதுகாப்பு வலயமும் ; தெற்கே : கே. பி. பியதாச அவர்களின் மத்தியம பான்திக காணியும் ; மேற்கே : அடிப்பாதையும் எல்லைகளாகக் கொண்ட இரண்டு ஏக்கர் (2ஏ. 0றூ. 0பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் நிலமும், அங்குள்ள அமைனத்து பயிர்ச்செய்கை, மரங்கள், கட்டிடங்கள், பழவர்க்கங்கள் போன்ற அனைத்துமாகும்.

இக்காணி எல்டிஓ 40/146 கீழ் காணிப் பதிவு அலுவலகத்தில் 2005.04.08 ஆந் திகதியில் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபை ஆணைப்படி,

அமரசேன பிரதாபசிங்ஹ,
பொது முகாமையாளர்.

றுஹுன அபிவிருத்தி வங்கி,
பிரதான தலைமை அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை.
2008.10.06.

1-662

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

*''லங்கேச் இன்டஸ்ரீஸ் (பிரைவட்) லிமிட்டெட்'' ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2006.06.26 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட ''லங்கேச் இன்டஸ்ரீஸ்(பிரைவட்) லிமிட்டெட்'' எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது ''லங்கேச் இன்டஸ்ரீஸ் (பிரைவட்) லிமிட்டெட்'' எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பிவி 60399.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
2008, திசெம்பர் 30.

1-660

---

**வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி (பிஎல்சீ) -**
[பதிவு இல. பீகியு 118]

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யின் (பதிவிலக்கம் PQ 118) பணிப்பாளர் சபையால் 2008, ஒற்றோபர் 30 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''இம்புல்கொட, பஹாலயாகொட, தம்புவ வத்த அக்கர 10, 2H2 இலக்கத்தைச் சேர்ந்த விதானகே சுசில் அந்தனி (இதகத்துப்பின்னர் ஈடுவைத்தவர் எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு நிர்மலா தமயந்தி வீரசேகர அத்தாட்சிப்படுத்திய 2005, பெப்ரவரி 17 ஆந் திகதிகொண்ட 197 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் இல. 76, யோர்க் வீதி, கொழும்பு 01) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யின் (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷனஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்டது) சார்வில் மேற்படி ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும்,

மேற்கூறப்பட்ட ஈடுவைத்தவர் மேற்படி முறியின் பேரில் பெறப்பட்ட கடன் வசதிகளின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது 13.08.2008 ஆந் திகதியன்றுள்ளவாறு நாலு இலட்சத்து தொளாயிரத்து ஐம்பத்திரண்டு ரூபா ஒரு சதம் (ரூபா 4,00,593.01) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது ஆதலாலும்,

சொல்லப்பட்ட நாலு இலட்சத்து தொளாயிரத்து ஐம்பத்திரண்டு ரூபா ஒரு சதத்தையும் (ரூபா 4,00,593.01) வீடமைப்புக் கடன்மீது 13.08.2008 ஆந் திகதியன்றுள்ள நிலுவையிலுள்ள முதலாகிய மூன்று இலட்சத்து அறுபத்தேழாயிரத்து எந்நூற்று எண்பது ரூபா ஐம்பத்தைந்து சதத்தின் மீது (ரூபா 3,67,880.55) 14.08.2008 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 27 சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச்சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் திரிவங்க அன்ட் சேனநாயக ஆக்ஷனியர்ஸால் பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, மெத பற்று கம்பஹா பிரதேச சபையின் ஹெனுரத்கொட உப அலுவலகத்தின் எல்லைகளுக்குட்பட்ட பஹால யாகொடயில் அமைந்துள்ளதும் தம்புவே எஸ்டேட் என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. எவ். ஜே. பெரேரா தயாரித்த 1988, யூலை 05 ஆந்திகதி கொண்ட 10576 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு D என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்துதையும் சேர்த்து. மேற்படி துண்டு D என்பதற்கு எல்லைகளாக - வடகிழக்கில் : வீதி ; தென்கிழக்கு : துண்டு 4 ; தென்மேற்கில் : துண்டு B ; வடமேற்கு : துண்டு C என்பன அமைந்துள்ளன. மேற்படி 10576 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10பே.) அல்லது 0.02531. இது கம்பஹா காணிப்பதிவகத்தில் E 312/ 202 என்பதில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

1-668/1

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

*“சபோடா பில்டிங் கன்ஸ்ரக்சன் (பிரைவட்) லிமிட்டெட்” ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2007.09.21 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட “சபோடா பில்டிங் கன்ஸ்ரக்சன் (பிரைவட்) லிமிட்டெட்” எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் “சபோடா பில்டிங் கன்ஸ்ரக்சன் (பிரைவட்) லிமிட்டெட்'' எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.*

*டி. கே. ஹெட்டியாராச்சி,*
*கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.*

*பிவி 61476.*
*கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,*
*"சமாகம் மெதுர"*
*400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,*
*கொழும்பு 10.*
*2008, திசெம்பர் 30.*

*1-661*

---

**வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி (பீஎல்சீ) -**
[*பதிவு இல. பீகியு 118*]

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானம் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யின் (பதிவு இல. பீகியு 118 பணிப்பாளர் சபையால் 2007, திசெம்பர் 19 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*“சியபலபே ஹெய்யந்துடுவ 780 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த விக்ரமசிங்க வாசல முதியான்சேலாகே நயனங்க தஷ்ரத பண்டார அபேசெனவி (இதனகத்துப்பின்னர் ஈடுவைத்தவர்கள் எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எம். பி. பிரிஹர்ஷினி நில்மி மஹிபால அத்தாட்சிப்படுத்திய 2005, செத்தெம்பர் 16 ஆந் திகதிகொண்ட 01 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 02, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் இல. 76, யோர்க் வீதி, கொழும்பு 01) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யின் (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷனஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்டது) சார்பில் மேற்படி ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும்,*

*மேற்கூறப்பட்ட ஈடுவைத்தவர் மேற்படி முறியின் பேரில் பெறப்பட்ட கடன் வசதிகளின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது 15.11.2007 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்படி முறியின் மீது பதினொரு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து முந்நூற்று அறுபத்தேழு ரூபா நாற்பத்தாறு சதம் (ரூபா 11,37,367.46) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது ஆதலாலும்,*

*சொல்லப்பட்ட பதினொரு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து முந்நூற்று அறுபத்தேழு ரூபா நாற்பத்தாறு சதத்தையும் (ரூபா 11,37,367.46) வீடமைப்புக் கடன்மீது 15.11.2007 ஆந் திகதியன்றுள்ள நிலுவையிலுள்ள முதலாகிய பதினொரு இலட்சத்து எட்டாயிரத்து தொளாயிரத்து அறுபத்திரண்டு ரூபா பன்னிரண்டு சதத்தின் மீது (ரூபா 11,08,962.12) 16.11.2007 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 22.00 சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச்சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் திரிவங்க அன்ட் சேனநாயக ஆக்ஷனியர்ஸால் பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட எற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.*

**அட்டவணை**

*மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சல்பிட்டி கோறளை, அதிகாரி பற்று பியகம பிரதேச சபையின் எல்லைகளுக்குட்பட்டதும் பியகமவில் அமைந்துள்ளதும் கொடபாரகஹாவத்த அல்லது மில்லகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். கே. சீ. என். எபாசிங்க தயாரித்த 27.12.2003 ஆந் திகதி கொண்ட 2615 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 11B என அடையாளமிடப்பட்டு காட்டப்படும் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. மேற்படி துண்டு 11B என்பதற்கு எல்லைகளாக - வடக்கில் : 113/63 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 8 (16 அடி அகலப் பாதை) ; கிழக்கில் : 113/63 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 11 என்பதன் எஞ்சிய பகுதி ; தெற்கில் : 113/63 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 21 ; மேற்கில் : 113/63 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 12 என்பன அமைந்துள்ளன. மேற்படி 2615 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10பே.). இது கம்பஹா காணிப்பதிவகத்தில் C 689/78 என்பதன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. எல். விக்ரமநாயக்க தயாரித்த 113/69 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 8 என அடையாளமிடப்பட்ட காணியிலான வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

1-668/2

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 04 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி. எல். சி. (பதிவு இலக்கம் பிக்யூ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இலக்கம் : 64022 - பண்சல வத்தேகெதர விமலரத்ன அமரதுங்க ஆராச்சிகே சியாமளி பெரேரா

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி.. பணிப்பாளர்கள் சபையினால் 01.09.2008 ஆந் திகதியன்று கூட்டமொன்றில் பின்வருமாறு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது :-

"கடன் எடுத்த/காணியை ஈடுவைத்த பண்சல வத்தேகெதர விமலரத்ன மற்றும் அமரதுங்க ஆராச்சிகே சியாமளி பெரேரா என்பவர்கள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி. சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. இ. எப். எஸ். பெர்னாந்துவின் 1998.12.07 ஆந் திகதியுடைய முறிவு இலக்கம் 1779 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் மேற்படி முறிவு மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி. க்கு 2008.05.12 ஆந் திகதி வரை ரூபா 3,80,477.39 வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் அளித்த அதிகாரத்தின் பிரகாரம் மேற்படி சொல்லப்பட்ட முறிவு இலக்கம் 1779, மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பி.எல்.சி. க்கு ஈடுவைத்த இக்கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப் பட்ட பணத்தொகையான ரூபா 3,80,477.39 பணத்தொகையுடன் 13.05.2008 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை ரூபா 1,56,133.44 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 20% சத வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து (பணம் செலுத்தியபின் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், 99 இல் உரிமம் பெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஏவாகம கோரளையில் மதபத்து, வட்டரக கிராமத்தில் அமைந்துள்ள அட்டன்பொல லன்த என்ற காணியின் நிலஅளவையாளர் கே. டி. ஜி. வீரசிங்கவின் 1994.05.09 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 523ஏ காண்பிக்கப்பட்ட லொட் 64 இக் காணியின் எல்லைகள் - வடக்கு : லொட் 63 ; கிழக்கு : லொட் 82 (பாதை) ; தெற்கு : லொட் 65 ; மேற்கு : லொட் 40 மற்றும் 41 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 11.58பே.) அல்லது ஹெக்டேயர் 0.0293 மேற்படி வரைபடம் இலக்கம் 523 இக்காணி அவிசாவளை காணி பதிவகத்தில் N 180/72 பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கீழ்க் காணும் காணியூடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடன்:-

1. மேற்படி வட்டரக கிராமத்தில் அமைந்துள்ள "அட்டன்பொல லன்த" என்ற காணியின் மேற்படி வரைபடம் இலக்கம் 523 இல் காண்பிக்கப்பட்ட லொட் 3 எல்லைகள் வடக்கு : லொட் 90, 1, 2 மற்றும் 89 ; கிழக்கு: வரைபடம் இலக்கம் 3746 லொட் C ; தெற்கு : பாதை (கிராமபாதை) ; மேற்கு : வரைபடம் இங்கும் 2955 இல் லொட் 2 விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 2.69பே.) அல்லது ஹெக்டேயர் 0.0068 வரைபடம் இலக்கம் 523 படி அவிசாவளை காணிப் பதிவகத்தில் N 160 /60 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி வட்டரக கிராமத்தில் அமைந்துள்ள "அட்டன்பொல லன்த" என்ற காணியின் மேற்படி வரைபடம் இலக்கம் 523 இல் காண்பிக்கப்பட்ட லொட் 13 இக்காணியின் விஸ்தீரணம் வடக்கு : லொட் 6 ; கிழக்கு: லொட் 82, 53, 52, 51, 50, 49, 87, 48, 47, 46, 45, 44, 43, 42, 41, 40, 39, 38, 37, 36, 35, 32 மற்றும் 81 ; தெற்கு : லொட் 53, 52, 51, 50, 49,87, 48, 47, 76 மற்றும் 88 ; மேற்கு : லொட் 91, 92, 79, 31, 30, 29, 28, 27, 26, 25, 86, 24, 23, 22, 21, 20, 19, 18, 17, 16, 15, 14, 12, 11, 10, 9, 8, 85 மற்றும் 83. இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 1றூ. 33.54பே.) அல்லது ஹெக்டேயர் 0.1860 மேற்படி வரைபடம் இலக்கம் 523 இக்காணி அவிசாவளை காணி பதிவகத்தில் N 160 / 61 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி வட்டரக கிராமத்தில் அமைந்துள்ள "அட்டன்பொல லன்த" என்ற காணியின் மேற்படி வரைபடம் இலக்கம் 523 இல் காண்பிக்கப்பட்ட லொட் 81 இக்காணியின் எல்லைகள் - வடக்கு : லொட் 32, 33, 34 மற்றும் 72 ; கிழக்கு : லொட் 82 ; தெற்கு : லொட் 80 மற்றும் 73 - 76 ; மேற்கு : லொட் 13 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 18.74பே.) அல்லது ஹெக்டேயர் 0.0474 மேற்படி வரைபடம் இலக்கம் 523 இக்காணி அவிசாவளை காணி பதிவகத்தில் N 160 /62 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. மேற்படி வட்டரக கிராமத்தில் அமைந்துள்ள "அட்டன்பொல லன்த" என்ற காணியின் மேற்படி வரைபடம் இலக்கம் 523 இல் காண்பிக்கப்பட்ட லொட் 82 இக்காணியின் எல்லைகள் - வடக்கு : லொட் 84, ; கிழக்கு : லொட் 3 வரைபடம் இலக்கம் 2955 படி ; தெற்கு : லொட் 80 ; மற்றும் ; மேற்கு : லொட் 81, 72, 71, 70, 69, 68, 67, 66, 65, 64, 63, 62, 61, 60, 59, 58, 57, 56, 87, 55, 54, 51, 52, 53, 13, 6 மற்றும் 4 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 2றூ. 35.94பே.) அல்லது ஹெக்டேயர் 0.2935 மேற்படி வரைபடம் இலக்கம் 523 இக்காணி அவிசாவளை காணி பதிவகத்தில் N 160 / 63 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

5. மேற்படி வட்டரக கிராமத்தில் அமைந்துள்ள "அட்டன்பொல லன்த" என்ற காணியின் மேற்படி வரைபடம் இலக்கம் 523 இல் காண்பிக்கப்பட்ட லொட் 83 இக்காணியின் எல்லைகள் - வடக்கு : லொட் 6 ; கிழக்கு : லொட் 13 ; தெற்கு : லொட் 8 ; மற்றும் ; மேற்கு : லொட் 85 மற்றும் 7. இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 1.27பே.) அல்லது ஹெக்டேயர் 0.0032 இக்காணி அவிசாவளை காணி பதிவகத்தில் N 160 /64 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

6. மேற்படி வட்டரக கிராமத்தில் அமைந்துள்ள "அட்டன்பொல லன்த" என்ற காணியின் மேற்படி வரைபடம் இலக்கம் 523 இல் காண்பிக்கப்பட்ட லொட் 84 என்ற காணியின் எல்லைகள் - வடக்கு :

கிராம பாதை ; கிழக்கு : வரைபடம் இலக்கம் 2955 லொட் 3 ; தெற்கு : லொட் 82, 4 மற்றும் 5 மேற்கு : லொட் 2 வரைபடம் இலக்கம் 2955 படி இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 2.57பே.) அல்லது ஹெக்டேயர் 0.0065 மேற்படி வரைபடம் இலக்கம் 523 இக்காணி அவிசாவளை காணி பதிவகத்தில் N 160 / 65 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

7. மேற்படி வட்டரக கிராமத்தில் அமைந்துள்ள "அட்டன்பொல லன்த" என்ற காணியின் மேற்படி வரைபடம் இலக்கம் 523 இல் காண்பிக்கப்பட்ட லொட் 91 இக்காணியின் எல்லைகள் - வடக்கு : லொட் 73, ; கிழக்கு : லொட் 13 ; தெற்கு : லொட் 77 ; மேற்கு : லொட் 78 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 2.61பே.) அல்லது ஹெக்டேயர் 0.0066 மேற்படி வரைபடம் இலக்கம் 523 இக்காணி அவிசாவளை காணி பதிவகத்தில் N 160 / 66 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

8. மேற்படி வட்டரக கிராமத்தில் அமைந்துள்ள வரைபடம் இலக்கம் 2955 இல் காண்பிக்கப்பட்ட "அட்டன்பொல லன்த" என்ற காணியின் லொட் 3 (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) இக்காணியின் எல்லைகள் வடக்கு : ரோட் ; கிழக்கு : வரைபடம் இலக்கம் 3746 இல் காண்பிக்கப்பட்ட லொட் C ; தெற்கு : வரைபடம் இலக்கம் 3746 இல் லொட் B ; மேற்கு : லொட் 1 இக் காணியின விஸ்தீரணம் (0ஏ. 1றூ. 13பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 2955 இக்காணி அவிசாவளை காணி பதிவகத்தில் N 115 / 37 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

1-625

---

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கிறிஸ்ட்டல் ஹில் அவன்ஹல அன்ட் உத்சவ ஷாலாவ" என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் பங்காண்மையில் தொழில் கொண்டு நடாத்துகின்ற மாத்தளையைச் சேர்ந்த மெத்தகெதர பியசிறி தயாரத்ன மற்றும் வடுகெதர பியசீலி என்போர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். எம். ஜிப்ரி என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.08.28 ஆந் திகதிய 3941 ஆம் இலக்கங்கொண்ட மற்றும் 2007.06.29 ஆந் திகதிய 4204 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறிகளின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும் மேற்கூறப்பட்ட 3941 ஆம், 4204 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது 2008, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக எண்பது இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து இருநூற்று ஒரு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 80,39,201.52) கொண்ட தொகையும் 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா (ரூ. 43,75,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியும் அத்துடன் இருபத்தைந்து இலட்சம் ரூபா (ரூ. 25,00,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியும் சொல்லப்பட்ட மெத்தகெதர பியசிறி தயாரத்ன மற்றும் வடுகெதர பியசீலி என்போரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து எண்பது இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து இருநூற்று ஒரு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 80,39,201.52) கொண்ட தொகையை, 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா (ரூ. 43,75,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியுடன் அத்துடன் இருபத்தைந்து இலட்சம் ரூபா (ரூ. 25,00,000) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலைநாளன்று மீளாயப்படும் சராசரி எடை வீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 3941 ஆம், 4204 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க

ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 3941 ஆம், 4204 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

1. மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்திலுள்ள மாத்தளைத் தெற்கின் கம்பஹா சியனபத்துவில் உடுகமவில் அமைந்துள்ளதும், ''கிரிகல்பொட்ட தோட்டம்'' எனவழைக்கப்படும் காணியின் பகுதியாகவமைவதாய் மாத்தளையைச் சேர்ந்த உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. எஸ். சமரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1993, யூன் 15 ஆந் திகதி 4335 ஆம் இலக்கங்கொண்ட வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டவாறு பரப்பளவில் ஒரு றூட் இருபது பேர்ச்சஸ் (0ஏ. 01றூ. 20பே.)) கொண்டுள்ளதும், காணித்துண்டம் எக்ஸ் என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் எக்ஸ் பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : 10 அடி அணுகுகை ; கிழக்கிலும் தெற்கிலும் : அதே காணியின் பகுதி ; தென்மேற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டம் வை என அடையாளமிடப்பட்ட அதே காணியின் பகுதி ; மற்றும் மேற்கில் : மாத்தளையிலிருந்து தம்புல்லைக்கு இட்டுச் செல்கின்ற பெருவழி வீதி; பரப்பளவில் இது, அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் ஒரு றூட் இருபது பேர்ச்சஸ்களை (0ஏ. 1றூ. 20பே.) கொண்டுள்ளதுடன், மாத்தளைக் காணிப் பதிவக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கூறப்பட்ட உடுகமவில் அமைந்துள்ளதும், ''கிரிகல்பொட்ட தோட்டம்'' எனவழைக்கப்படுவதுமான காணியிலிருந்தும் வளவுகளிலிருந்தும் 4335 ஆம் இலக்கத்தைக் கொண்ட மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடத்தில் காணித்துண்டம் வை என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்தண்டம் வை பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கிலும் கிழக்கிலும் : சொல்லப்பட்ட 4335 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் எக்ஸ் என அடையாளமிடப்பட்ட அதே காணியில் எஞ்சியுள்ள பாகம் ; தெற்கில் : அதே காணியின் பகுதியைச் தனிவேறாக்குகின்ற வடலி மற்றும் கம்பி வேலி ; மற்றும் மேற்கில் : மாத்தளையிலிந்து தம்புல்லைக்கு இட்டுச் செல்கின்ற பெருவழி வீதி, பரப்பளவில் இது, அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் இருபது பேர்ச்சஸ்களை (0ஏ. 0றூ. 20பே.) கொண்டுள்ளதுடன், மாத்தளைக் காணிப் பதிவக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

1-656/3

---

### இ. அ. நி. கூ. வங்கி

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''பொத்துஹெரவைச் சேர்ந்த மயூரசேன மலவான என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். கே. அலாவ்வ என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1997.12.03 ஆந் திகதிய 13727 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும் 2008.09.30 ஆந் திகதியன்றுள்ளவாறாக எட்டு இலட்சத்து நான்காயிரத்து இருநூற்று முப்பத்திரண்டு ரூபா எண்பத்தேழு சதம் (ரூ. 8,04,232.87) கொண்ட தொகையும் 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை மூன்று இலட்சத்து தொண்ணூறாயிரத்து நாநூற்று இருபத்தைந்து ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 3,90,425.19) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபது தசம் ஐந்து சதவீத (20.5%) வட்டியும் மேற்கூறப்பட்ட ஈட்டுமுறியின் சொல்லப்பட்ட மயூரசேன மலவான என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதுள்ள கட்டிடங்களையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து எட்டு இலட்சத்து நான்காயிரத்து இருநூற்று முப்பத்திரண்டு ரூபா எண்பத்தேழு சதம் (ரூ. 8,04,232.87) கொண்ட மொத்தத் தொகையை, 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை மூன்று இலட்சத்து தொண்ணூறாயிரத்து நாநூற்று இருபத்தைந்து ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 3,90,425.19) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபது தசம் ஐந்து சதவீத (20.5%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 13727 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள கட்டிடங்களும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 13727 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

1. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள வெளடவில்லிஹத்பற்றுவின் மஹாகல்பொட மெகொட கோறளையில் அமுனுகமவில் அமைந்துள்ளதும், அமுனுகமவத்த எனவழைக் கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. டீ. பீ. ரெஜினோல்ட் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1974, மார்ச் 02 ஆந் திகதிய 2040 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 7ஏ1 எனக் குறித்துக்காட்டப்பட்டதுமான காணித்துண்டு ; சொல்லப்பட்ட

காணித்துண்டம் 7ஏ1, பரப்பளவில், அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் ஐந்து ஏக்கர் மூன்று றூட் ஐந்து பேர்ச்சஸ்களைக் (5ஏ. 3றூ. 5பே.) கொண்டுள்ளதுடன் பின்வரும் எல்லைகளையுடையது: வடக்கில் : வாவியும் காணித்துண்டம் 3ஏஉம் ; கிழக்கில் : முடிக்குரிய காணி ; தெற்கில் : காணித்துண்டங்கள் 8ஏ; மற்றும் 6ஏ மற்றும் மேற்கில் : வீதி.

2. மேற்கூறப்பட்ட அமுனுகமவில் அமைந்துள்ளதும், அமுனுகமவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. டீ. பீ. ரெஜினோல்ட் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1974, மார்ச் 02 ஆந் திகதிய 2040 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 7ஏ2 எனக் குறித்துக்காட்டப்பட்டதுமான காணித்துண்டு ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 7ஏ2, பரப்பளவில், அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் ஒரு ஏக்கர் ஒரு றூட் முப்பது பேர்ச்சுக்களைக் (1ஏ. 1றூ. 30பே.) கொண்டுள்ளதுடன் பின்வரும் எல்லைகளையுடையது: வடக்கில் : காணித்துண்டங்கள் 9ஏ1 மற்றும் 10பீ ; கிழக்கில் : காணித்துண்டம் 10அ ; தெற்கிலும் மேற்கிலும் : வீதி.

3. மேற்கூறப்பட்ட அமுனுகமவில் அமைந்துள்ளதும், அமுனுகமவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. டீ. பீ. ரெஜினோல்ட் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1974 மார்ச் 02 ஆந் திகதிய 2040 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 7பீ எனக் குறித்துக்காட்டப்பட்டதுமான காணித்துண்டு ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 7பீ, பரப்பளவில், அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் ஒரு ஏக்கர் ஒரு றூட் முப்பது பேர்ச்சுக்களைக் (1ஏ. 1றூ. 30பே.) கொண்டுள்ளதுடன் பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : வீதி ; கிழக்கில் : பளுவத்தவும் ஆர். எம். உக்கு அம்மாவினதும் ஏனையோரினதும் காணியும் ; தெற்கில் : ரொமேல் அப்புஹாமியின் காணி ; மேற்கில் : மீகஹாமுலவத்த.

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

1-655/1

---

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"பொல்கஹாவெலையைச் சேர்ந்த ஆரிய குலசிங்ககே லக்ஷ்மன் ஆரிய குலசிங்க என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். டபிள்யூ. ஹப்புவத்த என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001.06.29 ஆந் திகதிய 15073 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும் 2008, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒன்பது இலட்சத்து தொண்ணூற்றாறாயிரத்து இருநூற்று முப்பத்தைந்து ரூபா பத்து சதம் (ரூ. 9,96,235.10) கொண்ட தொகையும் 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஐந்து இலட்சம் ரூபா (ரூ. 5,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு பதினேழு சதவீத (17%) வட்டியும் சொல்லப்பட்ட ஆரியகுலசிங்ககே லக்ஷ்மன் ஆரியகுலசிங்க என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஒன்பது இலட்சத்து தொண்ணூற்றாறாயிரத்து இருநூற்று முப்பத்தைந்து ரூபா பத்து சதம் (ரூ. 9,96,235.10) கொண்ட மொத்தத் தொகையை, 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஐந்து இலட்சம் ரூபா (ரூ. 5,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு பதினேழு சதவீத (17%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 15073 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் அதன் கண்ணுள்ள பாதையுரிமையும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**15073 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

1. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள தம்பதேனி ஹத்பத்துவின் உடபொல ஒத்தொட்ட கோறளையிலுள்ள கல்படகமவில் அமைந்துள்ளதும், மஹாஹேன இப்பொழுது வத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏஜ பத்மதாச என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996, பெப்புருவரி 02 ஆந் திகதிய 646 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : கலபடகம வித்தியாலயத்திலிருந்து புதிய கொழும்பு, வீதி வரையிலான கி. ச. வீதி ; கிழக்கில் : மேற்பட்ட 646 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 ; தெற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 3, மற்றும்; மேற்கில்: பியதாசவின் காணி; பரப்பளவில் இது. அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் பதினைந்து தசம் மூன்று பேர்ச்சுக்களைக் (0ஏ. 0றூ. 15.3பே.) கொண்டுள்ளது.

2. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள தம்பதேனி ஹத்பத்துவின் உடபொல ஒத்தொட்ட கோறளையில் கல்படகம லிந்தரவில் அமைந்துள்ளதும், ஹிட்டினவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏஏ பத்மதாச என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996, பெப்புருவரி 02 ஆந் திகதிய 646 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : கலபடகம வித்தியாலயத்திலிருந்து புதிய கொழும்பு, வீதி வரையிலான கி. ச. வீதி ; கிழக்கில் : பாதை ; தெற்கில் : மேற்கூறப்பட்ட 646 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 3 ; மற்றும் மேற்கில்: சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1; பரப்பளவில் இது. அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் ஒரு ஏக்கர் மூன்று றூட் ஒன்று தசம் ஏழு பேர்ச்சுக்களைக் (1ஏ. 3றூ. 1.7பே.) கொண்டுள்ளது.

3. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள தம்பதேனி ஹத்பத்துவின் உடபொல ஒத்தொட்ட கோறளையிலுள்ள கல்படகமவில் அமைந்துள்ளதும், மஹாஹேன இப்பொழுது வத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏஏ பத்மதாச என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996, பெப்புருவரி 02 ஆந் திகதிய 646 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 3 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : அதே வபைடத்திலுள்ள காணித்துண்டம் 1 மற்றும் காணித்துண்டம் 2 ; கிழக்கில் : பப்லிசின் காணி ; தெற்கில் : தர்மரத்னவின் காணியும் கிராமவாசிகளின் நெல்வயல்களும் ; மற்றும் மேற்கில்: பப்லிசின் காணி ; பரப்பளவில் இது. அதன் மீதுள்ள எல்லாவற்றுடனும் ஒரு ஏக்கர் மூன்று றூட் நான்கு தசம் ஏழு பேர்ச்சுக்களைக் (1ஏ. 3றூ. 4.7பே.) கொண்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பணிப்பாளர்/பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

1-654

---

## இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"நுகேகொடையில் "நயந்தரா தீவர வெலந்தசல" என்ற பெயர் மகுடத்தின் குழுமத்தின் கீழும் உரிமையாளராகச் தொழில் கொண்டு நடாத்துகின்ற நுகேகொடையைச் சேர்ந்த திமுத் மஹாலியன என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வர்தன வங்கி சார்பில் பாணந்துறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. வீரசிங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.03.12 ஆந் திகதிய 1352 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்தவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், 2008, ஓகத்து 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக இருபத்தெட்டு இலட்சத்து முந்நூற்று இருபத்திரண்டு ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ. 28,00,322.64) கொண்ட தொகையும் 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு சதவீத (36%) அல்லது வசதிக்கு ஏற்புடையற்பாலதாகக் கூடிய வேறேதேனும் வீத வட்டியும் சொல்லப்பட்ட முறி மீது சொல்லப்பட்ட திமுத் மஹாலியன என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து இருபத்தெட்டு இலட்சத்து முந்நூற்று இருபத்திரண்டு ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ. 28,00,322.64) கொண்ட தொகையை, 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் முப்பத்தாறு வீத (36%) அல்லது வசதிக்கு ஏற்புடையற்பாலதாகக்கூடிய வேறேதேனும் வீத வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்கான 1352 ஆம் இலக்கங் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 1352 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிற்றிக் கோறளையின் பள்ளே பத்துவில் தெஹிவளை -கல்கிசை மாநகரசபை எல்லைகளினுள் கொஹுவலையில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள மரங்களுடனும், பயிர்களுடனும், எல்லாவற்றுடனும் தங்கஹாகும்புர மற்றும் தங்கஹாஓவிட்ட எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. எம். ஏ. எச். பண்டார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005, செத்தெம்பர் 25 ஆந் திகதிய 2076 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் ஏ1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் ஏ1 பின்வரும் எல்லைகளையுடையது :- வடக்கில் : தெப எல ; கிழக்கில் :

காணித்துண்டங்கள் ஏ2 மற்றும் ஏ3 (10 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்) ; தெற்கில் : 719 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் பீ ; மற்றும் மேற்கில் : சுனேத்ரா ரணசிங்காவின் காணி ; பரப்பளவில் இது, ஒன்பது தசம் ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 9.7பே.) அல்லது 0.0245 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளது. உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. எம். ஏ. எச். பண்டார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005, செத்தெம்பர் 25 ஆந் திகதிய 2076 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் ஏ3 இலும் அதன்மீதும் அது நெடுகிலுமான பாதையுரிமையுடனும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. எம். ஏ. எச். பண்டார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.09.25 ஆந் திகதிய 2076 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள 15 அடி அகலமான பாதையுரிமையுடனும் சேர்த்து.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான
நிறைவேற்றுறலுவலர்.

இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

1-655/3

---

### இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''பொல்கசோவிட்டவைச் சேர்ந்த மொலகொட நாரங்கசன்கேகெதரே தயானந்த என்பவர், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட் சார்பில் பாணந்துறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. வீரசிங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.07.23 ஆந் திகதிய 1475 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்தவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், 2008, ஓகத்து 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக முப்பத்தாறு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து முந்நூற்று நாற்பத்தேழு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 36,69,347.57) கொண்ட தொகையும் 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு சதவீத (36%) அல்லது இவ்வசதிக்கு ஏற்புடையற்பாலதாகக் கூடிய வேறேதேனும் வீத வட்டியும் சொல்லப்பட்ட முறி மீது சொல்லப்பட்ட மொலகொட நாரங்க சன்கேகெதர தயானந்த என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதுள்ள கட்டடங்களையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து முப்பத்தாறு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து முந்நூற்று நாற்பத்தேழு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 36,69,347.57) கொண்ட தொகையை, 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு வீத (36%) அல்லது இவ்வசதிக்கு ஏற்புடையற்பாலதாகக்கூடிய வேறேதேனும் வீத வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 1475 ஆம் இலக்கங் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள கட்டிடங்களும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 1475 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணத்திலுள்ள சல்பிற்றிக் கோறளையின் பள்ளே பத்துவில் கொழும்பு மாவட்டத்திலுள்ள கெஸ்பாவ நகர சபை எல்லைகளினுள் ஹொன்னந்தர கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. ஏ. எஸ். ஏ. குணசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.08.25 ஆந் திகதிய 149 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் 1 இன் உட்பிரிவிடுகையொன்றாகவுள்ளதும், குருகஹாகந்த குருகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஜே. பீ. என். ஜயசுந்தர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.06.13 ஆந் திகதிய 6491 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 01 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது :- வடக்கில் : வீதி (பெருவழி) ; கிழக்கில் : சீ. டீ. ரோசலின்னின் காணி ; தெற்கில் : காணித்துண்டம் 2 மற்றும் காணித்துண்டம் 3 இன் திரும்பும் கட்டடத்துடன் 10 அடி அகலமான வீதிக்கான (ஒதுக்கிடம்) ; மற்றும் மேற்கில் : இதன் திரும்பு வட்டத்துடன் 10 அடி அகலமான வீதிக்கான (ஒதுக்கிடம்) ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 6491 ஆம் இலக்க வரைபடத்தின்படி, அதன்மீதுள்ள வேறு எல்லாவற்றுடனும் இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) கொண்டுள்ளது.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான
நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி. கூ. வர்தன வங்கி,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

1-655/5

## இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''(இதகனத்துப் பின்னர் ''பங்காளிகள்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவோரும்), அம்பகஸ்தோவவில் "ரதம்ப என்ஜினியேரிங் வேர்க்ஸ்'' என்ற பெயர்மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் பங்காண்மையில் தொழில்கொண்டு நடாத்துவோருமான கெரகல ஆராச்சிகே சோமசேன மற்றும் கெரகல ஆராச்சிகே கீதா பிரசங்கா என்போர், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட் சார்பில் பதுளையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எச். எம். சீ. சீ. எச். மெனிக்கே என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, திசெம்பர் 21 ஆந் திகதிய 966 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளராதலாலும், 2008, ஒற்றோபர் 1 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒன்பது இலட்சத்து அறுபதாயிரத்து தொளாயிரத்து எழுபத்தேழு ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூ. 9,60,977.54) கொண்ட தொகையும் 2008, நவெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு சதவீத (36%) வட்டியும் சொல்லப்பட்ட 966 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது சொல்லப்பட்ட கெரகல ஆராச்சிகே சோமசேன மற்றும் கெரகல ஆராச்சிகே கீதா பிரசங்கா என்போரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஒன்பது இலட்சத்து அறுபதாயிரத்து தொளாயிரத்து எழுபத்தேழு ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூ. 9,60,977.54) கொண்ட தொகையை, 2008, நவெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை முப்பத்தாறு வீத (36%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 966 ஆம் இலக்கங் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 966 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டம், உடுகிந்த பிரிவு, யட்டிபலாத்த கோறளையிலுள்ள ரதம்பேயில் அமைந்துள்ளதும், ரதம்பே எல்ல பட்டன மறுபெயர் கொஹெம்பகஸ் தென்ன எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1998.02.02 ஆந் திகதிய 1365 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 02 எனக் குறித்துகாட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான காணியின் அப்பாகம் அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : காணித்துண்டம் 2 ; கிழக்கில் : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 571/பீ ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 6 ; தெற்கில் : அதே காணியின் எஞ்சியுள்ள பாகம் ; மற்றும் மேற்கில் : காணித்துண்டம் 3 வீதி; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) கொண்டுள்ளதுடன், பதுளைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான
நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

1-656/2

---

## இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''(இதகனத்துப்பின்னர் 'கம்பனி'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை வத்தயில் கொண்டுள்ளதும், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதுமான மிர்ரா இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஐ. கருணானந்த என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, சனவரி 01 ஆந் திகதிய 380 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்தவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், 2008, யூன் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஐம்பத்தொரு இலட்சத்து ஒன்பதாயிரத்து தொளாயிரத்து ஒரு ரூபா தொண்ணூற்றொன்பது சதம் (ரூ. 51,09,901.99) கொண்ட தொகையும் 2008, யூலை 1 ஆந் திகதி தொடக்கம் ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு வீத (36%) அல்லது வசதிக்கேற்புடையதாகக்கூடிய வேறேதேனும் வீத வட்டியும் அத்துடன் எண்பது இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து

அறுநூற்று நாற்பத்து நான்கு ரூபா எழுபது சதம் (ரூ. 80,93,644.70) கொண்ட தொகையும் 2008, யூலை 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை முப்பது இலட்சத்து இருபதாயிரத்து நூற்று இருபது ரூபா நாற்பத்து நான்கு சதம் (ரூ. 30,20,120.44) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபது சதவீத (20%) வட்டியும் அத்துடன் முப்பத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து எழுபத்தைந்து ரூபா (ரூ. 33,97,075) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தெட்டு வீத (28%) வட்டியும் சொல்லப்பட்ட முறி மீது சொல்லப்பட்ட மிர்ரா இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்திடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும்,

இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின்மீதுள்ள கட்டிடங்களையும் பாதையுரிமைகளையும் வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஐம்பத்தொரு இலட்சத்து ஒன்பதாயிரத்து தொளாயிரத்து ஒரு ரூபா தொண்ணூற்றொன்பது சதம் (ரூ. 51,09,901.99) கொண்ட தொகையை, 2008, யூலை 1 ஆந் திகதி தொடக்கம் ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு வீத (36%) வட்டியுடன் அல்லது வசதிக்கேற்புடையதாகக்கூடிய வேறேதேனும் வீதி வட்டியுடன் அத்துடன் எண்பது இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து அறுநூற்று நாற்பத்து நான்கு ரூபா எழுபது சதம் (ரூ. 80,93,644.70) கொண்ட தொகையும், 2008, யூலை 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை முப்பது இலட்சத்து இருபதாயிரத்து நூற்று இருபது ரூபா நாற்பத்து நான்கு சதம் (ரூ. 30,20,120.44) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபது சதவீத (20%) வட்டியும் அத்துடன் முப்பத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து எழுபத்தைந்து ரூபா (ரூ. 33,97,075) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தெட்டு வீத (28%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 380 ஆம் இலக்கங் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள கட்டிடங்களும் பாதையுரிமையும் வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**380 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம். கம்பஹா மாவட்டத்திலுள்ள அளுத்குறு கோறளையின் ராகம் பத்துவில் வத்தளை பிரதேச சபையின் ஹெந்தல உபஅலுவலகத்தினுள் கெரவலப்பிட்டியவில் அமைந்துள்ளதும், 82/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தை (பாகம்) கொண்டதும், தெல்கஹாவத்த மற்றும் தவட்டகஹா குறுந்துவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். யூ. ஆர். எச். ஆர். சமரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005, மே 10 ஆந் தகதிய 4363 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : சிட்னி விஜேசேக்கரவினதும் இம்மானுவேல் யோசேப்பினதும் காணிகள் கிழக்கில் : கே. எவ். பி. பிரான்சிஸ், சிறிபால இஹல கமகே மற்றும் டெக்ஸ்ட்டர் ஜே. ஸ்ரட்டன்பேர்க் என்போரின் காணிகள் ; தெற்கில் : ஜோசப்பின் சப்ரமாதுவின் காணி மற்றும் ; மேற்கில் : 10/1973 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டங்கள் ஈ2 மற்றும் ஈ1 (12 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்) ; பரப்பளவில் இது, இருபது பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 20பே.) கொண்டுள்ளது.

உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. பாலசுந்தரம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1973.03.01 ஆந் திகதிய வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் இல. எவ் இலும் அதன் மீதும் அது நெடுகிலுமான பாதையுரிமையுடன் சேர்த்து.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான
நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

1-655/2

---

**இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைப் பன்னலவில் கொண்டுள்ளதுமான ஸ்டார்டெக்ஸ் மனுபக்சரிங் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனம், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். குணரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இரண்டும் 2006.12.18 ஆந் திகதிய 1870 ஆம் மற்றும் 1871 ஆம், 2005.05.06 அந் திகதிய 1600 ஆம், 2007.02.08 ஆந் திகதிய 1893 ஆம் மற்றும் 2005.05.06 ஆந் திகதிய 1599 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறிகள் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்தவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், 2008, ஓகத்து 1 ஆந் திகதியன்றுள்ளவாறாக எழுபத்தாறு இலட்சத்து எழுபத்தையாயிரத்து எழுநூற்று பத்து ரூபா தொண்ணூற்று ஒன்பது சதம் (ரூ. 76,75,710.99) கொண்ட தொகையும் 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு

சதவீத (36%) அல்லது வசதிகளுக்காக ஏற்புடையற்பாலதாகக்கூடியதாக வேறேதேனும் வீத வட்டியுடன் அத்துடன் ஒரு இலட்சத்து ஐயாயிரத்து எழுநூற்று ஐம்பத்தொரு ஐக்கிய அமெரிக்க டொலர் ஐம்பத்து நான்கு சதம் (ஐஅடொ. 105,751.54) கொண்ட தொகையும் 2008, செத்தெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் ஆண்டொன்றுக்கு பன்னிரண்டு வீத (12%) அல்லது வசதிகளுக்காக ஏற்புடையற்பாலதாகக்கூடியதாக வேறேதேனும் வீத வட்டியுடனும் அத்துடன் முப்பத்து எட்டு இலட்சத்து முப்பத்தோராயிரத்து நூற்று முப்பத்தேழு ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூ. 38,31,137.55) கொண்ட தொகையும், 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை இருபத்தாறு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து அறுநூற்று எழுபத்தொரு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 26,97,671.90) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு சதவீத (36%) வட்டியுடனும், இருபத்து மூவாயிரத்து முப்பத்தொரு ஐக்கிய அமெரிக்க டொலர் அறுபத்தெட்டுச் சதம் (ஐஅடொ23,031.68) கொண்ட தொகையும், 2008 செத்தெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை இருபதாயிரத்து இருநூற்று அறுபத்தெட்டு ஐக்கிய அமெரிக்க டொலர் நாற்பத்திரண்டு சதம் (ஐஅடொ. 20,268.42) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்குப் பன்னிரண்டு சதவீத (12%) வட்டியுடனும், நான்கு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து நான்கு ஐக்கிய அமெரிக்க டொலர் முப்பத்தெட்டு சதம் (ஐஅடொ 452,004.38) கொண்ட தொகையும், 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை இரண்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்தெட்டு ஐக்கிய அமெரிக்க டொலர் அறுபத்துநான்கு சதம் ( ஐஅடொ 242,758.64) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு பத்துத் தசம் மூன்று ஆறு சதவீத (10.36%) வட்டியுடனும் ஒரு இலட்சத்து இருபத்தாறாயிரத்து ஐந்நூற்றியெண்பது ஐக்கிய அமெரிக்க டொலர் முப்பத்தேழு சதம் (ஐஅடொ. 126,580.37) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு ஏழு தசம் எட்டு ஆறு சதவீத (7.86%) வட்டியுடன், முப்பத்திரண்டாயித்து முந்நூற்றியென்பத்தி நான்கு ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐஅடொ. 32,384) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு பத்துத் தசம் இரண்டு மூன்று சதவீத (10.23%) வட்டியுடனும், சொல்லப்பட்ட முறிகளின் மீது சொல்லப்பட்ட ஸ்டார்டெக்ஸ் மனுபெக்சரிங் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்திடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து சொல்லப்பட்ட எழுபத்தாறு இலட்சத்து எழுபத்தையாயிரத்து எழுநூற்று பத்து ரூபா தொண்ணூற்று ஒன்பது சதம் (ரூ. 76,75,710.99) கொண்ட தொகையை, 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு வீத (36%) அல்லது வசதிக்காக ஏற்புடையற்பால தாகக்டியதாக வேறேதேனும் வீத வட்டியுடன் அத்துடன் ஒரு இலட்சத்து ஐயாயிரத்து எழுநூற்று ஐம்பத்தொரு ஐக்கிய அமெரிக்க டொலர் ஐம்பத்து நான்கு சதம் (ஐஅடொ. 1,05,751.54) கொண்ட தொகையும் 2008, செத்தெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் ஆண்டொன்றுக்கு பன்னிரண்டு வீத (12%) அல்லது வசதிக்காக ஏற்புடையற்பாலதாகக்கூடிய வேறேதேனும் வீத வட்டியுடனும் அத்துடன் முப்பத்து எட்டு இலட்சத்து முப்பத்தோராயிரத்து நூற்று முப்பத்தேழு ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூ. 38,31,137.55) கொண்ட தொகையும், 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை இருபத்தாறு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து அறுநூற்று எழுபத்தொரு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 26,97,671.90) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு சதவீத (36%) வட்டியுடனும், இருபத்து மூவாயிரத்து முப்பத்தொரு ஐக்கிய அமெரிக்க டொலர் அறுபத்தெட்டுச் சதம் (ஐஅடொ23,031.68) கொண்ட தொகையும், 2008 செத்தெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை இருபதாயிரத்து இருநூற்று அறுபத்தெட்டு ஐக்கிய அமெரிக்க டொலர் நாற்பத்திரண்டு சதம் (ஐஅடொ. 20,268.42) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்குப் பன்னிரண்டு சதவீத (12%) வட்டியுடனும், நான்கு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து நான்கு ஐக்கிய அமெரிக்க டொலர் முப்பத்தெட்டு சதம் (ஐஅடொ 4,52,004.38) கொண்ட தொகையும், 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை இரண்டு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பத்தெட்டு ஐக்கிய அமெரிக்க டொலர் அறுபத்துநான்கு சதம் ( ஐஅடொ 2,42,758.64) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு பத்துத் தசம் மூன்று ஆறு சதவீத (10.36%) வட்டியுடனும் ஒரு இலட்சத்து இருபத்தாறாயிரத்து ஐந்நூற்றியென்பது ஐக்கிய அமெரிக்க டொலர் முப்பத்தேழு சதம் (ஐஅடொ. 1,26,580.37) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு ஏழு தசம் எட்டு ஆறு சதவீத (7.86%) வட்டியுடனும், முப்பத்திரண்டாயிரத்து முந்நூற்றியெண்பத்தி நான்கு ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐஅடொ.32,384) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு பத்துத் தசம் இரண்டு மூன்று சதவீத (10.23%) வட்டியுடனும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 1871, 1870, 1600, 1893 மற்றும் 1599 ஆம் இலக்கங் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள்மூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**1871, 1870, 1893 மற்றும் 1599 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள கட்டுகம்பொல ஹத்பத்துவின் கட்டுகம்பொல மெதபத்து கோறளை கிழக்கில் பன்னல பிரதேச சபை எல்லைகளினுள் கெக்கில்லபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும், மரங்களுடனும், பயிர்களுடனும், வேறெல்லாவற்றுடனும் எஸ்செல்லேவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜே. எம். டயஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004, செத்தெம்பர் 27 ஆந் திகதிய 3712ஏ ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டு பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில்: உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். அபேரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1997, சனவரி 07 ஆந் திகதிய 250 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் ஏ ; கிழக்கில் : வீதியும் (கி. ச.), உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். ஏ. எம். சீ. பண்டார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1991, நவெம்பர் 21 ஆந் திகதிய 426 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 5 இன் எஞ்சியுள்ள பாகமும் ;

தெற்கில் : 426 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 5 இன் எஞ்சியுள்ள பாகம் ; மற்றும் மேற்கில் : அப்புஹாமியின் திகனபில்லேவ ஆதனம் ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 3712ஏ ஆம் இலக்க வரைபடத்தின்படி மூன்று ஏக்கர் ஒரு றூட் பதினாறு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சஸ்கள் (3ஏ. 1று. 16.50பே.) கொண்டுள்ளது.

**1600 ஆம் இலக்க ஈட்டு முறி மூலம் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களின் விவரணம்**

பின்வருவன உட்பட அசைவுள்ள பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி மற்றும் சாதனம் முழுவதும் :-

| விவரணம் | | எண்ணிக்கை |
|---|---|---|
| தைத்தல் | | |
| தனி | கேரீ-8500 என்டபிள்யூகென்ட் எல் 818என்-எம்1 சிருபா | 102 |
| இரட்டை ஊசி | சிருபா ரீ828-42-064 எம்எல் | 07 |
| பட்டன்ஹோல் | கேபீஎச்-780-சாம்ஸ் | 04 |
| ஓவர் லொக் | எஸ்எச்-7004-கிங்டெக்ஸ் 747 -சிருபா | 47 |
| ப்லட் லொக் | எவ்00 7ஜே, சிருபா எவ்டபிள்யூ-777சீபீ கென்ட்ஸ்பீசியா எவ்ரீ 6503-0.56எம் கிங்டெக்ஸ் சீ007ஜே -சிருபா | 32 |
| ஸ்னப் பட்டன் | இசட்என்ஜீஓ | 02 |
| கன்சாய் | வீசீ008, கென்ட்ஸ்பீசியா | 04 |
| பொத்தான் இணைப்பான் | சீஎஸ்பீ 7100-ரீ-கோல்டன் வீல் | 04 |
| பைப்பிங் வெட்டுவான் | எஸ்எம்-992-கென்ட் ஸ்பீசியா | 01 |
| பார் டக் | ஜேஎல்-1850-42எம், ஜியன்லியன் | 03 |
| நூல் மீள்சுற்றி | ஓடபிள்யூ-40, ஒஷிமா | 02 |
| இணைக்கும் பொறி | 2435 5ஜீ, ஹொங் கியுஎல்எம்ஏ | 90 |
| பின்னும் பொறிகள் | எச்பி/எஸ்டீ 11 | 16 |
| டாக் பொறிகள் | | 12 |
| கழுவுதல் | | |
| பொறிகள் | | 02 |
| கழுவுதல் உலர்த்தி | | 02 |
| வெட்டுதல் | | |
| பொறி அ. | எம்ஏ200யூ-30" | 03 |
| பொறி ஆ. | கேஎல்ஈசீ80029 11.5 | 02 |
| அழுத்துதல் | | |
| சலவைப்பெட்டி மேசைகள் | சீஎச் 711 | 18 |
| நீராவி சலவைப்பெட்டி | சீஎச்711 | 18 |
| மின்சலவைப்பெட்டி | சீஎச்711 | 18 |
| தீசல் பிறப்பாக்கி | 432ஆர்எஸ்எல் 4015 | 01 |
| தீசல் கொதிப்பான் | ஓஎம்/3 | 01 |
| மின் கொதிப்பான் | எல்பி/பீஈ 18எச்1 | 02 |

குருநாகல் மாவட்டத்திலுள்ள பன்னல, தலம்மஹர, எசெல்ல வத்தவிலுள்ள வளவுகளிலும் அவற்றின் மீதும் வேறெவையேனும் கிட்டங்களிலும் அவற்றின் மீதும் அல்லது களஞ்சியங்களிலும் அவற்றின்மீதும் இப்போது கிடைக்கும் உதிரிப்பாகங்களுடனும் துணைப் பொருட்களுடனும் கருவிகளுடனும் சேர்த்து.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/
பிரதான நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி. கூ. வர்தன வங்கி,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

1-655/7

---

**செலான் வங்கி ப. வ. க.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கிணங்க PQ 9 குறியீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

'

கணக்கு இல. 0150-01370482-001 (அபிவிருத்தி வங்கித்தொழில்)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2008.10.17 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது:-

"கண்டியில் N(PVS) 12316 என்ற பதிவிலக்கத்தின் கீழ் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியான வா-லூ அக்குவா (பிரைவெட்) லிமிட்டெட், கண்டியைச் சேர்ந்த பொன்சேக்காவின் மகள் மானெல் தெரேஸ்ஸே எதிரிசிங்க மற்றும் கண்டியைச் சேர்ந்த டேவிட் சந்திரசிறி எதிரிசிங்க "கடனெடுத்தவர்கள்" என்ற வகையில் செலான் வங்கி ப. வ.க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். பரம்சோதி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, ஒகத்து03 ஆந் திகதிய 1566 மற்றும் 2004 ஒகத்து 3 ஆந் திகதிய 1568 மற்றும் பிரசித்த நொத்தாரிசு எஸ். என். பர்னாந்துவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, ஏப்பிறல் 22 ஆந் திகதிய 202 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2007, நவெம்பர் 30 ஆந் திகதி யன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது ஒரு கோடி எண்பத்து மூன்றுஇலட்சத்து இருபத்தெட்டாயிரத்து நாநூற்று பத்து ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 1,83,28,410.12) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால், சொல்லப்பட்ட ரூ. 1,83,28,410.12 பணத்தொகையையும் 2007, திசெம்பர் 01 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தைந்து சதவீதப்படி (35%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1566, 1568

மற்றும் 202 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப.வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான முதலாம், இரண்டாம், மூன்றாம், அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### முதலாம் அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தினுள்ளும் மாநகர சபையினுள்ளும் யட்டிநுவரவின் கங்கவத்த கோறளேயில் வட்டறன்தன்னையில் அமைந்துள்ள வட்டறதன்ன எஸ்டேட் என்றழைக்கப்படும் காணி தொடர்பில் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் மிஸ்ஸோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1950, யூலை 16 ஆந் திகதி மற்றும் 17 ஆந் திகதிய வரைபடம் இல. 2830 இல் துண்டுகள் 2 மற்றும் 3 இலிருந்து பிரிக்கப்பட்ட ஒரு பங்காயுள்ளதும் கண்டி மாவட்டக் காணிப்பதிவகத்தில் முறையே A102/75 மற்றும் 76 ஆம் உரித்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதுமான) உத்தரவுபெற்ற நிலஅளைவையாளரும் மட்டம் பார்ப்பவருமான எச். ஆர். பர்னாந்துவால் தயாரிக்கப்பட்ட 1968, திசெம்பர் 4 ஆந் திகதிய 4625 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 65 எனக் குறிக்கப்பட்ட காணிப் பங்கீடு முழுவதும் சொல்லப்பட்ட 4625 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 49 இன் (வீதிக்கான ஒதுக்கம்) மேலாக வழி உரிமை கொண்டதாக சொல்லப்பட்ட 4625 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் எல்லைகள் - வடக்கு : அதே காணியின் பகுதி ; கிழக்கு : திருமதி சி. சொய்சாவின் ஆதனம் ; தெற்கு : துண்டு 64 ; மேற்கு : துண்டுகள் 47 மற்றும் 49 (வீதிக்கான ஒதுக்கம்). இது பூச்சியம் ஏக்கர் இரண்டு றூட் முப்பத்தொன்று தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சஸ் (0ஏ. 2றூ. 31.10பே.) விஸ்தீரணமுள்ளது.

சொல்லப்பட்ட துண்டு 65 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு பின்னர் மீள் அளவிடப்பட்டு இப்போது பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது :-

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தினுள்ளும் மாநகர சபையினுள்ளும் யட்டிநுவரவின் கங்கவத்த கோறளேயில் வட்டறன்தன்னவில் அமைந்துள்ள வட்டறதன்ன எஸ்டேட் என்றழைக்கப்படும் காணியின் பங்காயுள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எச். எம். நவரத்னவால் தயாரிக்கப்பட்ட 1996, ஓகத்து 27 ஆந் திகதிய 10213 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள ஏனைய எல்லாவற்றுடனும் இதன் எல்லைகள் - வடக்கு: அதே காணியின் எஞ்சிய பகுதி ; கிழக்கு : திருமதி சி. சொய்சாவின் ஆதனம் ; தெற்கு : அதே காணியின் எஞ்சிய பங்கு மற்றும் வீதி ஒதுக்கம் ; மேற்கு : வீதி ஒதுக்கம் மற்றும் அதே காணியின் எஞ்சிய பங்கு. இது இரண்டு றூட் முப்பத்தொன்று தசம் ஒன்று பூச்சியம் பேர்ச்சஸ் (0ஏ. 2றூ. 31.10பே.) விஸ்தீரணமுள்ளது.

### இரண்டாம் அட்டவணை

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்*

கடன் இலக்கம் : 0900000464
கடனாளியின் முழுப்பெயர் : மெனிக்ரத்ன படல்கே அமரஜீவ

"தங்காலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. பீ. எஸ். ஆர். குணசேகர என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 8058 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2000.12.17 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து இருபத்தேழாயிரத்து எழுநூற்று அறுபத்துநான்கு ரூபா பதினைந்து சதம் (ரூபா 1,27,764.15) 2005.06.30 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்,

1. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான தொண்ணூற்று இரண்டாயிரத்து ஐநூற்று ஐந்து ரூபா இருபத்தேழு சதத்தினையும் (ரூ. 92,505.27) அதற்கான 2005.06.30 ஆந் திகதி வரையிலான வட்டியாக முப்பத்தையாயிரத்து இருநூற்று ஐம்பத்தெட்டு ரூபா எண்பத்தெட்டு சதத்தினையும் (ரூ. 35,258.88) மொத்தமாக ஒரு இலட்சத்து இருபத்தேழாயிரத்து எழுநூற்று அறுபத்துநான்கு ரூபா பதினைந்து சதத்தினையும் (ரூபா 1,27,764.15) அறவீடு செய்யவும்;

2. குறிப்பிட்ட தொண்ணூற்று இரண்டாயிரத்து ஐநூற்று ஐந்து ரூபா இருபத்தேழு சதத்திற்கான (ரூ. 92,505.27) அறவீடு செய்ய வேண்டிய 15.00% மான வருடாந்த வட்டியினை 2005.07.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்;

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை.

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழிந்த பின்பு) மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் ஜீ. பீ. ஆனந்த என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.".

### அட்டவணை

தென் மாகாணத்தில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், வடக்கு கிருவா பத்துவவில் கொஹொலான F.V.P. 226) என்ற கிராமத்தில் அமைந்துள்ள காணித்துண்டிலக்கம் 06 குனுராலகேவத்த எனப்படும் காணிக்கு 2000.02.11 ஆந் திகதி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் ஆர். மீகம என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1526 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 01 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே : வெலபிட்டியவில் இருந்து வலஸ்முல்ல வரையிலான பிரதான பாதையும் ; கிழக்கே : பிரதான பாதையிலிருந்து கலஹிட்டியாவ வரையிலான பாதையும் ; தெற்கே : 1992.11.16 ஆந் திகதியிடப்பட்ட 616 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 5 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கே : F.V.P. 226 இன்படி 02 ஆம் இலக்க காணித்துண்டும் மற்றும் 21 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு முப்பத்தைந்து தசம் எட்டு பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 35.8பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம், மரங்கள், மற்றும் அனைத்துடன் பாதைக்கான உரிமையும் தங்காலை காணிப் பதிவு அலுவலகத்தில் E 136/258 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

1-687

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி.

(ஹட்டன் நஷனல் வங்கி என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(புசல்லாவ கிளை) - பொல்வத்தே சிரியலாகே அமரதுங்க மற்றும் பொல்வத்த சிரியலாகே கிறவின்

ஹட்டன் நாஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2008, நவெம்பர் 27 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"பொல்வத்தே சிரியலாகே அமரதுங்க மற்றும் பொல்வத்த சிரியலாகே கிறவின் என்போர், கடப்பாடுடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் கண்டி பிரசித்த நொத்தாரிசு எம். எஸ் பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, ஓகத்து 12 ஆந் திகதியிடப்பட்ட 967 ஆம் இலக்க முறி, மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2008 செத்தெம்பர் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது ஐந்து

இலட்சத்து முப்பத்தையாயிரதது ஐநூற்று பன்னிரண் ரூபா எண்பது சதம் (ரூ. 5,35,512.80) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 967 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவும் சொல்லப்பட்ட (ரூபா 5,35,512,80) பணத்தொகையை, 2008, ஒற்றோபர் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டி யுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவு கள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

1. மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட ரம்பொட கோறளை, சங்கிலிப்பாலத்தில் உள்ள வேவன்டன் எஸ்டேட் என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். எம். என். ரி. கே. மாரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 2005, யூலை 29 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 927 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு ஏ என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : பீ. பீ. என். யூ. 968 இல் உள்ள காணித்துண்டு 11 ; கிழக்கு : வீதி ; தெற்கு : வீதி ; மேற்கு : பீ. பீ. என். யூ. 968 இல் உள்ள காணித்துண்டு 19 அத்துடன் நுவரெலியா மாவட்ட காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் கியூ. 134/284 இல் பதிவு செய்யப்பட்ட பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.5பே.) (ஹெக்டயர் 0.034) விஸ்தீரணம் கொண்ட காணியுடனான கட்டடங்கள் மற்றும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஆதனம்.

2. மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட ரம்பொட கோறளை, சங்கிலிப்பாலத்தில் உள்ள வேவன்டன் எஸ்டேட் என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். எம். என். ரி. கே. மாரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 2005, யூலை 29 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 927 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு பி என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : வீதி ; கிழக்கு : பீ. பீ. என். யூ. 968 இல் உள்ள காணித்துண்டு 05 ; தெற்கு : பீ. பீ. என். யூ. 968 இல் உள்ள காணித்துண்டு 22 ; மேற்கு : பீ. பீ. என். யூ. 968 வில் உள்ள காணித்துண்டு 22 அத்துடன் நுவரெலியா மாவட்ட காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் கியூ. 134/326 இல் பதிவு செய்யப்பட்ட ஐந்து தசம் ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 5.9பே.) (ஹெக்டயர் 0.015) விஸ்தீரணம் கொண்ட காணியுடனான கட்டடங்கள் மற்றும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

1-702/6

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : 0700001228
கடனாளியின் முழுப்பெயர் : கோராளகே எரிக் பிரசன்ன எனப்படும் எரிக் பிரசன்ன கோராளகே

''கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். அக்குருகொட என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 159 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2001.08.10 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து இருபதாயிரத்து எந்நூற்று முப்பத்தெட்டு ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூபா 1,20,838.94) 2007.11.30 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்,

1. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான ஒரு இலட்சத்து ஏழாயிரத்து தொளாயிரத்து ஒரு ரூபா அறுபத்தைந்து சதத்தினையும் (ரூ. 1,07,901.65) அதற்கான 2007.11.30 ஆந் திகதி வரையிலான வட்டியாக பன்னிரண்டாயித்து தொளாயிரத்து முப்பத்தேழு ரூபா இருபத்தொன்பது சதத்தினையும் (ரூ. 12,937.29) மொத்தமாக ஒரு இலட்சத்து இருபதாயிரத்து எந்நூற்று முப்பத்தெட்டு ரூபா தொண்ணூற்று நான்கு சதத்தினை (ரூபா 1,20,838.94) அறவீடு செய்யவும்;

2. குறிப்பிட்ட ஒரு இலட்சத்து ஏழாயிரத்து தொளாயிரத்து ஒரு ரூபா அறுபத்தைந்து சதத்திற்கான (ரூ. 1,07,901.65) அறவீடு செய்ய வேண்டிய 13.90% மான வருடாந்த வட்டியினை 2007.12.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்;

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை.

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழிந்த பின்பு) மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்துக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம்

மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் ஜீ. பி. ஆனந்த என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது".

### அட்டவணை

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், கங்கபொட பத்துவவில் திவிதுரே மற்றும் அம்பேகம கிராமத்தில் அமைந்துள்ள அட்டகலன் வத்துயாய எனப்படும் காணிக்கு 1998.06.30 மற்றும் 1998.07.14 ஆந் திகதிகளில் (மிகவும் சரியாக 1998.07.17 ஆந் திகதி) அனுமதிபெற்ற நிலஅளவையாளர் என். சீ. விஜேவிக்ரம என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 800 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி காணித்துண்டிலக்கம் 12 இன் எல்லைகளாக வடக்கே : அதே காணியின் 11B என்ற காணித்துண்டும் ; கிழக்கே : அதே காணியின் ஒரு பகுதியும் ; தெற்கே : அலுத்வலையில் இருந்து வத்துயாய வரையிலான பாதையும் ; மேற்கே : பிரதேச சபைப் பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினொரு தசம் ஏழு எட்டு பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 11.78பே.).இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம், மரங்கள் மற்றும் அனைத்துடன் பாதைக்கான உரிமையும் காலி காணிப் பதிவு அலுவலகத்தில் H 172/78 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன்

மேற்குறிப்பிட்ட கிராமத்தில் மேற்குறிப்பிட்ட காணி வரைபடத்தின்படி 11B என்ற காணித்துண்டின் எல்லைகளாக - வடக்கே : அதே காணியின் 11A என்ற காணித்துண்டும் ; கிழக்கே : அதே காணியின் ஒரு பகுதியும் ; தெற்கே : அதே காணியின் 12 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கே : பிரதேச சபைப் பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு மூன்று றூட் மூன்று தசம் இரண்டு இரண்டு பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 3றூ. 3.22பே.). இக்காணித்துண்டும் இதில் காணப்படும் கட்டிடம், மரங்கள் மற்றும் அனைத்துடன் பாதைக்கான உரிமையும் காலி காணிப் பதிவு அலுவலகத்தில் H 172/79 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

1-688

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி.

(ஹட்டன் நஷனல் வங்கி என முன்பு அறியப்படுவது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(நிட்டம்புவ கிளை) - வனிகசேகர ஆராச்சிகே சிசிர குமார

ஹட்டன் நாஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2008, நவெம்பர் 27 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"வணிகசேகர ஆராச்சிகே சிசிர குமார என்பவர், கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ். ஜே. அத்தபத்துவினால் முறையே அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1997, செத்தெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட 7162 ஆம் இலக்க முறி, 2003 யூன் 24 ஆந் திகதியிடப்பட்ட 9020 ஆம் இலக்க முறி, 2004 நவெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட 9394 ஆம் இலக்க முறி, மற்றும் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பீ. என். ஏக்கநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, சனவரி 5 ஆந் திகதியிடப்பட்ட 5885 ஆம் இலக்க முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2008, யூலை 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிகள் மீது எட்டு இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து ஐநூற்று தொண்ணூற்று இரண்டு ரூபா இருபத்தெட்டு சதம் (ரூ. 8,71,592.28) கொண்ட பணத்தொகையொன்றின் தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 7162, 9020, 9394 மற்றும் 5885 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட (ரூபா 8,71,592,28) கொண்ட பணத்தொகையை, 2008, யூலை 31 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் ஆர். எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியானே கோறளை, உடுகஹாபற்று, அத்தனகல பிரதேச சபையின், ஈகொடபொத்த உப அலுவலக பிரிவினுள் உள்ள மெய்ப்புலவில் உள்ள "வனுவாகல எஸ்ரேற்" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. எச். ஈ. மெண்டிசினால், தயாரிக்கப்பட்ட 1976.01.10 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 242 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 76 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 206 (வீதிக்கான ஒதுக்கீடு) ; கிழக்கு : காணித்துண்டு 75 ; தெற்கு : காணித்துண்டு 79 ; மேற்கு : காணித்துண்டு 77, அத்துடன் வரைபட இலக்கம் 242 இற்கு அமைவான ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமானதும். கம்பஹா மாவட்ட காணிப் பதிவகத்தில் எப்185/130 என்ற தலைப்பில் பதிவு செய்யப்பட்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

1-702/1

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி.

(ஹட்டன் நஷனல் வங்கி என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(மாரவில கிளை) - இமிஹமில்லகே நிஷாந்தி பிரியதர்ஷனி

ஹட்டன் நாஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2008, நவெம்பர் 27 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

''இமிஹமில்லகே நிஷாந்தி பிரியதர்ஷனி என்பவர், கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் சிலாபம் பிரசித்த நொத்தாரிசு எச். ஜே. எம். டீ. ஜயசிங்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, மே 27 ஆந் திகதியிடப்பட்ட 14344 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2008, ஒகத்து 26 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது பதின்மூன்று இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா இரண்டு சதம் (ரூ. 13,37,395.02) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற் குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 14344 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட (ரூபா 13,37,395.02) கொண்ட பணத்தொகையை, 2008, ஒகத்து 27 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில காணி பதிவகப் பிரிவினில் உள்ள பிற்றிகல் கோரளை தெற்கு, யட்டகலன் பற்று, ஹொரகொல்லவில் உள்ள பறணவத்த என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பீ. டீ. என். பீரிஸ்சினால் தயாரிக்கப்பட்ட 1999, ஒகத்து 29 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1440/ஏ இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 10, என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : முன்சொல்லப்பட்ட வரைபடத்தின் வீதிக்கான ஒதுக்கீடு (20 அடி அகலம்) காணித்துண்டு 14 அடையாளமிடப்பட்டுள்ளது ; கிழக்கு : வீதிக்கான ஒதுக்கீடு (12 அடி அகலம்) காணித்துண்டு 16 ஆக அடையாளமிடப்பட்டுள்ளது ; தெற்கு : முன் சொல்லப்பட்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 11 ; மேற்கு : முன்சொல்லப்பட்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 13, அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1440/ஏ க்கு அமைவான பதினேழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 17பே.) விஸ்தீரணமானதும், முறி இலக்கம் 14344 இன் அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், வீதிக்கான ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

1-702/2

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி.

(ஹட்டன் நஷனல் வங்கி என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(நுவரேலியா கிளை) - கவரம்மன மாப்பாமுதியான்செலாகே பியசிரி

ஹட்டன் நாஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2008, நவெம்பர் 27 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

''கவரம்மன மாப்பா முதியான்செலாகே பியசிரி என்பவர், கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் நுவரெலியா பிரசித்த நொத்தாரிசு ஏ. பீ. கணபதிப்பிள்ளையினால் முறையே அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, நெவம்பர் 06 ஆந் திகதியிடப்பட்ட 4261 ஆம் இலக்க முறி, மற்றும் 2007 சனவரி 02 ஆந் திகதியிடப்பட்ட 4303 ஆம் இலக்க முறி, அத்துடன் கண்டி பிரசித்த நொத்தாரிசு எம்.எஸ். பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, யூலை 20 ஆந் திகதியிடப்பட்ட 1207 ஆம் இலக்க முறிகள் மீது வருமதியான கொடுப்பனவுகளில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2008 யூன் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிகள் மீது பதினேழு இலட்சத்து எழுபதாயிரத்து எழுநூற்று நாற்பத்து நான்கு ரூபா பதினொரு சதம் (ரூ. 17,70,744.11) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 4261, 4303 மற்றும் 1207 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட (ரூபா 17,70,744,11) கொண்ட பணத்தொகையை, 2008, யூலை 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு

உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், வாட் 10, ஓயாபலாத்த கோறளையில் உள்ள கெலேகல கிராமத்தில் உள்ள காணித்துண்டு 11 என அடையாளமிடப்பட்ட காணி, நிலஅளவையாளர் நாயகத்திற்காகவும் அவர் சார்பாகவும், நுவரெலியாவைச் சேர்ந்த நிலஅளவையாளர் ஏ. என். அல்விசின் பராமரிப்பின் கீழ் உள்ள 1994.08.30 ஆந் திகதி இடப்பட்ட வரைபட இலக்கம் 1692 இல் காட்டப்பட்டுள்ளதும் பிரிக்கப்பட்டதுமான காணித்துண்டு 11, என அடையாளம் இடப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 12; கிழக்கு : காணித்துண்டு 12 மற்றும் 17 ; தெற்கு : காணித்தண்டு 17 ; மேற்கு : பாதையுடன் பூஜ்யம் தசம் பூஜ்யம் ஆறு இரண்டு பூஜ்யம் ஹெக்டயர் (0.0620 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

1-702/3

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி.**

(ஹட்டன் நஷனல் வங்கி என முன்பு அறியப்படுவது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(துங்கொட்டுவ கிளை) - இமியாகே ஜயசேன

ஹட்டன் நாஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2008, திசெம்பர் 15 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"இமியாகே ஜயசேன என்பவர், கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. எம். எம். பர்னாண்டோவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, ஏப்பிறல் 16 ஆந் திகதியிடப்பட்ட 1945 ஆம் இலக்க முறி, மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2008, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது ஐந்து இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து எந்நூற்று தொண்ணூற்று மூன்று ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூ. 5,82,893.94) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1945 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட (ரூபா 5,82,893,94) கொண்ட பணத்தொகையை, 2008, மே 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனைகாரர் ஆர். எஸ். மஹாநாமவினால் என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக் கின்றது.''

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பிற்றிகல் கோறளையின் கட்டுகம்பொல ஹற்பற்றுவின் கோணவில மாக்கந்துற உப அலுவலக எல்லைக்கு உட்பட்ட மதுரகமுவவில் உள்ள தல்கஹாவத்த என அழைக்கப்படும் காணி, அத்துடன் கட்டடங்கள், மற்றும் எல்லாம். உரிம நிலஅளவையாளர் எஸ். பி. அபயகோனினால் தயாரிக்கப்பட்ட 1993, மே 31 ஆந் திகதியிடப்பட்ட 2949 ஆம் இலக்கமிடப்பட்ட வரைபடம் மற்றும் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். பி. அபயகோனினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, சனவரி மாதம் 6 ஆந் திகதியிடப்பட்ட சொல்லப்பட்ட 2949 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும், பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : பிரதேச சபை வீதி ; கிழக்கு : பி8 - வீதிக்கான ஒதுக்கீடு, தற்போது வீதி; தெற்கு : புஷ்பகுமாரவினால் உரிமை கோரப்படும் மூல காணியில் இருந்து பிரிக்கப்பட்ட பி6 ; மேற்கு : பரகஹா அகர கும்புரவில் இருந்து பிரிக்கப்பட்ட எல வெல்ல, குளியாப்பிட்டி மாவட்ட காணிப் பதிவகத்தில் எஸ் 97/91 என்ற தலைப்பில் பதிவு செய்யப்பட்ட முப்பது தசம் ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 30.7பே.) விஸ்தீரணத்தைக் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

1-702/4

---

**செலான் வங்கி ப. வ. க.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கிணங்க ஒரு PQ 9 குறியீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

'

கணக்கு இல. 0380-01312708-001 (மாத்தளை கிளை)

1990 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ்,

செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2008.11.27 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது:-

"மாத்தளையைச் சேர்ந்த மஜீத் தஜுதீன் மொஹமட் பாஹிம் மற்றும் மொஹமட் தஜுதீன் மொஹமட் பியாஸ் "கடனெடுத்தவர்கள்" என்ற வகையில் செலான் வங்கி ப. வ.க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஜே. கே. நவரத்ன என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2006, மாச்சு 6 ஆந் திகதிய 242 ஆம் இலக்க மற்றும் 2006, யூன் 2 ஆந் திகதிய 288 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2008, மே 12 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது தொண்ணூற்று நான்கு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து எந்நூற்று எழுபத்திமூன்று ரூபா எழுபது சதம் (ரூ. 94,32,873.70) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால், சொல்லப்பட்ட ரூ. 94,32,873.70 பணத்தொகையையும் 2008, மே 13 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தைந்து சதவீதப்படி (35%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 242 மற்றும் 288 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப.வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான முதலாம், இரண்டாம் அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### முதலாம் அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை நகர மாநகர சபை எல்லைகளினுள் முகாந்திரம் வீதியில் அமைந்துள்ள "வெல்லே கும்புர" என்றழைக்கப்படும் காணியிலிருந்து நான்கு புள்ளி மூன்று ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 4.37பே.) விஸ்தீரணம் கொண்டதாகப் பிரித்து வரையறுக்கப்பட்டதும் மாத்தளையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ராஜசேகரனால் தயாரிக்கப்பட்ட 1997, மே 28 ஆந் திகதிய 4137 ஆம் இலக்க வரைபடத்தின்படி காட்டப்பட்ட காணிப்பங்கு அதன்கண் அமைந்துள்ள ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : மதில் ; கிழக்கு : அணுகல் ; தெற்கு : 17/1A என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட வளவு ; மேற்கு : வீதி. இது மாத்தளை காணிப் பதிவகத்தில் பக்கம் A 91/263 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### இரண்டாம் அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை நகரத்தின் மாநகர சபை எல்லைகளினுள் கொடபொலவில் அமைந்துள்ள "கிளாடீஸ் லான்ட்" என்றழைக்கப்படும் அறியப்படுவதுமான காணியிலிருந்து பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 13.5பே.) விஸ்தீரணம் கொண்டதாகப் பிரித்து வரையறுக்கப்பட்டதும் மாத்தளையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ராஜசேகரனால் தயாரிக்கப்பட்ட 2006.05.21 ஆந் திகதிய 6696 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 மற்றும் துண்டு 2 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகள் - வடக்கு : இப்ராகிமால் உரிமை கோரப்படும் காணி ; கிழக்கு : ரமிஸ்சியாவால் உரிமைகோரப்படும் காணி ; தெற்கு : துண்டு 2 எனக் காட்டப்பட்ட 10 அடி அகலமான அணுகல் ; மேற்கு : பாத்திமாவால் உரிமைகோரப்படும் காணி. இது மாத்தளை காணிப் பதிவகத்தில் A 120/170 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அட்டவணையில் விவரிக்கப்பட்ட துண்டு 1 மற்றும் துண்டு 2 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு பின்வரும் காணியின் பங்கும் பகுதியுமாகும் :

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை நகரின் மாநகர சபை எல்லைகளினுள் கொடபொலவில் அமைந்துள்ள "கிளடீஸ் லான்ட்" என்றழைக்கப்படும் அறியப்படுவதுமான காணியிலிருந்து பன்னிரண்டு தசம் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12.2பே.) விஸ்தீரணம் கொண்ட துண்டு A எனப் பிரித்து வரையறுக்கப்பட்டதும் மாத்தளையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. தொலொஸ்வெலவால் தயாரிக்கப்பட்ட 1968, திசெம்பர் 4 ஆந் திகதிய நிலஅளவீட்டில் துண்டு 10A மற்றும் 10C இன் உண்மையான பகுதியாயுள்ளதும் சொல்லப்பட்ட நிலஅளவையாளர் 2001.04.25 ஆந் திகதியன்று துண்டுகள் A மற்றும் C என்று பிரிக்கப்பட்டதும் மாத்தளையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ராஜசேகரனால் உண்மையான பகுதியென அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் வரைபடம் இல. 487/A இல் துண்டு A எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். 4/3, தரலந்த வீதி என்ற இலக்கங் கொண்ட கட்டடத்துடனும் சொல்லப்பட்ட வரைபடம் இல. 487/A இல் காட்டப்பட்ட 10 அடி அகலமான அணுகலைப் பயன்படுத்தும் உரிமையுடனும் தரலந்த வீதியிலிருந்து வீதிவழியைப் பயன்படுத்தம் உரிமையுடனும் அதன்கண்ணுள்ள ஏனைய எல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட 487/A இலக்க வரைபடத்தின்படி சொல்லப்பட்ட துண்டு A இன் எல்லைகள் - வடக்கு : இப்ராஹிமால் உரிமை கோரும் காணி ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 10B ; தெற்கு : துண்டு 10C எனக் காட்டப்பட்ட 10 அடி அகலமான அணுகல் ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 487/A இல் துண்டு 11.

மேலே சொல்லப்பட்ட கொடபொலவில் அமைந்துள்ள "கிளாடீஸ் லான்ட்" என்றழைக்கப்படும் காணியிலிருந்து ஒன்று தசம் மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 1.3பே.) விஸ்தீரணம் கொண்டதாகப் பிரித்து வரையறுக்கப்பட்டதும் மேலே சொல்லப்பட்ட வரைபடம் இல. 487/A இல் காட்டப்பட்ட (10 அடி அகலமான) வழி உரிமையான துண்டு 10C எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண்ணுள்ள எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட 487/A இலக்க வரைபடத்தின்படி சொல்லப்பட்ட துண்டு 10C இன் எல்லைகள் - வடக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 10A ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 10B ; தெற்கு : சொல்லப்பட்ட துண்டு 10C இல் (தரலந்த வீதியிலிருந்து 10 அடி அகலமான அணுகல்) துண்டு 09; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 11.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எம். கே. பிரேமதிலக,
உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்.

1-710/2

## இ. அ. நி. கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"நுகேகொடையைச் சேர்ந்த பாண்டுகாபய வணிகசிந்தாமணி மொஹொட்டி வாகிஸ்ட்ட, என்பவர், இ. அ. நி. கூ. வர்தன வங்கி சார்பில் பாணந்துறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. வீரசிங்க என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.03.01 ஆந் திகதிய 1339 ஆம் மற்றும் 2007.12.07 ஆந் தகிதிய 1575 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறிகள் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளா ராதலாலும், 2008, ஓகத்து 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக பதின்நான்கு இலட்சத்து அறுபத்தோராயிரத்து எந்நூற்று எண்பத்து மூன்று ரூபா ஐம்பது சதம் (ரூ. 14,61,883.50) கொண்ட தொகையும் 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு சதவீத (36%) அல்லது வசதிக்கு ஏற்புடையற்பாலதாகக்கூடிய வேறேதேனும் வீத வட்டியும் அத்துடன் ஐந்து இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து முந்நூற்று ஒன்பது ரூபா இருபத்து நான்கு சதம் (ரூ. 5,83,309.24) கொண்ட தொகையையும் 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை ஐந்து இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து நூற்றிருபத்தைந்து ரூபா அறுபத்திரண்டு சதம் (. 5,43, 125.62) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது சதவீத (29%) வட்டியும் சொல்லப்பட்ட முறிகள் மீது சொல்லப்பட்ட பாண்டுகாபய வணிகசிந்தாமணி மொஹொட்டி வாகிஸ்ட்ட என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து பதின்நான்கு இலட்சத்து அறுபத்தோராயிரத்து எந்நூற்று எண்பத்து மூன்று ரூபா ஐம்பது சதம் (ரூ. 14,61,883.50) கொண்ட தொகையை, 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு சதவீத (36%) அல்லது இவ்வசதிக்கு ஏற்புடையற்பாலதாகக்கூடிய வேறேதேனும் வீத வட்டியும் அத்துடன் ஐந்து இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து முந்நூற்று ஒன்பது ரூபா இருபத்து நான்கு சதம் (ரூ. 5,83,309.24) கொண்ட தொகையையும் 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை ஐந்து இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து நூற்றிருபத்தைந்து ரூபா அறுபத்திரண்டு சதம் (. 5,43, 125.62) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது சதவீத (29%) வட்டியுடனும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்கான 1339 ஆம், 1575 ஆம் இலக்கங் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 1339ஆம், 1575 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள ஹேவாகம் கோறளையின் பள்ளே பத்துவில் கொட்டிக்காவத்த-முல்லேரியாவவின் பிரதேச சபை எல்லைகளினுள் முல்லேரியாவில் அமைந்துள்ளதும், கடலு அகார கும்புர எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளரும் மட்டப்படுத்துநருமான கே. டீ. வோல்ட்டர் பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2002.07.29 ஆந் திகதிய 85/2002 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 104 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 104 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : காணித்துண்டங்கள் ஆர் 1 மற்றும் 103; கிழக்கில் : காணித்துண்டம் 104 மற்றும் மக்லம் புருவரி கம்பனியினால் உரிமைகோரப்பட்ட ஆதனம்; தெற்கில் : மக்லம் புருவரி கம்பனியினால் உரிமைகோரப்பட்ட ஆதனம் மற்றும் காணித்துண்டம் 105 ; மற்றும் மேற்கில் : காணித்துண்டங்கள் 105 மற்றும் ஆர்1 ; பரப்பளவில் இது, ஏழு தசம் எட்டு பூச்சியம் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 7.80பே.) கொண்டுள்ளது.

உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. டீ. டபிள்யூ. பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2002.07.29 ஆந் திகதிய 85/2002 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டங்கள் ஆர்1, ஆர் 2, ஆர் 3 மற்றும் ஆர்4 என்பவற்றிலும் அவற்றின் மீதும் அவை நெடுகிலுமான பாதையுரிமையுடன் சேர்த்து.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான
நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

1-655/4

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2008.11.28 ஆந் திகதி நடைபெற்ற இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது:-

"1. பிரசித்த நொத்தாரிசு திருமதி கே. கே. பி. ஆர். சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்திய 1995, யூன் 19 ஆந் திகதியிட்ட

ஆரம்ப ஈட்டுமுறி இல. 174 மற்றும் 1997 நவெம்பர் 04 ஆந் திகதியிட்ட இல. 239 மற்றும் பிரசித்த நொத்தாரிசு திருமதி எம். சி. ஜயராணி பீரிஸ் அத்தாட்சிப்படுத்திய 2004.08.25 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 12626 ஆகியவற்றின் பேரில் நியு ஆசிரி டெக்ஸ்ரைல்ஸ், பிரதான வீதி, உடதும்பர என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. யாப்பா முதியான்சேலாகே விஜே பண்டா மற்றும் இல. 01 நியு ஆசிரி இலெக்ரோனிக்ஸ், சுபர் மார்க்கற், பிபிலே என்னும் முகவரியைச் சேர்ந்த யாப்பா முதியான்சேலாகே சாந்த குமார தாலகுண ஆகியோரிடமிருந்து முதலும் 2008.09.16 வரை வட்டியும் கடன் கணக்கின் பேரில் இரண்டு இலட்சத்து எட்டாயிரத்து அறுநூற்று இருபத்து நான்கு ரூபா ஐம்பத்தாறு சதங்களும் (ரூ. 2,08,624.56) நிரந்தர மேலதிகப்பற்று கணக்கு மீது ஒன்பது இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எந்நூற்று எழுபத்து மூன்று ரூபா முப்பத்து நான்கு சதங்களும் (ரூ. 9,72,873.34) அத்துடன் கடன் கணக்கு மீது 2008.09.17 தொடக்கம் ஒரு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து எழுநூற்று முப்பத்தொரு ரூபா நாற்பத்தொன்பது சதங்களில் (ரூ. 1,92,731.49) ஆண்டுக்கு பன்னிரண்டு (12%) வீதத்தில் வட்டியும் 2008.09.16 வரை முதலும் வட்டியும் அத்துடன் நிரந்தர மேலதிகப் பற்று கணக்கு மீது எட்டு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து எந்நூற்று எண்பது ரூபா பதினைந்து சதங்களில் (ரூ. 8,67, 880.15) 2008.09.17 தொடக்கம் ஆண்டுக்கு இருபத்தாறு வீதத்தில் (26%) வட்டியும் கொடுப்பனவு திகதி வரை வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட முறி இலக்கங்கள் 174, 239, 12626 ஆகியவற்றின் மீது கடன் கணக்கின் பேரில் இரண்டு இலட்சத்து எட்டாயிரத்து அறுநூற்று இருபத்து நான்கு ரூபா ஐம்பத்தாறு சதங்களும் (ரூ. 2,08,624.56) நிரந்தர மேலதிகப்பற்று கணக்கு மீது ஒன்பது இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எந்நூற்று எழுபத்து மூன்று ரூபா முப்பத்து நான்கு சதங்களும் (ரூ. 9,72,873.34) அத்துடன் கடன் கணக்கு மீதும் மேலதிகப்பற்று கணக்கு மீதும் 2008.09.17 தொடக்கம் மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்துள்ள சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 48, களுகல்பிட்டிய, பதுளை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. டபிள்யூ. ஜயதிலக்கவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பிபிலை கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

### முதலாவது அட்டவணை

ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம் வெல்லஸ்ஸ பிரிவு வீகம்பற்று கோறளையில் பிபிலே கிராமத்தில் அமைந்த 'தெவனேலந்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். எம். எஸ். உனவட்டுன தயாரித்த வரைபடம் இல. 31 இல் விபரித்த துண்டுகள் 4 மற்றும் 15 என அடையாளமிட்ட காணித்துண்டு வடக்கில் : F. V. P. 573 இல் துண்டு இல. 22 உம் ; கிழக்கில் : வரைபடம் இல. 31 இல் துண்டுகள் 5 மற்றும் 14 உம் ; தெற்கில் : வரைபடம் இல. 31 இல் துண்டு 22 உம் ; மேற்கில் : வரைபடம் இல. 31 இல் துண்டு 54 உம் (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 31 இன்படி ஒரு றூட் முப்பத்தாறு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 36பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது மொனராகலை காணிப் பதிவகத்தில் K 60/92 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட துண்டுகள் 4 மற்றும் 15 உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். கே. குணசேகர தயாரித்த 1994, சனவரி 12 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 3 இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு பிபிலே கிராமத்தில் அமைந்த 'தெவனேலந்த'' என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வபைடம் இல. 03 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட காணித்துண்டு வடக்கில் : F. V. P. 573 இல் துண்டு இல. 22 உம் (பெருந்தெருக்களுக்காக ஒதுக்கப்பட்டது) ; கிழக்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். எம். எஸ். உனவட்டுன தயாரித்த வரைபடம் இல. 31 இல் துண்டு 5 மற்றும் 14 உம் ; தெற்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். எம். எஸ். உனவட்டுனவின் வரைபடம் இல. 31 இல் துண்டு 22 உம் ; மேற்கில் : வரைபடம் இல. 31 இல் துண்டு 54 (பிரவேசப் பாதை) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3 இன்படி ஒரு றூட் சைபர் சைபர் தசம் மூன்று ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 0.36பே.) அல்லது ஹெக்டேயர்கள் சைபர் தசம் ஒன்று சைபர் இரண்டு ஒன்று (ஹெக். 0.1021) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், வெல்லஸ்ஸ பிரிவு வீகம்பற்று கோறளையில் பிபிலையில் அமைந்த போகஹவத்த அல்லது போகஹலந்த என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். கே. குணசேகர தயாரித்த 1995, நவெம்பர் 8 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 324 இல் துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : டி. எல். எஸ். எஸ். பீரிஸ் உரிமை கோரும் போகஹலந்த காணியும் ; கிழக்கில் : பிரதான றோட்டிலிருந்து வீட்டுக்கு றோட்டும் ; தெற்கில் : F.V.P. 573 இல் துண்டு 33 உம் ; மேற்கில் : டி. எல். எஸ். எஸ். பீரிஸ் உரிமை கோரும் அதே காணியின் பகுதியும் எல்லைகளாகக் கொண்டு வரைபடம் இல. 324 இன்படி ஒரு றூட் பதினாறு தசம் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 16.2பே.) அல்லது ஹெக்டேயர்கள் சைபர் தசம் ஒன்று நான்கு இரண்டு மூன்று (ஹெக். 0.1423) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது மொனராகலை காணிப் பதிவகத்தில் K 24/249 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டி. எம். எஸ். திஸாநாயக்க,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பிபிலை கிளை.

1-675

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்ட வாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2008.12.18 ஆந் திகதி நடைபெற்ற இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது:-

''1. பிரசித்த நொத்தாரிசு திருமதி என். பி. ஜி. சந்திரிகா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.07.07 ஆந் திகதியிட்ட

முறி இல. 1118 இன் பேரில் ரத்னகிரி மாவத்தை, கனேகம கிழக்கு, பத்தேகம என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. சனத் லங்காபுர என்பவரிடமிருந்து முதலும் 2008.10.02 வரை வட்டியும் ஏழு இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து நாநூற்று ஐம்பது ரூபா இருபத்து மூன்று சதங்களும் (ரூ. 7,33,450.23) அத்துடன் ஏழு இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து நாநூற்று ஐம்பது ரூபா இருபத்து மூன்று சதத்தில் (ரூ. 7,33,450.23) ஆண்டுக்கு 10 வீதத்தில் 2008.10.03 தொக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும் ;

2. மேற்குறிப்பிட்ட முறி இல. 1118 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஏழு இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து நாநூற்று ஐம்பது ரூபா இருபத்து மூன்று சதமும் (ரூ. 7,33,450.23) அத்துடன் 2008.10.03 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்துள்ள இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 39, வில்பிரெட் குணசேகர மாவத்தை, கோட்டை, மாத்தறை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. எம். எச். பத்மானந்த சிறிவர்தனவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பத்தேகம கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### முதலாவது அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், கங்கபொடபற்று தெற்கு, கனேகம கிழக்கில் அமைந்த அலவத்தையினதும் அலகியவத்தயினதும் துண்டு இல. 16 இன் துண்டு இல. 3 என அழைக்கப்படுவதும் பிரிக்கப்பட்ட காணித்துண்டு வடகிழக்கில் : அதே காணியின் துண்டு இல. 1 உம் ; தென்கிழக்கில் : அதே காணியின் துண்டு இல. 5 உம் ; தென்மேற்கில் : பெருந்தெரு வரை கிராம சபை றோட்டும் ; வடமேற்கில் : அதே காணியின் துண்டு இலக்கங்கள் 2 மற்றும் 1 உம் எல்லைகளாகக் கொண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஐ. டி. எஸ். செனவிரத்ன தயாரித்த 1969.10.03 மற்றும் 1969.09.28 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 713 B இன்படி பதினாறு தசம் நான்கு ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 16.47பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண் மற்றும் மரங்களுடன் கட்டிடங்களும் ஆகும். இது காலி காணிப் பதிவகத்தில் H 144/193 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட துண்டு இல. 3 உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜி. டி. யூ. கருணாரத்ன தயாரித்த 2004.07.10 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 876/2004 இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட கனேகம கிழக்கில் அமைந்த அலவத்தை மற்றும் அலகிரிய வத்த என அழைக்கப்படும் காணியின் துண்டு இல. 16 இன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 876/2004 இல் விபரித்த துண்டு இல. 03 என அழைக்கப்படும் காணித்துண்டு வடகிழக்கில் : அதே காணியின் துண்டு இல. 1 உம் ; தென்கிழக்கில் : அதே காணியின் துண்டு இல. 5 உம் ; தென்மேற்கில் : பெருந்தெரு வரை கிராம சபை றோட்டும் ; வடமேற்கில் : அதே காணியின் துண்டு இலக்கங்கள் 2 மற்றும் 1 உம் எல்லைகளாகக் கொண்டு வரைபடம் இல. 876/2004 இன்படி பதினாறு தசம் நான்கு ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 16.47பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும ஆகும்.

மேற்குறிப்பிட்ட கனேகம கிழக்கில் அமைந்த அலவத்தையினதும் அலகிய வத்தையினதும் துண்டு இல. 16 இன் துண்டு இல. 2 என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடகிழக்கில் : அதே காணியின் துண்டு இல. 3 உம் ; தென்கிழக்கில் : அதே காணியின் துண்டு இல. 3 உம் ; தென்மேற்கில் : பெருந்தெரு வரை கிராம சபை றோட்டும் ; வடமேற்கில் : அதே காணியின் துண்டு இல. 1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 713 B இன்படி ஒன்று தசம் எட்டு மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 1.83பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண் மற்றும் மரங்களும் ஆகும். இது காலி காணிப் பதிவகத்தில் H 144/194 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட துண்டு இல. 2 உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜி. டி. யூ. கருணாரத்ன தயாரித்த 2004.07.10 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 876/2004 இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட கனேகம கிழக்கில் அமைந்த அலவத்தையினதும் அலகியவத்தையினதும் என அழைக்கப்பட்டட காணியின் துண்டு 16 இன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 876/2004 இல் விபரித்த துண்டு இல. 2 என அழைக்கப்படும் காணித்துண்டு வடகிழக்கில் : அதே காணியின் துண்டு இல. 3 உம் ; தென்கிழக்கில் : அதே காணியின் துண்டு இல. 3 உம் ; தென்மேற்கில் : பெருந்தெரு வரை கிராம சபை றோட்டும் ; வடமேற்கில் : அதே காணியின் துண்டு இல. 1 உம் எல்லைகளாகக் கொண்டு வரைபடம் இல. 876/2004 இன்படி ஒன்று தசம் எட்டு மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 1.83பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) என். ஏ. கமகே,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பத்தேகம.

1-679

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2008.11.28 ஆந் திகதி நடைபெற்ற இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

"1. பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஏ. எஸ். சி. மத்தியு அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.03.26 ஆந் திகதிய 4829 ஆம் இலக்க, முறியின் பேரில் 129 "பிரகதி", ஹெட்டியாவத்த மாவத்தை, அங்கொடை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு.

மஹதுர ஹேமந்த குமார தி சில்வா ஜயசேகர மற்றும் திரு. மஹவன்னிகே சுஜித் ஸ்ரீலால் ஆகியோரிடமிருந்து கடன் கணக்குக்காக முதலும் 2008.10.17 வரை வட்டியும் ஒரு கோடி பதினெட்டு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து இருநூற்று எழுபத்தொரு ரூபா முப்பத்தைந்து சதமும் (ரூ. 1,18,93,271.35) அத்துடன் கடன் கணக்குக்காக ஒரு கோடி இரண்டு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து நாநூற்று முப்பத்தொரு ரூபா பதின்நான்கு சதத்தில் (ரூ. 1,02,52,431.14) ஆண்டுக்கு இருபத்திரெண்டு தசம் ஆறு ஒன்று (22.61%) வீதத்தில் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும் ;

2. மேற்குறிப்பிட்ட முறி இல. 4829 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஒரு கோடி பதினெட்டு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து இருநூற்று எழுபத்தொரு ரூபா முப்பத்தைந்து சதங்களும் (ரூ. 1,18,93,271.35) அத்துடன் 2008.10.18 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்துள்ள இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு மஹானாம ட்ரைவ், இல. 474, பிற்றகோட்டே, கோட்டே என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ரஞ்சித சிறிவர்தன மஹானாமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவிற்கும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி சென்றல் சுப்பர் மார்கற் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்ப மாநகர சபை எல்லைகளுக்கள் வோர்ட் இல. 09, கொச்சிக்கடை தெற்கில் பழைய சோனகத் தெருவில் அமைந்ததும் தற்சமயம் பழைய சோனகத் தெரு வரிமதிப்பீட்டிலக்கம் 84 ஐக் கொண்டதும் முன்னர் வரிமதிப்பீட்டிலக்கம் 116 (மற்றும் இல. 110) ஐக் கொண்ட வீடும் தோட்டமும், வடக்கில் : பழைய சோனகத் தெருவும் ; கிழக்கில் : உதுமா லெப்பே மரிக்கார் சேகடி மரிக்காரின் தோட்டமும் ; தெற்கில் : உதுமா லெப்பே மெஸ்ரியாரின் தோட்டமும் ; மேற்கில் : அப்துல்புள்ளே நதிஜாவின் வீடும் எல்லைகளாகக் கொண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எப். ரீமன்ஸ் தயாரித்த 1825 பெப்புருவரி 10 ஆந் திகதியிட்ட அளவையின்படி ஐந்தோடு நூறில் ஐந்து பேர்ச்சஸ்களும் (0ஏ. 0றூ. 05 5/100பே.) விஸ்தீரணமுடையது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. மாசிலாமணி தயாரித்த 1986, சனவரி 27 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 262 இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:-

மேற்குறிப்பிட்ட கொச்சிக்கடை தெற்கில் பழைய சோனகத் தெருவில் அமைந்த பழைய சோனகத் தெரு முன்னர் வரிமதிப்பீட்டிலக்கம் 116 மற்றும் 110 ஐக் கொண்டதும் வரிமதிப்பிலக்கம் 84 ஐக் கொண்டதும் மேற்குறிப்பிடட வரைபடம் இல. 262 இல் விபரித்த துண்டு "A" என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : பழைய சோனகத் தெருவும் ; கிழக்கில் : பழைய சோனகத் தெரு வரிமதிப்பிலக்கம் 88 ஐக் கொண்ட நிலமனையும் ; தெற்கில் : பழைய சோனகத் தெரு வரிமதிப்பிலக்கம் 80 ஐக் கொண்ட நிலமனையும் ; மேற்கில் : பழைய சோனகத் தெரு வரிமதிப்பிலக்கம் 82 ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 262 இன்படி எட்டு தசம் ஐந்து மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 8.53பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டி. கே. எஸ். மகிந்த,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
சென்றல் சுப்பர் மார்கற் கிளை.

1-677

---

### மக்கள் வங்கி – காலி மஹவீதிய கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2008.09.26 ஆந் திகதி பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"காலி சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான அஜன்தா கபுகமகே என்பவரால் அத்தாட்சிப்படுத்தியதும் 2007.03.13 ஆந் திகதிய இலக்கம் 1299 என்ற ஈட்டு முறியின் மீது உனவடுன, மெடரம்ப, ஸொமிவாஸயில் குடியிருக்கும் லங்கா கீகனகே நிமல் என்பவர் இதிலும் மேலே குறிப்பிட்ட இலக்கம் 1299 என்ற ஈட்டு முறியின் அட்டவணையில் விபரம் கோரப்படும் சொத்து மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளபடியால் இலக்கம் 1299 என்ற ஈட்டு முறியின் பிரகாரம் கொடுப்பனவில் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தால் கம்பனி ஒன்று உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட இல. N(PVS) 13757 பதிவு இலக்கமுடைய மற்றும் சொந்த பதிவு அலுவலகம், உனவடுன, மெடரம்ப, ஸொமிவாஸ என்ற இடத்தில் நடாத்திக் கொண்டு செல்லும் வரையறுக்கப்பட்ட பீச் ஹொடல் கொம்ரான் தனியார் (பிறை) கம்பனி அதன் பின் உரிமையாளர்கள் மற்றும் கொள்பவர்களும் கட்டுப்படுத்துபவர்களாக வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்.

ஆதலால் இப்பொழுது மேற்படி ஈட்டு முறியின் மீது இருபது இலட்சம் ரூபா (ரூ. 20,00,000) பணம் மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால் 2008.05.01 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு 23 வீதப்படி இருபது இலட்சம் ரூபா (ரூ. 20,00,000) பணம் மீது ஏலவிற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும், மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் (29L) பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து இருபது இலட்சம் ரூபா (ரூ. 20,00,000) பணம் அறவிடுவதற்காக அதிகாரம் பெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் இலக்கம் 1299 என்ற ஈட்டு முறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும்

வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணத்தில், காலி மாவட்டம், தல்பே பத்துவே உனவடுனயில் அமைந்துள்ள மாவதகெதரவத்த அல்லது மாவத அத்தர வத்த அல்லது மாவத பொடவத்த அல்லது குருகந்தே பொடவத்த என்ற காணி பிரித்து வேறாக்கிய அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. என். ஜாகொட என்பவரால் 1972.04.22 ஆந் திகதி அளந்து தயாரித்த இல. 968 என்ற வரைபடத்தில் குறிப்பிடும் இலக்கம் 10 க்காக 1996.01.02 ஆந் திகதி அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் ஜி. என். சமரசிங்க என்பவரால் மீண்டும் அளந்து தயாரித்த இலக்கம் 1175 என்ற வரைபடத்தின் பிரகாரம் எல்லைகள் - வடக்கிற்கு : தலகஹவத்தையும் ; கிழக்கிற்கு : தல்கஹவத்தையும் ; தெற்கிற்கு : இக்காணியின் இல. 11 என்ற துண்டும் ; மேற்கிற்கு : இக்காணியின் இல. 12 மற்றும் 14 என்ற துண்டுகள் (வீதி) யும் எல்லைகளாகும்.

இந்த எல்லைகளுக்குள் அமைந்துள்ள பேர்ச்சஸ் இருபத்தி எட்டு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 28.50பே.) விசாலம் கொண்ட இக்காணியினுள் அமைந்திருக்கும் கட்டடங்கள், மரம், மட்டைகள், உட்பட அனைத்தும் ஆகும். இக்காணி காலி மாவட்ட காணிப் பதிவகத்தில் இலக்கம் D 626/289 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்ஸன் வீதி,
காலி.

1-670

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2008.11.04 ஆந் திகதி நடைபெற்ற இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

"1. பிரசித்த நொத்தாரிசு எம். வீரக்கோன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.09.05 ஆந் திகதிய 4717 ஆம் இலக்க, ஈட்டுமுறியின் பேரில் இலக்கம் 29, (B) பிபில, நாஉல என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. கடுக்கார ஹேரத் முதியன்சேலாகே பிரியந்த உபுல் செனரத், திருமதி. அபேக்கோன்லாகே நிரோஷா பிரியதர்ஷனி என்பவர்களினால் முதலும் 2008.03.20 ஆந் திகதி வரையிலான வட்டியுமாக மூன்று இலட்சத்து பன்னிரண்டாயிரத்து ஐநூற்று தொண்ணூறு ரூபா எழுபத்தொன்பது சதமும் (ரூ. 3,12,590.79) அத்துடன் இரண்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து எழுபத்து மூன்று ரூபா இருபத்தைந்து சதத்திற்கு (ரூ. 2,87,073.25) 2008.03.21 ஆந் திகதி தொடக்கம் முழுப்பணமும் முற்றாகச் செலுத்தி முடிக்கும் வரை ஆண்டுக்கு இருபத்தாறு தசம் ஐந்து (26.5%) வீதத்திலான வட்டியும் இலங்கை வங்கிக்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் செலுத்த வேண்டியுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட 2007.09.05 ஆந் திகதிய இலக்கம் 4717 கொண்ட முறியின் மேல் வருமதியாக உள்ள மூன்று இலட்சத்து பன்னிரண்டாயிரத்து ஐநூற்று தொண்ணூறு ரூபா எழுபத்தொன்பது சதமும் (ரூ. 3,12,590.79) 2008.03.21 ஆந் திகதி தொடக்கம் விற்பனவுத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடக்கூடிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்துள்ள இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 24, றொறிங்ரன் ரோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவிற்கும் அதன் திருத்தங்களுக்குமிணங்க இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

**அட்டவணை**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை வடக்கு, வகபனஹ உடசியபத்து, நாஉலவில் அமைந்தள்ள மாத்தளை உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. சி. டயஸ் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2001, பெப்புருவரி 07 ஆந் திகதிய இலக்கம் 259 கொண்ட வரைபடத்தில் துண்டு 11 எனக் காட்டப்பட்டுள்ள "அறங்கல வத்த" என்றழைக்கப்படும் காணியின் ஒரு பாகமாகிய மேற்குறிப்பிட்ட 259 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க, வடக்கில் : 6 மீற்றர் அகலமுள்ள றோட்டிற்கான ஒதுக்கமும் ; கிழக்கில் : 259 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 14உம் ; தெற்கில் : 6 மீற்றர் அகலமுள்ள றோட்டிற்கான ஒதுக்கமும் ; மேற்கில் : 259 ஆம் இலக்க வரைபடத்தின் 10 ஆந் துண்டும் எல்லைகளாகக் கொண்ட இருபது தசம் நான்கு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20.45பே.) அல்லது 0.05175 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணித்துண்டு முழுவதும், அதற்குள் உள்ள பயிர்களும், மற்றும் அனைத்துமாகும். மேற்கூறிய 259 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பிரவேசப்பாதை மேலும், நெடுகிலுமான பாதை உரித்துமாகும். இது மாத்தளை காணிப் பதிவகத்தில் சி 250/292 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டபிள்யூ. எம். (B) பாலசூரிய,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
நாஉல கிளை.

1-680

**செலான் வங்கி ப. வ. க.**

*(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கிணங்க ஒரு PQ 9 குறியீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

'

*கணக்கு இல. 0410-01554651-001 (அத்திடிய கிளை)*

*1990 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2008.08.07 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது:-*

*''ரணலவில் N(PVS) 9918 என்ற வியாபாரம் பதிவிலக்கம் கொண்டதாக 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியான சூபர் அப்பரல் குரூப் (பிறைவேட்) லிமிட்டெட் 'கடனெடுத்தவர்கள்'' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு திலினி பீ. கருணாசேகர என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, செத்தெம்பர் 5 ஆந் திகதிய 1118 ஆம் இலக்க மற்றும் 2007, மாச்சு 27 ஆந் திகதிய 1273 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுகளில் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது 2008, மே 31 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது மூன்று கோடி ஐம்பத்தொரு இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து ஏழு ரூபா மூன்று சதம் (ரூ. 3,51,98,007.03) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால், சொல்லப்பட்ட ரூ. 3,51,98,007.03 பணத்தொகையையும் 2008, யூன் 1 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தைந்து சதவீதப்படி (35%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1118, மற்றும் 1273 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப.வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''*

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவகம் கோறளேயின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையினுள் ரணலவில் அமைந்துள்ள ''தெல்கஹவத்த'' என்றழைக்கப்படுவதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எல். என். பெரேராவால் தயாரிக்கப்பட்ட 2005.07.04 ஆந் திகதிய 3107 ஆம் இலக்க வரைபடத்தில் ''துண்டு A'' எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : அவிசாவளை வீதி மற்றும் வரைபடம் இல. 2809 இல் துண்டு 2, துண்டு 6 (வீதி 10 அடி அகலம்) மற்றும் வரைபடம் இல. 5132 இல் துண்டு 5 ; கிழக்கு : வரைபடம் இல. 5132 இல் துண்டு 6 (வீதி 10 அடி அகலம்) மற்றும் என். சேனரத்னவால் உரிமைகோரப்படும் காணி ; தெற்கு : ரணசிங்க ஆரச்சிகே விஜேவர்தனவினதும் ஏனையோரினதும் காணி மற்றும் வரைபடம் இல. 2809 இல் துண்டு 2; மேற்கு : டொக்டர் விஜேவர்தனவின் காணி மற்றும் வரைபடம் இல. 2809 இல் துண்டு 2 மற்றும் வரைபடம் இல. 5132 இல் துண்டு 6 (வீதி 10 அடி அகலம்). சொல்லப்பட்ட 3107 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது ஒரு ஏக்கர் ஒரு றூட் முப்பத்திரண்டு தசம் ஆறு ஐந்து பேர்ச்சஸ் (1ஏ. 1றூ. 32.65பே.) விஸ்தீரணமுள்ளது.

சொல்லப்பட்ட வரைபடம் இல. 3107 இல் காட்டப்பட்ட காணிப்பங்கீடு கீழே விவரிக்கப்பட்ட காணிகளின் மீள் அளவீடும் ஒருங்கிணைப்புமாகும்:-

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவகம் கோறளேயின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையினுள் ரணலவில் அமைந்துள்ள ''தெல்கஹவத்த'' என்றழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. டி. ஹெட்டிகேயால் தயாரிக்கப்பட்ட 1993.01.30 ஆந் திகதிய 2809 ஆம் இலக்க வரைபடத்தில் ''துண்டு 1'' எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : வீதி (பொது நெடுஞ்சாலை) மற்றும் துண்டு 2 ; கிழக்கு : டி. டி. பாரன் சிங்கோவின் காணி ; தெற்கு : ரணசிங்க ஆரச்சிகே விஜேவர்தனவினதும் ஏனையோரினதும் காணி மற்றும் துண்டு 2 ; மேற்கு : வரைபடம் இல. 508 இல் துண்டு 1A டொக்டர் விஜேவர்தனவின் காணி மற்றும் துண்டு 2. சொல்லப்பட்ட 2809 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது ஒரு ஏக்கர் ஒரு றூட் ஒன்பது தசம் ஐந்து பேர்ச்சஸ் (1ஏ. 1றூ. 9.5பே.) விஸ்தீரணமுள்ளது.

சொல்லப்பட்ட வரைபடம் இல. 2809 இல் காட்டப்பட்ட காணிப்பங்கீடு கீழே விவரிக்கப்பட்ட காணியின் ஒரு மீள் அளவீடாகும்:-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவகம் கோறளேயின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையினுள் ரணலவில் அமைந்துள்ள ''தெல்கஹவத்த'' என்றழைக்கப்படுவதும் (மா. நீ. வழக்கு இல. 10268/P இல் பதிவுச்சான்றாகத் தாக்கல் செய்யப்பட்டதும்) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சி. சி. விக்கிரமசிங்கவால் தயாரிக்கப்பட்ட 1967.01.28 ஆந் திகதிய 508 ஆம் இலக்க வரைபடத்தில் ''துண்டு 1B'' எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப் பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : பொது வீதி; கிழக்கு : டி. டி. பாரன் சிங்கோவின் காணி ; தெற்கு : ரணசிங்க ஆரச்சிகே விஜேவர்தனவினதும். ஏனையோரினதும் காணி ; மேற்கு : வரைபடம் இல 508 இல் துண்டு 1A. ஒரு ஏக்கர் ஒரு றூட் ஒன்பது தசம் ஐந்து பேர்ச்சஸ் (1ஏ. 1றூ. 9.5பே.) விஸ்தீரணமுள்ள இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் G 1458/28 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவகம் கோறளேயின் பள்ளேபத்துவில் கடுவெல பிரதேச சபையினுள் ரணலவில் அமைந்துள்ள ''தெல்கஹவத்த'' என்றழைக்கப்படுவதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரி. டி. ஜே. பெரேராவால் தயாரிக்கப்பட்ட 2000.01.19 ஆந் திகதிய 5132 ஆம் இலக்க வரைபடத்தில் ''துண்டு 5'' எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண்

அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : துண்டுகள் 4 மற்றும் 6 ; கிழக்கு : என். சேனரத்னவால் உரிமை கோரப்படும் காணி ; தெற்கு: லும்பினி எஸ்ரேட் ; மேற்கு : சூபர் அப்பரல் குறூப் (பிறை) லிமிட்டெட்டால் உரிமை கோரப்படும் ஆதனம். சொல்லப்பட்ட 5132 ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தாறு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 26.5பே.) விஸ்தீரணமுள்ள இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் G 1315/125A இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனுடன் பின்வரும் காணியின் மேலாகவும் ஊடாகவும் வழி உரிமையும் அதற்குரித்தான ஏனைய பொது உரிமைகளும் கொண்டதாக:-

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவகம் கோறளேயின் பள்ளே பத்துவில் கடுவெல பிரதேச சபையினுள் ரணலவில் அமைந்துள்ள ''தெல்கஹவத்த'' என்றழைக்கப்படுவதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரி. டி. ஜே. பெரேராவால் தயாரிக்கப்பட்ட 2000.10.19 ஆந் திகதிய 5132 ஆம் இலக்க வரைபடத்தில் "துண்டு 6" (வீதிக்கான ஒதுக்கம்) எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள், மண், மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : பெரு வீதி மற்றும் துண்டு 4 ; கிழக்கு : துண்டு 1-5 ; தெற்கு : துண்டு 5 ; மேற்கு : சூபர் அப்பரல் (பிறை) லிமிட்டெட்டால் உரிமை கோரப்படும் ஆதனம். சொல்லப்பட்ட 5132 ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினாறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 16பே.) விஸ்தீரணமுள்ள இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் G 1315/125 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எம். கே. பிரேமதிலக,
உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்.

1-709

---

### மக்கள் வங்கி – மன்னார் கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2008.09.26 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''மன்னார் பிரசித்த நொத்தாரிசு எம். எம். சபாருடீன் என்பவரால் 2004 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 10 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 6879 ஐக் கொண்ட ஈட்டுமுறி மற்றும் 2005 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 16 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 7931 ஐக் கொண்ட ஈட்டுமுறி ஆகியவற்றின்படி கொடுப்பனவை திரு. சௌந்தரராஜா ரங்கராஜா, திருமதி ரங்கராஜா யோகம்மா மற்றும் திரு. ரங்கராஜா தவராஜன் என்போரினால் பத்தொன்பது இலட்சத்து இருபத்தாறாயிரத்து இருநூற்று இருபத்தைந்து ரூபா நாற்பது சதம் (ரூ. 19,26,225.40) செலுத்த தவறியுள்ளபடியாலும் சொல்லப்பட்ட ஈட்டு முறிகள் 6879 மற்றும் 7931 இன்படி மேற்சொல்லப்பட்ட கடன்தொகை பத்தொன்பது இலட்சத்து இருபத்தாறாயிரத்து இருநூற்று இருபத்தைந்து ரூபா நாற்பது சதத்தையும் (ரூ. 19,26,225.40), பதினொரு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து ஐநூற்று அறுபத்திமூன்று ரூபா நாற்பது சதத்தையும் (ரூ. 11,59,563.40) இதன் மீது 2007.10.16 இல் இருந்து ஏலவிற்பனை திகதி வரை வருட வட்டி வீதம் பதினெட்டு தசம் இரண்டு ஐந்து (18.25%) இன்படியான வட்டியையும் மற்றும் ஏழு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூற்று அறுபத்திரண்டு ரூபா (ரூ. 7,66,662) இன் மீது 2007.09.21 இல் இருந்து ஏலவிற்பனை திகதிவரை வருட வட்டி வீதம் இருபது தசம் ஐந்து (20.50%) இன்படியான வட்டியையும் ஏலவிற்பனைக் கட்டணத்தையும், ஏலவிற்பனை செலவுடன் அதன்பின்பு கொடுப்பனவுகள் எவையும் (அவ்வாறு கிடைத்திருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட இல. 6879 மற்றும் இல. 7931 ஈடுகளின் கீழ் மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள கீழ் குறிக்கப்பட்டுள்ள ஆதனங்களையும் அவற்றை சேர்ந்தவற்றையும் இல. 83/5, போமலுவ வீதி, வட்டபுலுவ, கண்டி என்ற முகவரியை சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. ஐ. டபிள்யூ. ஜெயசூரிய என்பவரால் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்பட வேண்டும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால், 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின்படியும், பின்பு திருத்தி அமைக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின்படியும் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

#### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வட மாகாணத்தில், மன்னார் மாவட்டத்தில், மன்னார் பிரிவில் மன்னார் கிழக்கு மூலை, மன்னார் நகரம் பெரிய கடையில் அமைந்துள்ள "சுப்பையா வீடு" என அழைக்கப்படும் மூன்று (03) மரக்கால் பரப்பளவும். வடக்கு-தெற்காக தொண்ணூற்று ஆறு (96) அடியும் மற்றும் கிழக்கு- மேற்காக அறுபத்து ஒன்பது (69) அடியும் கொண்ட ஓடுகளால் வேயப்பட்ட சமையலறையுடன் கூடிய மேல்மாடி மற்றும் கீழ்மாடி வீடு. இதன் எல்லைகளாவன - கிழக்கு : பராபரப்பிள்ளை விதவை வேலுப்பிள்ளையின் உரித்துக்கள்; வடக்கு: வீதி ; மேற்கு : எஸ். எஸ். செல்வநாயகம் மற்றும் பலரின் உரித்துக்கள்; தெற்கு : கே. எம். ஏ. கச்சு முகம்மதுவின் உரித்துக்கள்.

இதில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஏ. எஸ். ''கொடுத்தோர்'' இனால் தயாரிக்கப்பட்ட 1983.02.26 ஆந் திகதியிடப்பட்ட 12 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒன்று தசம் நான்கு எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 01.48பே.) விசாலம் கொண்ட ஆனால் வவுனியாவைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. பி. என். சுகுமாரால் அண்மையில் செய்யப்பட்ட மீள் நில அளவையின்படியான 2004.01.17 ஆந் திகதியிடப்பட்ட 2401 MN இலக்கம் கொண்ட வரைபடத்தின்படி இரண்டு தசம் ஒன்று ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 2.17பே.) விசாலம் கொண்ட பிரிக்கப்பட்ட துண்டின் மேல்மாடிக்கட்டிடத்தை உள்ளடக்கிய கிழக்கெல்லை துண்டு. இதன் எல்லைகளாவன - வடக்கு : ஆலமர வீதி ; கிழக்கு: பெல்டானோ அல்போன்ஸ் இனால் கோரப்படும் ஆதனம் ; தெற்கு : கே. எம். ஏ. கச்சுமுகம்மது இனால் கோரப்படும் ஆதனம் ; மேற்கு : ரங்கராஜா வரதராஜா இனால் கோரப்படும் ஆதனம்.

மேற்படி காணியும் அதில் அமைந்துள்ள கட்டடங்களும் மற்றும் ஏனையவையும் அடங்கும். இந்த காணி மன்னார் மாவட்ட காணிப் பதிவகத்தில் B100/356 இன் கீழ் பதியப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
வன்னி.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
புகையிரத வீதி,
வவுனியா.

1-671

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்ட வாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2008.11.04 ஆந் திகதி நடைபெற்ற இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது:-

"1. பிரசித்த நொத்தாரிசு திருமதி ஆர். வி. அந்தரவெவ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.05.10 ஆந் திகதிய 456 ஆம் இலக்க, ஈட்டுமுறியின் பேரில் மில்லங்க நெசவாலை, கரகஸ்தலாவ குடியேற்றத்திட்டம், கரகஸ்தலாவ, கட்டுக்கித்துலை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. திசாநாயக்க முதியன்சேலாகே பொடிமஹத்மயா, திரு. திசாநாயக்க முதியன்சேலாகே சந்தன பிரதீப் பண்டார திசாநாயக்க, திருமதி குருகுல ஆரச்சிகே தொன் லுவிநோனா அல்லது குருகுல ஆரச்சிலாகே தொன் லுவினோனா என்பவர்களினால் முதலும் 2008.05.05 ஆந் திகதி வரையிலான வட்டியுமாக ஐந்து இலட்சத்து முப்பத்தாறாயிரத்து இருநூற்று எண்பத்து மூன்று ரூபா எழுபத்தொரு சதமும் (ரூ. 5,36,283.71) அத்துடன் நான்கு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து முந்நூற்று இருபத்தைந்து ரூபாவிற்கு (ரூ. 4,58,325) 2008.05.06 ஆந் திகதி தொடக்கம் முழுப்பணமும் முற்றாகச் செலுத்தி முடிக்கும் வரை ஆண்டுக்கு இருபத்தெட்டு தசம் ஐந்து (28.5%) வீதத்திலான வடடியும் இலங்கை வங்கிக்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் செலுத்த வேண்டியுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட 2007.05.10 ஆந் திகதிய இலக்கம் 456 கொண்ட முறியின் மேல் வருமதியாக உள்ள ஐந்து இலட்சத்து முப்பத்தாறாயிரத்து இருநூற்று எண்பத்து மூன்று ரூபா எழுபத்தொரு சதமும் (ரூ. 5,36,283.71) 2008.06.05 ஆந் திகதி தொடக்கம் விற்பனவுத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்துள்ள இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 24, ரொறிங்ரன் ரோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவிற்கும் அதன் திருத்தங்களுக்கு மிணங்க இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

**அட்டவணை**

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், கொத்மலைப் பிரிவு, நம்பொடை கோறளை, கரகஸ்தலாவ கிராமத்தில் அமைந்துள்ள "கரகஸ்தலாவ" என்றழைக்கப்படும், வடக்கில் : ஜி. ஏ. அலிஸ் நோனாவிற்குச் சொந்தமான காணியும் ; கிழக்கில் : நீரோடைக்கான ஒதுக்கமும் ; தெற்கில் : கிராமசபை றோட்டிற்கான ஒதுக்கமும் ; மேற்கில் : ஏ. ஜி. ஜயரத்னவிற்குச் சொந்தமான காணியும் எல்லைகளாகக் கொண்ட ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள ஜயபூமி காணி முழுவதும் அதற்குள் அமைந்துள்ள அனைத்துமாகும். இது நுவரெலியா காணிப் பதிவகத்தில் வொல்யூம்/பக்கம். கொத். 34/636/95 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணியானது பின்னர் செய்யப்பட்ட அளப்பனவு, விவரணத்திற்கிணங்க பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:-

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், கொத்மலைப் பிரிவு, நம்பொடை கோறளை, கரகஸ்தலாவ கிராமத்தில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எம். என். ரி. கே. மாரசிங்க அவர்களால் தயாரிக்கப்பட்ட 2005, திசெம்பர் 7 ஆந் திகதிய 965 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள, "கரகஸ்தலாவ குடியேற்றத்திட்டம்" என்றழைக்கப்படும், மேற்கூறிய 965 ஆம் இலக்க வரைபடம், விவரணத்திற்கிணங்க, வடக்கில் : உயிர்வேலையும் ஜி. ஏ. அலிஸ் நோனாவிற்குச் சொந்தமான காணியும் ; கிழக்கில் : நீரோடைக்கான ஒதுக்கமும் ; தெற்கில் : பெருந்தெருவிலிருந்து வரும் (கிராம சபை) பாதையும் ; மேற்கில் : ஏ. ஜி. ஜயரத்னவிற்குச் சொந்தமான காணியும் எல்லைகளாகக் கொண்ட முப்பத்தாறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 36பே.) அல்லது 0.0910 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள ஜயபூமி காணி முழுவதும் அதற்குள் அமைந்துள்ள வீடும் மற்றும் அனைத்துமாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஜி. லீலசேன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
புசல்லாவைக் கிளை.

1-676

---

**செலான் வங்கி ப. வ. க.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறியீட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டது)

*1990 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 0380-01151894-001 மற்றும் 0380-01511875-001 (மாத்தளை கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ்,

செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2008.11.27 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாக வும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"மகரகமவில் N(PVS) 16131 என்ற குறிப்பீட்டு இலக்கத்தின் கீழ் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனியான எம்/எஸ். சந்தலங்கா டெய்றி பாம்ஸ் (பிறை) லிமிட்டெட் மற்றும் மகரகமவைச் சேர்ந்த பஸ்ரியன்கமகே சமந்த ரசத் சில்வா மற்றும் பஸ்ரியன் கமகே எட்வின் சில்வா 'கடனெடுத்தவர்கள்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ.க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஐ. எச். பி. டி. விஜேகோன் என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2005, யூலை 12 ஆந் தேதிய 3994 மற்றும் 3995 ஆம் இலக்க மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஜே. கே. நவரத்னவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, திசெம்பர் 27 ஆந் தேதிய 391 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2008, ஏப்பிறல் 10 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின் மீது எண்பத்திரெண்டு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து அறுநூற்றுத்தொண்ணூற்றெட்டு ரூபா இருபத்துமூன்று சதம் (ரூ. 82,89,698.23) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால், சொல்லப்பட்ட ரூ. 82,89,698.23 பணத்தொகையையும் 2008, ஏப்பிறல் 11 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தைந்து சதவீதப்படி (35%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 3994, 3995 மற்றும் 391 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான முதலாம், இரண்டாம் அட்டவணை களில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### முதலாம் அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில், தம்புள்ள செயலகப் பிரிவினுள் வகாபணஹ பள்ளேசீய பத்துவில் இப்பன்கட்டுவ கிராமத்தில் அமைந்துள்ள "நைகலவத்த" என்றழைக்கப்படும் காணியிலிருந்து இரண்டு ஏக்கர் ஒரு றூட் முப்பது பேர்ச்சஸ் (2ஏ. 1றூ. 30பே.) விஸ்தீரணம் கொண்டதாகப் பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். அனுரரத்னவால் தயாரிக்கப்பட்ட 2004.09.05 ஆந் தேதிய 2548 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A எனக் காட்டப்பட்டதுமான காணிப் பங்கீடு முழுவதும் அதன்கண்ணுள்ள தோப்புகள், கட்டடங்கள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட வரைபடத்தின்படி இதன் எல்லைகள் - வடக்கு : எஸ் எம். குணதாசவால் உரிமைகோரப்படும் தம்புள்ள விகாரைக் காணி ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு B ; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர், ஜீ. எஸ். கலகெதரவால் தயாரிக்கப்பட்ட 1982.09.04 ஆந் தேதிய 465 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1A இன் பகுதி ; மேற்கு : குருணாகலிலிருந்து தம்புள்ளைக்கான நெடுஞ்சாலை வீதிக்கான ஒதுக்கம். இது மாத்தளை காணிப் பதிவகத்தில் தொகுதி பக்கம் D 473/229 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்ட காணிப் பங்கீடானது மேலே சொல்லப்பட்ட இப்பன்கட்டுவவில் அமைந்துள்ள நைகலகலவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து (நில அளவையாளர் நாயகம் ஏ. பி. பைரஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1982.07.09 ஆந் தேதிய T. P. 87076 இல் காட்டப்பட்ட காணியின் ஒரு பங்கின் மீள் அளவிடும் உட்பிரிவாயுள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. எஸ். சமரசிங்கவால் தயாரிக்கப்பட்ட 1974.09.25 ஆந் தேதிய வரைபடம் இல. 122 இல் துண்டுகள் 1, 2, 3 மற்றும் 4 எனக் காட்டப்பட்டதுமான) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எஸ். கலகெதரவால் தயாரிக்கப்பட்ட 1982.04.09 ஆந் தேதிய 465 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1A இன் பங்கும் பகுதியுமாயுள்ளது. சொல்லப்பட்ட வரைபடத்தின்படி ஐந்து ஏக்கர் (5ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுள்ள இதன் எல்லைகள் - வடக்கு : எஸ் எம். குணதாசவால் உரிமைகோரப்படும் தம்புள்ள விகாரைக் காணி ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு 1B ; தெற்கு : ரத்து அக்காவால் உரிமைகோரப்படும் தம்புள்ள விகாரைக் காணி ; மேற்கு : குருணாகலிலிருந்து தம்புள்ளைக்கான நெடுஞ்சாலை வீதி. இது மாத்தளை காணிப் பதிவகத்தில் D 249/228 இல் பதிவுசெய்யப்பட் டுள்ளது.

### இரண்டாம் அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில், தம்புள்ள செயலகப் பிரிவினுள் வகாபணஹ பள்ளேசீய பத்துவில் இப்பன்கட்டுவ கிராமத்தில் அமைந்துள்ள "நைகலவத்த" என்றழைக்கப்படும் காணியிலிருந்து ஆறு ஏக்கர் மூன்று றூட் இருபத்தெட்டு பேர்ச்சஸ் (6ஏ. 3றூ. 28பே.) விஸ்தீரணம் கொண்டதாகப் பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். அனுரரத்னவால் தயாரிக்கப்பட்ட 2004.09.05 ஆந் தேதிய 2548 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு B எனக் காட்டப்பட்டதுமான காணிப் பங்கீடு முழுவதும் அதன்கண்ணுள்ள தோப்புகள், கட்டடங்கள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட வரைபடத்தின்படி இதன் எல்லைகள் - வடக்கு : எஸ் எம். குணதாசவால் உரிமைகோரப்படும் தம்புள்ள விகாரைக் காணி மற்றும் எஸ்ரேட் வீதி ; கிழக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எஸ். கலகெதரவால் தயாரிக்கப்பட்ட 1982.09.04 ஆந் தேதிய வரைபடம் இல. 465 இல் துண்டு 3C ; தெற்கு : ரத்து அக்காவின் காணி ; மேற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எஸ் கலகெதரவால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இல. 465 இல் துண்டு 1B மற்றும் துண்டு A. இது மாத்தளை காணிப் பதிவகத்தில் தொகுதி பக்கம் D 473/230 இன் கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்ட காணிப் பங்கீடானது மேலே சொல்லப்பட்ட இப்பன்கட்டுவவில் அமைந்துள்ள நைகலகலவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து (நில அளவையாளர் நாயகம் ஏ. பி. பைரஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1982.07.09 ஆந் தேதிய T. P. 87076 இல் காட்டப்பட்ட காணியின் ஒரு பங்கின் மீள் அளவிடும் உட்பிரிவாயுள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. எஸ். சமரசிங்கவால் தயாரிக்கப்பட்ட 1974.09.25 ஆந் தேதிய வரைபடம் இல. 122 இல் துண்டுகள் 1, 2, 3 மற்றும் 4 எனக் காட்டப்பட்டதுமான) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எஸ். கலகெதரவால் தயாரிக்கப்பட்ட 1982.04.09 ஆந் தேதிய 465 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1B இன் பங்கும் பகுதியுமாயுள்ளது. சொல்லப்பட்ட வரைபடத்தின்படி ஏழு ஏக்கர் இருபது பேர்சச்ஸ் (7ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுள்ள இதன் எல்லைகள் - வடக்கு : எஸ் எம். குணதாசவால் உரிமைகோரப்படும் தம்புள்ள விகாரைக் காணிகள் ;

கிழக்கு : துண்டு 3C ; தெற்கு : ரத்து அக்காவால் உரிமைகோரப்படும் விகாரைக் காணிகள் ; மேற்கு : துண்டு 1A. இது மாத்தளை காணிப் பதிவகத்தில் D 249/229 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எம். கே. பிரேமதிலக,
உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்.

1-710/4

---

**செலான் வங்கி ப. வ. க.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2008.11.27 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"சிலாபத்தைச் சேர்ந்த திரு. அளுத்கமகே கமில் சந்தன சில்வா மற்றும் அளுத்கமகே மக்ஸிமஸ் சில்வா என்பவர் 'கடனெடுத்தவர்கள்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ.க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு சுனேத்ரா என். பர்னாந்து என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, பெப்புருவரி 24 ஆந் தேதிய 173 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2008, சனவரி 31 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது ஏழு இலட்சத்து அறுபத்தோராயிரத்து அறுநூற்று ஐம்பத்தொன்பது ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 7,61,659.79) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால், சொல்லப்பட்ட ரூ. 7,61,659.79 பணத்தொகையையும் 2008, பெப்புருவரி 01 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தைந்து சதவீதப்படி (35%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 173 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் பதிவுப் பிரிவினுள், பிட்டிகல் கோறளே வடக்கின் முன்னேஸ்வரன் பத்துவில் சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவினுள் முகுனுவட்டவன கிராமத்தில் அமைந்துள்ள 'முகுனுவட்டவன வத்த' என்றழைக்கப்படும் அரச காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். குணசேகரவால் தயாரிக்கப்பட்ட 2000.11.18 ஆந் தேதிய 3414A இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப் பங்கு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகள் - வடக்கு : வரைபடம் இல. P.P.Pu 2926 இல் துண்டு 35 (சிலாபம் - குருணாகல் பிரதான வீதியிலிருந்து நெல்வயலுக்கான வீதி) ; கிழக்கு : கொடகும்புர வத்த ; தெற்கு : வரைபடம் இல. P.P.Pu 2926 இல் துண்டு 12 ; மேற்கு : வரைபடம் இல. P.P.Pu 2926 இல் துண்டு 35 (சிலாபம் - குருணாகல் பிரதான வீதியிலிருந்து நெல்வயலுக்கான வீதி). ஒரு றூட் முப்பத்திரண்டு பேர்ச்சஸ் (01. 1றூ. 32.0பே.) விஸ்தீரணமுள்ள இதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும். இது சிலாபம் காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் C 144/ 271 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி சபைத் தீர்மானம் பிரசுரிக்கப்படும் வேளையில் அதில் கையொப்பமிடுவதற்கு செலான் வங்கி ப. வ. க. உதவிப் பொது முகாமையாளர் - சட்டம் திரு. எம். கே. பிரேமதிலக அவர்களுக்கு அதிகாரமளிப்பதெனவும் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எம். கே. பிரேமதிலக,
உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்.

1-711/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.